

கூடிய வெப்பநிலை 28 °c

குறைந்த வெப்பநிலை 24 °c

மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.



உருவாகுவது உறுதி பக். 6



மாட்டோம் பக். 7



போட்டியின் முடிவுகள் பக். 22



அதிகூடிய ஏலம் பக். 23

உதயன்

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 067 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 19, சனி 01.02.2014

01 FEB 2014
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

## மன்னார் புதைகுழி தோண்டும் பணி இடைநிறுத்தம்



மீட்கப்படும் எலும்புக் கூடு

மன்னார்,பெப். 1
மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் அடுத்தகட்டத் தோண்டும் பணிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளன.
இந்த மனிதப் புதைகுழியில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு அளவீடு செய்யப்பட்ட மண்டையோடுகளை

21 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச விசாரணையில் மாற்றம் எதுவுமேயில்லை

## கூட்டமைப்பிடம் உறுதிப்படுத்தினார் நிஷா தேசாய் பிஸ்வால்

கொழும்பு, பெப்ரவரி 1
போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமெரிக்க உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், கடந்த இரண்டு ஆண்டுகளைப் போன் றல்லாமல் இம்முறை மிகக் கடுமையான பிரேரணை கொண்டு வருவதற்கு அமெரிக்கா இயன்றளவு முயற்சிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை நேற்றுக் கொழும்பில் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு நேற்று வருகை தந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோரைக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார்.
அமெரிக்கத் தூதரகத்தில் சுமார்

> “ போர்க் குற்றம் மற்றும் காணாமற்போனோர் தொடர்பில் இலங்கை அரசினால் கடந்த இரண்டு வருடங்களில் எந்த வொரு ஆக்கபூர்வமான விசாரணையும் முன்னெடுக்கப்படவில்லை.பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் சர்வதேச விசாரணையே ஒரே வழி.

21 ஆம் பக்கழ் பார்க்க

## நிஷா தேசாய் இன்று காலை யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப்.01
இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் யாழ்ப்பாணத்துக்கு இன்று காலை விசேட விமானம் மூலம் வருகை தரவுள்ளார்.
யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரும் அவர் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் பிரேரணை சமர்ப்பிக்கும் நோக்குடன், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின்

21 ஆம் பக்கம் பார்க்க

## வன்முறைகளில் ஈடுபடும் படைகளுக்குத் தண்டனை

### அமெரிக்க அதிகாரியிடம் கூறினார் ஹக்கீம்

யாழ்ப்பாணம், பெப், 01
இனவாதத்தைத் தூண்டும் விதத்தில் பேசப்படும் பேச்சுக்களைத் தண்டனைக்குரிய - பாரதூரமான குற்றச்செயலாக மாற்றுவதற்குச் சட்டம் இயற்றப்பட உள்ளது எனவும், பொது மக்கள் மீதான வன்முறைகளில் ஈடுபடும் படையினருக்கு எதிராகச் சட்டத்தின் மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலிடம் தெரிவித்தார்.
குற்றச் செயல்களை நீதிமன்றங்களில் வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கு அச்சம் காரணமாகத் தயக்கம் காட்டும் பாதிக்கப்பட்டவர்களையும்,

21 ஆம் பக்கம் பார்க்க

## உள்நாட்டு விவகாரத்தில் மூக்கு நுழைக்கிறது அமெ.

### நிஷாவிடம் நேரில் தெரிவித்தார் பீரிஸ்



அமைச்சர் பீரிஸிடம் நிஷா தேசாய்

கொழும்பு, பெப்.1
" போரின் வடுக்களை ஆற்றுவதில் இலங்கை வேகமாக செயற்படவில்லை. அத்துடன், பொன்னான வாய்ப்பை இலங்கை இழந்துவிடும் என்ற அச்சம் சர்வதேச நாடுகளின் மத்தியில் இருக்கின்றது.
இலங்கை தொடர்பான அமெரிக்காவின் செயற்பாடுகள் அடுத்தவர் விடயத்தில் மூக்கை 'நுழைப்பதாகவும், போதனை செய்வதாகவும்' இருக்கின்றது" என அரசு தெரிவித்துள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## திக்கம் சாராய வடிசாலை தென்பகுதி நிறுவனத்துக்கு

### 24 பணியாளர்கள் நேற்றுடன் வேலை இழப்பு

*வடமராட்சி, பெப்.1*
*திக்கம் பனம் சாராய வடிசாலையைத் தென்பகுதியிலுள்ள நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளில் பாரம்பரிய சிறுகைத் தொழில் அமைச்சு ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.*
*இதன் காரணமாகப் பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பின் பேரில் நேற்று வெள்ளிக்கிழமை முதல் இந்த வடிசாலை மூடப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு பணிபுரிந்த 24 பணியாளர்களையும் இன்று சனிக்கிழமை முதல் பணி*

21 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணையால் இந்தியாவுக்கும் பாதிப்பாம்

### அமெரிக்காவில் கூறினார் லலித் வீரதுங்க

கொழும்பு, பெப்.01
இலங்கைக்கு எதிராகச் சர்வதேச விசாரணை கோரினால் அது இந்தியாவையும் பாதிக்கும் என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அமெரிக்காவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. இந்த அமர்வில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை நிறைவேற்றப்படவுள்ளமை உறுதியாகிவிட்டது. இந்தப் பிரேரணையில், போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இதனைச் சமாளிப்பதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அங்கு வைத்துச் சர்வதேச ஊடக

21 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணை தேவை பிரி. எதிர்க்கட்சியும் விடாப்பிடி

கொழும்பு, பெப்.01
இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று பிரிட்டனின் எதிர்க்கட்சியும் கோரிக்கை விடுத்துள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிராகச் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமெனப் பிரிட்டனின் தொழிற்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான எட் மில்லிபாண்ட் தெரிவித்துள்ளார்.
பிரிட்டனிலுள்ள தமிழர் பேரவை மற்றும் குளோபல் தமிழ் போரம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இலங்கையில் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இராணுவ மயமாக்கல், சிங்கள மயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இறுதிக்கட்டப் போர் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டும் என்பதுடன் நீதி கிடைக்க வேண்டும் எனவும் சுட்டிக்

21 ஆம் பக்கம் பார்க்க

## முன்னறிவிப்பின்றி இ.போ.ச புறக்கணிப்பு பாடசாலை மாணவர்கள் நேற்று அந்தரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.01
முன்னறிவித்தல் எதுவும் இல்லாமல் நேற்று இ.போ.ச சாரதிகளும் நடத்துநர்களும் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்புக் காரணமாகப் பாடசாலைக்குச் சென்ற மாணவர்களில் பெரும்பாலானோர் வீடு திரும்ப முடியாமல் அந்தரித்துள்ளனர்.
இ.போ.ச. பருவகாலச் சீட்டுக்களைப் பெற்றிருந்த பாடசாலை மாணவர்கள் இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபடாமையால் தனியார் பஸ்களில் வீடு திரும்புவதற்குக் கையில் பணம் இல்லாமல் அந்தரித்தனர்.சிலர் பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கடைகளில் பணம் வாங்கியே வீடு வந்து சேர்ந்ததாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.
இ.போ.ச சாரதியும் நடத்துநரும் நேற்றுமுன்தினம் ஊர்காவற்துறையில் தனியார் பஸ்காரர்களால் தாக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்.ஆரியகுளம் பகுதியில் வைத்து நேற்றுக் காலையும் இ.போ.ச பஸ்

21 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நாவின் அறிக்கை தவறானது

கொழும்பு, பெப்.01
இறுதிக் கட்டப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படும் ஐ.நாவின் அறிக்கை தவறானது என்று எம்மால் தற்போது முன்

21 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய மீனவர்களின் கைது பேச்சுக்களை சீர்குலைக்கும்

## மன்மோகனுக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை,பெப். 01

இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு மீண்டும் கடிதம் எழுதியுள்ளார். இந்த நடவடிக்கை இலங்கை-இந்திய மீனவர்களிடையே முன்னெடுக்கப்படும் பேச்சுக்களைச் சீர்குலைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஜெயலலிதா

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுகின்றமைக்கு ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளார். இலங்கைக் கடற்படையால் கடந்த 29ஆம் திகதி கைது செய்யப்பட்ட 38 இராமேஸ்வரம் மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக் கடற்படை நள்ளிரவில் பிடித்துச் சென்ற மீனவர்களையும், அவர்களுடைய 6 விசைப்படகுகளையும் மீட்குமாறும் ஜெயலலிதா தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

மீனவர் பிரச்சினைக்குத் தூதரகங்கள் மூலம் பேசி நிரந்தரத் தீர்வு காணவேண்டும் எனவும் ஜெயலலிதா தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். (த)

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

இயக்கச்சி சந்திக்கு அருகில் உள்ள வீடொன்றினுள் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய, இளம் குடும்பஸ்தரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் திருமணம் செய்த இதே இடத்தைச் சேர்ந்த சக்திவேல் ரஜீவ்குமார் (வயது - 29) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்ததை அடுத்து பளைப் பொலிஸார் சடலத்தைக் கிளிநொச்சி மருத்துவமனையில் நேற்று மாலை 5 மணிக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைத்தனர். (த-400-9)

# தனிமையில் தமிழர்கள் ஜே.வி.பி குற்றச்சாட்டு

கொழும்பு,பெப். 01

போர் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசு போரில் வெற்றி பெற்றாலும், தமிழ் மக்களை வெற்றி பெறவில்லை.

மாறாக அவர்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர். தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வில்லை. காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில் எந்த தீர்வும் வழங்கப்படவில்லை என்று அனுரகுமார சுட்டிக்காட்டியுள்ளார்.

போர் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து சரியான நிலைப்பாட்டை அரசு எடுத்திருந்தால், வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டதைப் போன்ற பிரேரணைகள் தேவையற்றிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# நில அபகரிப்பை மேற்கொள்வதற்காகவே எமது பகுதியில் பொருத்தமற்ற பயிர்கள்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் விசனம்

யாழ்ப்பணம்.பெப். 01

நில அபகரிப்பை மேற்கொள்வதற்காகவே எமது பிரதேசத்துக்குப் பொருத்தமற்ற பயிர்களை நடுவதற்கான முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாகப் போர்த்தாக்கம் முடிவுற்ற பின்னர் பொருளாதார ரீதியான பின்னடைவை ஏற்படுத்துவதற்காகவே இத்தகைய திட்டங்கள் வடக்கு மாகாணத்துக்கு கொண்டு வரப்படுகின்றன என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன் தெரிவித்தார்.

முழங்காவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பப்பாசி மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முழங்காவில் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பப்பாசிப்பழம் எங்களைப் பொறுத்தவரையில் அதிகளவு தீண்டப்படாத பழமாகவே இருந்தது. ஆனால் தற்போது ஏற்றுமதிக்கான ஒரு சந்தை வாய்ப்புக் கிடைத்துள்ளது. தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்து வருகை தரும் பழங்களுக்குக் கொடுக்கின்ற முன்னுரிமையை உள்ளூரில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பழங்களுக்கு நாங்கள் கொடுப்பதில்லை.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய விவசாயிகள் மிகுந்த அனுபவமும் பயிற்சியும் கொண்டவர்கள். இன்று போர்ப் பாதிப்புக்களால் நலிவடைந்து இருக்கின்ற ஒரு சமூகமாக உள்ளனர். இவ்வாறான நிலையில் ஏற்றுமதியுடன் கூடிய பப்பாசிச் செய்கை ஆறுதல் தரக்கூடியதாக இருக்கும். எமது பிரதேசத்தில் இலாபமாக வளரக்கூடிய பொருத்தமான பயிர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் உற்பத்தியாளர்கள் ஒன்றினைந்து கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாகப் பழங்களை ஏற்றுமதி செய்ய வேண்டும்.

எமது பிரதேசத்தில் எந்தப்பயிரை நடுகை செய்யலாம் என்பது எமக்கே தெரியும். தீர்மானிக்க வேண்டிய உரிமையும் எங்களிடமே உள்ளது. சந்தனம், கரும்பு,இறப்பர் மரங்களை இந்த மண்ணில் நடுகை செய்யுமாறு நிலத்தைக் கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. போர்ப் பாதிப்புக்கு பின்னர் எங்களை நோக்கி பொருளாதார ரீதியான வலைப்பின்னல்கள் பின்னப்பட்டுக்கொண்டிருக் கின்றன.

இத்தகைய வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் அரசசார்பற்ற நிறுவனங்கள் வட மாகாண சபையுடன் கலந்தாலோசிக்காமல் எந்த ஒரு வேலைத்திட்டங்களையும் எங்களுடைய மண்ணில் மேற்கொள்வதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம்-என்றார். (த-14)

# அன்னா ஹசாரேயைப் போன்று இலங்கையிலும் போராட்டம்

## ஜே.வி.பி தெரிவிப்பு



ஆணைக்குழுவுக்குச் செல்லும் சுனில் ஹந்துன் நெத்தி

கொழும்பு,பெப். 01

இந்தியாவில் இலஞ்ச ஊழலுக்கு எதிராக அன்னா ஹசாரேயினால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தைப் போன்று இலங்கையில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்தார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவர் ஜகத் பாலபட்டபெந்தி மீதான விசாரணைகள் தாமதமாவதற்குக் காரணம் என்ன என்பது தொடர்பில் ஆராய்வதற்காக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தலைமையிலான குழுவினர் நேற்று இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்குச் சென்றனர்.

6 மாதங்களுக்கு முன்னர், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டபோதிலும் இதுவரை அது தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தப்படவில்லை என்று அவர் இதன்போது குறிப்பிட்டார்.

குறித்த ஆணைக்குழு பக்கச் சார்பின்றி விசாரணை நடத்துவதற்காக அதன் தலைவரைத் தற்காலிகமாக இடைநிறுத்தி விசாரணைகளை ஏன் முன்னெடுக்கவில்லை என்பதை அறியும் உரிமை பொதுமக்களுக்கு உள்ளதெனவும் ஹந்துன்நெத்தி கூறினார்.

இந்தியாவில் இலஞ்ச ஊழலுக்கு எதிராக அன்னா ஹசாரேயினால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தைப் போன்று இலங்கையில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராகவும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (த)

# குற்றவாளிகளின் கைவிரல் அடையாளம் கணினி மயம்

கொழும்பு,பெப். 01

இலங்கையில் குற்றவாளிகள் பட்டியலில் இருக்கும் சுமார் 5 லட்சம் பேரின் கைவிரல் அடையாளங்கள் கணினி மயப்படுத்தப்பட்டுச் சேமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் கூறுகின்றன.

இதன் மூலம் குற்றச் செயல்கள் இடம்பெறும் இடங்களில் அடையாளம் காணப்படும் குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்களைச் சில நிமிடங்களில் பரீட்சித்துப் பார்க்க முடியும் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகப் பொலிஸ் சான்றிதழைப் பெறும்போது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்வது இதன் மூலம் துரிதப்படுத்தப்படும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

மொறட்டுவ, கொழும்பு பல்கலைக்கழகங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனம், ஆதர் சி கிளார்க் மத்திய நிலையம் ஆகியவற்றின் உதவியோடு இந்தக் கைவிரல் அடையாளங்களைக் கணினிமயப்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (த)

# அமெரிக்காவின் பிரேரணை இன்னும் தயாராகவில்லை

கொழும்பு,பெப். 01

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையின் வரைவு இன்னும் தயாராகவில்லை என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பிரேரணை தொடர்பில் இலங்கை அரசுக்கு அமெரிக்கா தகவல் பரிமாறியுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அமெரிக்கா முன்மொழிந்த இரண்டு பிரேரணைகள், இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட பலம் மிக்க நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டன.

முன்னைய தீர்மானங்களில் இருந்தே புதிய பிரேரணை உருவாக்கப்படும் என்றும் அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் மேலும் கூறினார். (த)

# எரிபொருள் மானியம் வழங்குமாறு நீர்கொழும்பு மீனவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,பெப். 01

எரிபொருள் மானியம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நீர்கொழும்பு பிரதேசத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீர்கொழும்பு பிற்றிப்பன கொத்தலாவல பாலத்தின் களப்புப் பகுதியில் நேற்று ஒன்று கூடிய மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

மீனவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக தேவாலயங்களின் மதகுருமாரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக நீர்கொழும்பு பிரதான மீன் சந்தை நடவடிக்கைகள் நேற்று முற்றாக பாதிப்படைந்திருந்தன.

தமக்கு கடந்த 7 மாதங்களாக எரிபொருள் மானியம் வழங்கப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு மாற்று நிவாரணங்களை வழங்காது, எரிபொருள் மானியத்தை மட்டும் வழங்க மீன்பிடித்துறை அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மீனவர்கள் கோரியுள்ளனர். (த)

# ஆவா குழுவில் 8 பேர் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 01

யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் வாள்களுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 12 பேர் கொண்ட ஆவா கும்பலில் 8 பேர் யாழ். நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் தொடர்பில் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் செய்தியாளர் சந்திப்புகளில் கூறிவந்த நிலையில், நேற்று நீதிமன்றில் பொலிஸார் அவர்களின் விடுதலைக்கு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை. இதனால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இனிமேல் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டால் வழக்குத் தொடர்பில் தீர்ப்பு வழங்கப்படும் வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்படுவீர்கள் என்று நீதிமன்றினால் எச்சரிக்கை செய்யப்பட்டுத் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான ஒவ்வொரு ஆள் பிணையில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான ஆவா என்றழைக்கப்படும் நபர் உட்பட 3 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ. சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு வந்தன.

வாள்கள், கைக்குண்டு, இரும்பினாலான கூரிய ஆயுதங்கள் என்பவற்றுடன் அவர்கள் கடந்த ஜனவரி மாத ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதன்படி ஆவா என்றழைக்கப்படும் விநோதன் மற்றும் திவாகரன், பவிலன் ஆகியோருக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. விநோதனிடம் இருந்தே கைக்குண்டு மற்றும் 2 வாள்களை மீட்டதாகவும் ஏனையவர்களிடம் இருந்து ஒவ்வொரு வாள்களை மீட்டதாகவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர். அந்த 3 பேருக்கும் தனியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பின்னர் கைது செய்யப்பட்ட ஒருவருக்குத் தனியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர் கைது செய்யப்பட்ட மறுநாளே பிணையில் விடுவிக்கப்பட்டுவிட்டார்.

ஏனைய 8 பேருக்கும் எதிராகத் தனியே ஒரு வழக்கு என 3 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டுத் தொடர்பில் பொலிஸார் வழக்கு தாக்கல் எதுவும் செய்திருக்கவில்லை. அது தொடர்பில் தனியே வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது. 8 பேரும் நீதிமன்றினால் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் தொடர்பான வழக்கு எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான வி. திருக்குமரன், மு.றெமீடியஸ் மற்றும் சர்மினி விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (த-4)

# முழங்காவில் மக்களுக்கு பப்பாசி மரக் கன்றுகள்

*ஆஸி. அரசின் நிதி அனுசரணையில்*



*சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தேசியத்திட்ட இணைப்பாளர் நிகால் தேவகிரி பயனாளி ஒருவருக்கு பப்பாசி மரக்கன்றுகளை வழங்குகிறார்.*

யாழ்ப்பாணம்.பெப்.1
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்டத்தின் ஊடாக மக்களை வலுவூட்டல் செயற்திட்டத்தின் கீழ் ஏற்றுமதித்தரத்திலான பப்பாசிச் செய்கையை மேம்படுத்துவதற்காக கிளிநொச்சி மாவட்ட முழங்காவில் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆஸ்திரேலிய அரசின் நிதி அனுசரணையுடன் பப்பாசி மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முழங்காவில் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் அ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முழங்காவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு முதல் கட்டமாக 1500 மரக் கன்றுகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து கன்றுகளை எவ்வாறு நடுவது என்பது தொடர்பான செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தேசியத் திட்ட இணைப்பாளர் நிகால் தேவகிரி, வடமாகாண விவசாயப்பணிப்பாளர் எஸ்.சிவகுமார் உட்பட விவசாய அதிகாரிகளும் பயனாளிகளும் கலந்து கொண்டனர். (வ-14)

# ஆஸியின் திட்டங்கள் வடக்கில் வெற்றியளித்தால் மேலும் உதவி

*என்கிறார் சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தேசியத்திட்ட இணைப்பாளர்*

யாழ்ப்பாணம்.பெப்.1
வடமாகாணத்தில் ஆஸ்திரேலிய அரசின் நிதி உதவியுடன் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் வெற்றியளிக்கும் வேளையில் இன்னும் பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்க ஆஸ்திரேலிய அரசு தயாராகவுள்ளது. இதற்கு துறை சார்ந்த அதிகாரிகள் திட்டங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தேசியத்திட்ட இணைப்பாளர் நிகால் தேவகிரி தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்டத்தின் ஊடாக மக்களை வலுவூட்டல் செயற்திட்டத்தின் கீழ் ஏற்றுமதித்தரத்திலான பப்பாசிச் செய்கையை மேம்படுத்துவதற்காக கிளிநொச்சி மாவட்ட முழங்காவில் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு பப்பாசி மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முழங்காவில் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

ஆஸ்திரேலியா அரசின் நிதி அனுசரனையுடன்2010 ஆம் ஆண்டு தொடக்கம் வடமாகாணத்தில் குறிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்தத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து துறை சார்ந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மீன்பிடி, விவசாயம் கைத்தொழில், கூட்டுறவு, வியாபாரம் போன்ற துறைகளில் முழுமையான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 200 பயனாளிகளை அடிப்படையாகக் கொண்டு வர்த்தக ரீதியான, ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு 'ரெட்லேடி' என்ற இனப் பப்பாசிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. அந்தத் திட்டம் மிக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை மையமாகக் கொண்டு 200 உற்பத்தியாளர்களையும் ஒன்றிணைத்து பழ உற்பத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் ஊடாக பொதியிடல் நிலையம் ஊடாக பப்பாசிப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை 6 இலட்சம் கிலோ கிராம் பப்பாசிப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. உற்பத்தியாளர்கள் இதனூடாக 16 மில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுள்ளனர். சராசரியாக ஒருவர் 25 ஆயிரம் ரூபா தொடக்கம் 45 ஆயிரம் ரூபா வரை வருமானத்தை மாதாந்தம் பெற்று வருகின்றார்.

கிளிநொச்சி மாவட்டத்திலும் விவசாயம், மீன்பிடிக்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் வர்த்தக ரீதியான வேலைத் திட்டமாக அந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கிறோம்.

அதனைவிட கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப்பிரதேசத்தில் படகு கட்டும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற படகுகள் இங்குள்ள பிரதேச மக்களுக்கே உபயோகப்படுகின்றன.

அது தவிர 100 பயனாளிகளை உள்ளடக்கி பச்சை மிளகாய் உற்பத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்கு கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதற்கு காலநிலை மாற்றங்கள் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.

எனினும் மிளகாயைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்து உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு 15 மில்லியன்ரூபாநிதியில்களஞ்சியசாலை ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (வ-14)

" - "
**2011 ஆம் ஆண்டில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 200 பயனாளிகளை அடிப்படையாகக் கொண்டு வர்த்தக ரீதியான ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு 'ரெட்லேடி' எனும் பப்பாசிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது.**

# பிறருக்கு அடித்த குற்றம்; 25 பேர் கைது

யாழ்ப்பாணம், பெப்.1
பிறருக்கு அடித்த குற்றச் சாட்டில் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் கடந்த வாரம் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

"அனுமதிப்பத்திரமின்றி மது விற்பனை செய்த குற்றச் சாட்டில் 20 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச் சாட்டில் 6 பேரும் பொது இடத்தில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 6 பேரும் சந்தேகத்தின் பேரில் 7 பேரும் விபத்து ஏற்படுத்திய குற்றச் சாட்டில் 5 பேரும் திருட்டுக் குற்றச் சாட்டில் 7 பேரும் திருட்டுப்பொருள்களை வைத்திருந்த குற்றச் சாட்டில் ஒருவரும் சூழல் மாசு தொடர்பில் 2 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்" -என்றார். (வ-4)

# நிரந்தர மீன் சந்தை றக்கா வீதியில் அமைக்குக

*மாநகர சபை உறுப்பினர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், பெப்.1
யாழ்.நகரை அண்டிய றக்கா வீதியில் நுகர்வோரின் வசதி கருதி மீன் சந்தை ஒன்றை நிரந்தரமாக அமைப்பதற்கு மாநகர சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் அ.கொர்ணலியஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாநகர சபையின் கடந்த மாதாந்த கூட்டத் தொடரின் போது அவர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

றக்கா வீதியில் இளம் சிங்கம் சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள சிறிய கொட்டகையில் வைத்தே மீன் வியாபாரிகள் கடலுணவுகளை விற்பனை செய்கின்றனர். குறித்த இடத்தில் வைத்து மீன் விற்பனை செய்வதற்காக மாநகர சபை வியாபாரிகளிடம் வரி அறவிடுகின்றது.

எனவே மாநகர சபை நிரந்தரமாக மீன் சந்தை ஒன்றை அமைக்க வேண்டும். இதே வேளை குறித்த பகுதியில் மீன் வாங்க வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுவதாகவும் மாநகர சபை உறுப்பினர் சுட்டிக்காட்டினார். (வ-17)

" - "
**குறித்த இடத்தில் வைத்து மீன் விற்பனை செய்வதற்காக மாநகர சபை வியாபாரிகளிடம் வரி அறவிடுகின்றது.**

# காசோலை மோசடி இரு முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.1
வியாபார நோக்கில் காசோலை மோசடி இடம்பெறுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த வாரமும் இவ்வாறு 2 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள ஒரு வர்த்தகர் பொருள்களைப் பெற்று 2 லட்சத்து 14 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்து வங்கியில் பணம் வைப்பிலிடாது மோசடி செய்துள்ளார். இளவாலையைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு முறைப்பாடுசெய்துள்ளார்.

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள மற்றொரு வர்த்தகர் பொருள்களைப் பெற்று 2 லட்சத்து 22 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்துள்ளமை தொடர்பில் சித்தங்கேணியைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)

# 23 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கடந்த வாரம் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 1
யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் கடந்த வாரம் இடம்பெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் நகைகள் உட்பட சுமார் 23 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் ஜயதிலக தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.நகரில் வீடு உடைத்து 9 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்.அத்தியடியில் வீடு உடைத்து 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. யாழ். கொழும்புத் துறைப் பகுதியில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் குருநகரைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். கே.கே.எஸ். வீதியில் கடை உடைத்து 17 ஆயிரத்து 950 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இணுவில் மேற்கில் வீடு புகுந்து 2 லட்சத்து 33 ஆயிரத்து 431 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நீர்வேலி வடக்கில் சைக்கிளில் சென்ற பெண் அணிந்திருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்றவர்களே கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கோப்பாய் மத்தியில் வீடு புகுந்து பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சின்னாலடியில் வீட்டுக்கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்களால் 6 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் செல்லப்பட்டுள்ளன. இது தொடர்பில் காரைநகரைச் சேர்ந்தவர் முறைப்பாடு செய்துள்ளார். வரணியில் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டு பின்னர் மீட்கப்பட்டது.

மானிப்பாய் கோயில் வீதியில் அத்துமீறி வீடு புகுந்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்" என்றார். (வ-4)

# உணவகங்களில் நேற்று திடீர் சோதனை

யாழ்ப்பாணம், பெப்.1
நாட்டில் உள்ள அனைத்து உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் விற்பனை நிலையங்களில் நேற்று சுகாதாரத் திணைக்களத்தினர் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

ஜனவரி 31, பெப்.01 ஆகிய தினங்களில் அனைத்து வர்த்தக நிலையங்கள் மீதும் பரிசோதனை நடத்தி உணவுப் பொருள்களைப் பரிசோதனை செய்யுமாறு சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று திடீர் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

இன்றும் தொடர்ந்து பரிசோதனைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள களஞ்சியங்களில் பெருந் தொகையான திகதி காலாவதியான பொருள்கள் இனங்காணப்பட்டதை அடுத்து சுகாதார அமைச்சால் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வலி. [illegible] மேற்கு மற்றும் சாவ[illegible] சுகாதாரத் [illegible] ளால் நேற்று [illegible] யங்களில் [illegible] சென்று [illegible] கொள்ளப்பட்டன. [illegible]

" - "
**பெருந் தொகையான திகதி காலாவதியான பொருள்கள் இனங்காணப்பட்டதை அடுத்து சுகாதார அமைச்சால் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.**

# கேரளாவில் இலங்கை தூதரகம் திறக்கப்படும்

திருவனந்தபுரம், பெப்.1
இலங்கைக்கான புதிய துணைத் தூதரகம் கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் இம்மாதம் திறக்கப்பட உள்ள தாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.
இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா கடுமையான நிலைப்பாட்டை கடைப் பிடித்ததன் காரணமாக, இரு தரப்பு நல்லுறவில் ஓரளவு இழுபறி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதைச் சரி செய்யும் வகையில் திருவனந்தபுரத்தில் துணைத் தூதரகத்தைத் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இருதரப்பு நல்லுறவும் பலப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இந்த துணைத் தூதரகத்தின் முதன்மை அதிகாரி ஜோமன் ஜோசப்பின் நியமனத்துக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்துள்ளார்.
இதற்கான நியமன உத்தரவை ஜோமன் ஜோசப்பிடம் டில்லியிலுள்ள இலங்கைத் தூதர் பிரசாத் கரியவம்சம் ஒப்படைத்தார்.
திருவனந்தபுரத்தில் இப்போது ரஷ்யா மற்றும் மாலை தீவுகளுக்கான துணைத் தூதரகங்கள் மட்டுமே செயற்பட்டு வருகின்றன. இதனுடன் இலங்கை மற்றும் ஐக்கிய அரபு அமீரேட்டின் துணைத் தூதரகங்களும் சேர்வதால் அண்டை நாடுகளுடனான உறவு மேலும் வலுவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (வ)


வயல் காணிகளைத் துப்புரவு செய்வது தொடர்பாகக் கலந்துரையாடும் கூட்டமொன்றில் கலந்து கொண்டோர்.

# வயல் காணிகளைத் துப்புரவு செய்வது தொடர்பான கூட்டம்

*ஆனைவிழுந்தான்குளம் கிராமத்தில் இடம்பெற்றது*

அக்கராயன், பெப்.1
கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளம் கிராமத்தில் பற்றைகள் வளர்ந்துள்ள வயல் காணிகளைத் துப்புரவு செய்வது தொடர்பாகக் கலந்துரையாடும் கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றது.
ஆனைவிழுந்தான் குளம் முன்பள்ளியில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கிளி நொச்சி கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.தயாரூபன், அந்தப் பகுதி கிராம அலுவலர் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.
இந்தக் கூட்டத்தில் ஆனை விழுந் தான் குளத்தின் கீழ் 1985 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 400 ஏக்கர் வரையான காணியில் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதால் அதனைத் துப்புரவு செய்து பயிர்ச் செய்கைக்கு உட்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.
1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆனைவிழுந்தான் கிராமத்தில் தற்போது 365 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. ஆனால் தொழில் வசதிகள் இல்லாததால் கிராம மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
பற்றைகள் வளர்ந்துள்ள வயல் நிலங்களைத் துப்புரவு செய்து பயிர்ச் செய்கைக்கு உட்படுத்துவதன் மூலமாக பொருளாதார ரீதியில் இங்குள்ள குடும்பங்கள் பயன்பெற முடியுமெனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.
(க-18)

## பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய ஐவருக்கு அபராதம்

சாவகச்சேரி நீதிமன்றுக்கு முன்பாக ஏ-9 வீதியில் பொது மக்களுக்கு இடையூறு தரும் வகையில் சத்தமிட்ட வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஐந்து பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.
நீதிமன்றுக்கு முன்பாக இரவு வேளையில் இடையூறு தருவதாக நீதிமன்றப் பொலிஸார், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்ததை அடுத்து அங்கு வந்த பொலிஸார் ஐவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். குறித்த நபர்களுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஐந்து பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரியதை அடுத்து தலா 500 ரூபா அபராதம் விதித்தார். (வ-9)

## இலங்கைக்கு கஞ்சாவை கடத்த முயன்றவர் கைது

சென்னை, பெப்.1
தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு 60 கிலோ கஞ்சா போதைப் பொருளைக் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டின் கீழ் மீனவர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.
தமிழ்நாட்டுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப் படையில் பாம்பன் கடற்கரையில் வைத்து குறித்த மீனவர் கைதாகியுள்ளார்.
அவரது நாட்டுப் படகில் கஞ்சா போதைப் பொருளை மறைத்து வைத்து இலங்கைக்குக் கொண்டு செல்ல முனைந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
கஞ்சாப் பொதியை அவர் நடுக் கடலுக்கு கொண்டு சென்று அங்கு காத்திருக்கும் இலங்கையைச் சேர்ந்த முகவரிடம் கையளிக்க முயன்றுள்ளார். தமிழகப் பொலிஸார் சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
தமிழகத்தில் இருந்தே இலங்கைக்கு அதிகளவில் கஞ்சா கடத்தப்படுகிறது.
ஏற்கனவே கடந்த வருடம் இவ்வாறு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட நான்கு தமிழக மீனவர்கள் இன்றும் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இலங்கைத் தமிழருக்கு ஏன் குடியுரிமை வழங்கக்கூடாது?

*ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கேள்வி*

சென்னை, பெப்.1
இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை கொடுக்காமல் இருப்பது நியாயமல்ல என்று வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.
கோவையில் வாழும் கலை அமைப்பின் சார்பில், மூன்று நாள் நடக்கும் சத்சங்கம் நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.
இந்த நிகழ்வில் கலந்து கொள்ள அந்த அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கோவை சென்றார். இரண்டாவது நாளான நேற்று முன்தினம் மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்வில் அவர் கலந்து கொண்டார்.
அதன்பின் செய்தியாளர்களைச் சந்தித்தபோது,
இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவில் குடியிரிமை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் நடத்தி வருகிறோம். இதுவரை 10 லட்சம் பேரிடம் கையெழுத்துப் பெற்றுள் ளோம். ஒரு கோடி பேரிடம் கையெழுத்து பெற்று பிரதமரிடம் வழங்கத் திட்டமிட்டு இருக்கிறோம்.


ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

20 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை கொடுக்காமல் இருப்பது நியாயமல்ல. பலநாடுகளில் இருந்து வந்தவர்களுக்கு குடியுரிமை வழங்கி இருக்கும் நிலையில், இலங்கையில் இருந்து வந்தவர்களுக்கு ஏன் குடியுரிமை கொடுக்கக் கூடாது? இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (வ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.1
கரவெட்டி பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் பிரதேச மட்ட வருடாந்த விளையாட்டு விழா தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் பதிவு செய்த கழகங்களின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி கேட்டுள்ளார். (த-400)

# மோசமான வீதியால் அசௌகரியங்கள்

முல்லைத்தீவு, பெப்.1
முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயத்திலிருந்து மூன்றாம் யுனிற் சாளம்பன் குளம் வரைக்குமான வீதி புனரமைக்கப்படாததால் இதனூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர். மல்லாவியிலிருந்து யோகபுரம், 3ஆம் யுனிற், சாளம்பன்குளம், பாலியாறு ஊடாக பாண்டியன் குளம், நட்டாங்கண்டல், மூன்று முறிப்பு ஆகிய கிராமங்களுக்குச் செல்கின்ற குறித்த வீதி பாண்டியன் குளத்திலிருந்து சாளம்பன்குளம் வரைக்கும் மற்றும் மல்லாவிச் சந்தியிலிருந்து யோகபுரம் மகா வித்தியாலயம் வரைக்கும் புனரமைக்கப்பட்டுள்ள போதும் குறித்த பகுதி புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.
இதனால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டுவருகின்றனர். ஆகவே குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு இந்தவீதியைப் பயன்படுத்துபவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

## பாடசாலைக் கட்டடம் திறந்து வைப்பு

நெடுங்கேணி, பெப்.1
நெடுங்கேணி ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத்தை வவுனியா மாவட்ட அரச அதிபர் அ.ம.பந்துல ஹரிச்சந்திரா வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.
பாடசாலையின் அதிபர் கு.விமலேந்திரன் தலைமையில் கடந்த 30 ஆம் திகதி இடம் பெற்ற நிகழ்வில் கட்டடத்தை அதிபர் திறந்து வைத்தார்.
இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கு 59 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ப.கணேசலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-435)

## போட்டி ரத்து

யாழ்ப்பாணம், பெப்.1
பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இன்றும், நாளையும் நடைபெறவிருந்த சிரேஷ்ட வீரர்களுக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறமாட்டாது.
மேற்படி போட்டி எதிர் வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

## மரண அறிவித்தல்

### கொண்டு சண்முகம்



சாவகச்சேரி தேவாலய வீதியைச் சேர்ந்த கொண்டு சண்முகம் நேற்று (31.01.2014) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.
அன்னார் சீதாலட்சுமியின் அன்புக்கணவரும் சதீஸ்குமார் (சீதா ஜூவெல்லறி சாவகச்சேரி), சரேஸ்குமார், நாகநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிச்சந்திரனின் அன்பு மாமனும் யனுஷ்கா, மினோசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி, டச்சு வீதி,
சாவகச்சேரி. T.P : 077 6667771

தகவல்:
குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### பொன்னையா இராசதுரை



தோற்றம்
10 . 01 . 1933

மறைவு
02 . 01 . 2014

திதி : பிரதமை

அன்பான எம் அருமை அப்பாவே
ஆண்டு பல கடந்தாலும் மறவோம் நாம்
மீண்டும் ஓர் பிறப்பு இருக்குமானால்
மீளவும் எம்மிடமே வருமப்பா

அன்னாரின் இல்லத்தில் இன்று (01.02.2014) சனிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

585 சிங்கராஜா லேன்,
புதிய செம்மணிவீதி, கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

# கொடிகாமத்தில் புகைப் பரிசோதனை நிலையம்

தென்மராட்சி, பெப்.1

தென்மராட்சி கிழக்குப் பிரதேச வாகன உரிமையாளர்களின் நலன் கருதி இன்று தொடக்கம் வாகனப் புகைப் பரிசோதனை நிலையம் கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

பிரதி சனிக்கிழமைகளில் குறித்த நிலையத்தில் வாகனப் புகைப் பரிசோதனை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக சாவகச்சேரியில் இரு நிலையங்களில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் இப் பரிசோதனை இடம் பெற்று வந்தது. தென்மராட்சி கிழக்கு பிரதேசத்தில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து கொடிகாமத்தில் புகைப்பரிசோதனை நிலையம் அமைக்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



பாடசாலை மாணவர்கள் என்றால் அவர்கள் வீதியிலே பயணிக்கும்போது விபத்துக்கள் ஏற்படா? தமது முன்னிலையிலேயே தலைக்கவசம் இன்றி மாணவர்களை ஏற்றிச் செல்வதைக் கண்டும் காணாமல் நிற்கும் கடமையிலுள்ள பொலிஸார் ஒருவர். (வ-21)

# விசேட கல்வி வள நிலையம் வடமராட்சியில் அமைக்குக

*விசேட தேவையுடைய மாணவர் நலன்கருதி கோரிக்கை*

யாழ்ப்பாணம்,பெப்.01

வடமராட்சிப் பகுதியிலுள்ள விசேட தேவையுடைய மாணவர்களின் நலன்கருதி வடமராட்சியில் விசேட கல்வி வள நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி வள நிலையம் ஒன்று வடமராட்சிப் பகுதியில் இல்லாததால் குறித்த பகுதியைச் சேர்ந்த விசேட தேவையுடைய மாணவர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கல்வி வள நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு விசேட தேவையுடைய பிள்ளைகள் தினமும் தூர இடங்களுக்கு கல்வி கற்பதற்குச் செல்ல வேண்டியுள்ளதால் தமக்கு போக்குவரத்து உட்படப் பல்வேறு வழிகளில் பெருமளவு செலவு ஏற்படுவதுடன் தமது பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்தும் தமக்கு கவலை காணப்படுவதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மருதனார் மடத்திலுள்ள வாழ்வகம், கோண்டாவில் சிவபூமி இல்லம் போன்ற இடங்களுக்கு வடமராட்சியில் இருந்து தினமும் பல மாணவர்கள் சென்று வருகின்றனர்.

எனவே குறித்த மாணவர்களின் நலன்கருதி வடமராட்சிப் பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வளநிலையம் ஒன்றை அமைப்பதற்கு வடமராட்சி கல்வி வலயம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-400)

# பசுப்பால் உற்பத்தியை அதிகரிக்க ஊக்குவிப்பு

அச்சுவேலி, பெப்.1

செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பிறந்த பசுக் கன்றுகளை பராமரித்து பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு 10 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு உதவி வழங்கப்படுகின்றது. கன்று பிறந்து ஒரு மாத காலத்துக்குள்ளே சம்பந்தப்பட்ட பயனாளிகள் அது தொடர்பான பதிவுகளை தமது பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்- என்று யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இளம் பசுக்கன்றுகளை விரைவில் உருவாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பிறந்த பசுக்கன்று (நாகு) களுக்கு ஊக்குவிப்பு உதவி வழங்கப்படுகின்றது. நாம்பன் கன்றுகளுக்கு உதவி வழங்கப்பட மாட்டாது.

பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பணிப்பாளரின் 03/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை மறு அறிவித்தல் வரை நடைமுறையில் இருப்பதால் செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பசுக்கன்றுகளை பெற்றுக் கொண்ட பயனாளிகள் உரிய முறையில் பதிவு செய்து ஊக்குவிப்பு உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

பசுப்பால் உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் ஐந்து மாவட்டங்கள் பசுப்பால் உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டு விசேட ஏற்பாடுகளின் கீழ் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

இளம் பசுக்களை விரைவாக உருவாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் நான்கு கட்டங்களில் 10 ஆயிரம் ரூபா ரொக்கம் வழங்கப்படுகின்றது.

கன்றுகளின் வளர்ச்சி நிலை தொடர்பாக பிரதேச கால்நடை வைத்தியர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் மதிப்பீடு செய்து தெரிவிப்பதோடு ஊக்குவிப்பு உதவித் திட்டத்தில் உள்ளடக்கப்படும் கன்றுகளை தொடர் நிலையாக கண்காணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார். (வ-11)

“ _ ”

**இளம் பசுக்களை விரைவாக உருவாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் நான்கு கட்டங்களில் 10 ஆயிரம் ரூபா ரொக்கம் வழங்கப்படுகின்றது.**

# மரக்கிளைகள் வெட்டி வீழ்த்தப்பட்டதால் வாகனங்களில் பயணிப்போர் சிரமம்

யாழ்ப்பாணம், பெப்.1

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் வீதியோர மரங்களிலிருந்து இலங்கை மின்சார சபை ஊழியர்களால் வெட்டி வீழ்த்தப்பட்ட மரக்கிளைகளால் வாகனங்களில் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இது விடயமாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்த போதிலும் அக்கறை செலுத்தாததால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சரசாலை, மட்டுவில் மக்களும் வலிகாமம் பகுதிகளிலிருந்து வாகனங்களில் பயணிப்போரும் மட்டுவில் கல்வயல் ஊடாக சாவகச்சேரி வந்து செல்கின்றனர்.

மின்சார சபை ஊழியர்கள் மின்மார்க்கத்துக்கு இடைஞ்சலாக காணப்படும் மரக்கிளைகளை வெட்டிச் சாய்த்து விட்டுச் செல்கின்றனர். அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் தமது வேலிகளில் வெட்டி வீழ்த்தப்படும் மரக்கிளைகளை அப்புறப்படுத்துகின்ற போதிலும் குடியிருப்பு இல்லாத காணிகளில் வெட்டப்படும் மரக்கிளைகள், தென்னோலைகள் வீதியின் அரைவாசிப் பகுதியை ஆக்கிரமித்துக் காணப்படுகின்றன. இதனால் வாகனங்களில் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.



*வெட்டப்பட்ட மரத்தின் பகுதிகள் வீதியில்*

கடந்த வருடங்களில் மின்சார சபை ஊழியர்களால் வெட்டப்படும் மரக்கிளைகளையும் அந்தந்த வீட்டுக்காரர்களால் வெட்டப்படும் மரக்கிளைகளின் கழிவுகளை போடும் வேளையில் நகரசபை வாகனம் உடனுக்குடன் துப்புரவு செய்து வந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாதிருக்க மின்மார்க்கத்தில் இடைஞ்சலாகக் காணப்படும் மரக்கிளைகளை காணி உரிமையாளர்கள் வெட்டி விட்டால் மரக்கிளைகள் வெட்டுவதற்கு பணம் விரயமாவதைத் தடுக்க முடியும் என்றும் மக்கள் ஒத்துழைப்பு வழங்காததால் ஊழியர்கள் மூலம் மரக்கிளைகள், தென்னோலை ஆகியவற்றை வெட்ட வேண்டிய நிலை மின்சார சபைக்கு ஏற்படுவதாக மின்சார சபையினரும்,

மாதாந்த வேலைக் கிரமத்தின்படி வட்டாரங்கள் ஒதுக்கப்பட்டு சுத்திகரிப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் திடீரென வட்டார ஒழுங்கு மாற்றப்பட்டு சுத்திகரிப்பு தொழிலாளர்களும் வாகனங்களும் பயன்படுத்தப்படுவதால் ஏற்கெனவே ஒழுங்குபடுத்தப்பட்ட வட்டார வேலைகள் பாதிப்பு ஏற்படும்.

இதனால் அந்த வீதியில் உள்ள மக்கள் தமது வீதியில் காணப்படும் மரக்கிளைகளை வீதியோரத்தில் போடுமாறும் இடையிடையே வாகனத்தை அனுப்பி அகற்றப்படும் என்றும் நகரசபையினரும் தெரிவித்தனர். (வ-9)

# தொற்றா நோய் பரிசோதனையில் 50 இற்கு மேற்பட்டோர் பயன்

வலி. தென்மேற்கு, பெப்.1

தொற்றா நோய்கள் குறித்த பரிசோதனைகள் வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்தில் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டன. அங்கு கடமையாற்றும் முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட 50 பேர்கள் கலந்து கொண்டு இதன் மூலம் நன்மையடைந்தனர்.

தொற்றா நோய்கள் குறித்த பரிசோதனைகள் யாழ். மாவட்டத்தில் முதன் முதலாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியால் வலி. தென்மேற்கு பிரதேச செய லகத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட குறித்த பரிசோதனைகளின் போது அங்கு கடமையாற்றிய முப்பத் தைந்து வயதுக்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் உட்பட 50 பேர் பயனடைந்துள்ளனர்.

பரிதேனைகளின் போது உயர் குருதி அழுத்தம், கொலஸ்ரோல், நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் தொடர்பில் பரிசோதனைகள் இடம்பெற்றன. (வ-115-86)

# மீசாலை ரயில் நிலையத்தின் புனரமைப்பு எவர் பொறுப்பில்

தென்மராட்சி, பெப்.1

வடக்கு - தெற்கு இணைப்பு நட்புறவை வெளிப்படுத்தும் முகமாக தெற்குப் பகுதி மக்களால் மீசாலை ரயில் நிலையம் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டு இரண்டு வருடங்களுக்கு முன்னர் அங்கு சேதமடைந்திருந்த ரயில் நிலையக் கட்டடம் தென்னிலங்கை வாசிகளால் உடைக்கப்பட்டது.

இரண்டு வருடங்களின் பின்னர் தற்போது இந்திய ரயில் பாதை அமைப்போரால் புனரமைப்புக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீசாலை ரயில் நிலையம் அமைப்பதற்கு தென்னி லங்கை மக்களால் சேகரிக்கப்பட்ட நிதியில் புனரமைக்கப்படுகிறதா அல்லது ரயில் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய ரயில்வே பிரிவினரால் அமைக்கப்படுகிறதா என்று தெரியாமல் தாம் தவிப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-9)

“ _ ”

**ரயில் நிலையக் கட்டடம் தென்னிலங்கை வாசிகளால் உடைக்கப்பட்டது.**

## புல்லரின் தூக்குக்கு இடைக்கால தடை

புதுடில்லி, பெப்.1
கார்குண்டு வெடிப்புத் தொடர்பாக வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட தேவேந்தர் சிங் புல்லரின் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு உயர் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.
புல்லரின் கருணை மனு மீதான தாமதத்தை அடுத்து தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளின்போதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.
புல்லரின் மருத்துவ அறிக்கையை ஒருவார காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அவரது மனைவிக்குப் பணிக்கப்பட்டுள்ளதுடன், புல்லரின் கருணை மனு மீதான தாமதம் தொடர்பாக இந்திய மத்திய அரசு நீதிமன்றத்துக்கு விளக்கமளிக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ற)

## மக்களின் சமூகப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்

### *காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி கூறுகின்றார்*

புதுடில்லி, பெப்.1
நாட்டு மக்களின் சமூகப் பாதுகாப்பே முக்கியமானது. அதற்கான கட்டமைப்பு உறுதிப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி.
நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதை அடுத்துக் காங்கிரஸ் கட்சியைப் பலப்படும் நடவடிக்கைகளையும், பரப்பரை உத்திகளில் மாற்றங்களையும் ஏற்படுத்தி வருகின்றார் அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி. அதன் ஒரு நடவடிக்கையாக புதுடில்லியில் காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார். அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது,
"இவ்வாறான முயற்சிகள் மூலம் மக்களின் எண்ணங்களை அறிந்து கொள்ள முடியும். இதுபோன்ற நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடத்தப்படும். இவ்வாறு பெறப்படும் கருத்துக்கள் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்படும்.
கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும். ஏழை மக்களுக்கான நூறு நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் அதற்கான அடித்தளம் அமைத்துக் கொடுக்கப்படும். நாட்டு மக்களின் சமூகப் பாதுகாப்பே முக்கியமானது. அதற்கான கட்டமைப்பை உறுதிப்படுத்துவதில் காங்கிரஸ் கட்சி திடமாகச் செயற்படும்" என்று தெரிவித்துள்ளார்.



ராகுல் காந்தி

கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஒருவர், "மக்களின் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதில்லையே?" என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ராகுல் காந்தி, "காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரச்சினை குறித்தே விவாதிப்பார்கள்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## தனித் தெலுங்கானா உருவாகுவது உறுதி

### *காங்கிரஸ் பொதுச் செயலாளர் திக்விஜய் சிங் திட்டவட்டம்*

புதுடில்லி, பெப்.1
தெலுங்கானா தனி மாநிலம் உருவாவது உறுதி. அதற்கான சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திக்விஜய் சிங்.
ஆந்திர சட்ட சபையில் முதல்வர் கிரண் குமார் ரெட்டி கொண்டு வந்த தெலுங்கானா சட்த்திருத்துக்கு எதிரான தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அது மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசுக்குதர்மசங்கடமானநிலையை ஏற்படுத்தியுள்ளது.
இந்த நிலையில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், ஆந்திர மாநில பொறுப்பாளருமான திக்விஜய் சிங் புதுடில்லியில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,
"இது முன்பே எதிர்பார்க்கப்பட்டதுதான். அந்தத் தீர்மானத்தால் ஆந்திரத்தைப் பிரித்துத் தெலுங்கானா தனி மாநிலத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் பாதிக்கப்படாது. அரசமைப்புச் சட்டப்பிரிவு 3இன்படி மாநிலத்தைப் பிரிப்பது தொடர்பான சட்டத்திருத்தம் குறித்து சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்ட சபையில் விவாதம் நடத்தி குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதன் அடிப்படையில் ஆந்திர சட்ட சபையின் விவாதம் முடிவடைந்து குடியரசுத் தலைவருக்குச் சட்டத்திருத்தம் அனுப்பப்படவுள்ளது. அதனால் மாநிலத்தைப் பிரிக்கும் நடவடிக்கையில் ஒரு முக்கியமான பணி தற்போது நிறைவு பெற்றுள்ளது. சட்டசபையின் கருத்தை அறிவதற்காகத்தான் அந்தச் சட்டத்திருத்தம் அனுப்பப்பட்டது. அதன் மீது வாக்கெடுப்பு நடத்த அல்ல. சட்ட சபையில் முதலமைச்சர் கிரண் குமார் ரெட்டி கொண்டு வந்த தீர்மானத்தின் மீதுதான் வாக்கெடுப்பு நடந்துள்ளது. சட்டத் திருத்தத்தின் மீது நேரடியாக வாக்கெடுப்பு எதுவும் நடக்கவில்லை. எனவே மசோதா நிராகரிக்கப்பட்டது என்று கூறமுடியாது" - என்று தெரிவித்துள்ளார். (ற)


திக்விஜய் சிங்

## காந்தியின் கொள்கையை சீர்குலைக்கிறது பா.ஜ.க.

### *சோனியா காந்தி குற்றச்சாட்டு*

புதுடில்லி, பெப்.1
பாரதிய ஜனதாக் கட்சி மகாத்மா காந்தியின் கொள்கைகளைச் சீர்குலைக்கின்றது என்று விமர்சித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி.
"அனைத்து மக்களையும் ஒன்று படுத்தி நாட்டில் சகோதரத்துவத்தை உருவாக்கவே காங்கிரஸ் கட்சி தொடர்ந்து பாடுபட்டு வருகின்றது. ஆனால் பா.ஜ.க. மதவாதத்தை ஏற்படுத்தி மக்களைப் பிரித்து ஆட்சியைப் பிடிக்க எத்தனிக்கின்றது. காந்தியின் கொள்கைகளை காங்கிரஸ் கட்சி உறுதியாகப் பின்பற்றி வரும் நிலையில், பா.ஜ.க. அந்தக் கொள்கைகளை சீர்குலைத்து வருகின்றது" என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## பதவி விலகினார் உத்தர்கண்ட் முதலமைச்சர்


விஜய்பகுகுணா

டிகார்டுன், பெப்.1
உத்தர்காண்ட் மாநில முதலமைச்சர் விஜய் பகுகுணா தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். காங்கிரஸ் கட்சியின் மேலிடத்தின் விருப்பத்துக்கு அமைவாகவே அவர் பதவி விலகியுள்ளார் என்று கூறப்படுகின்றது.
அவரது பதவி விலகலை அடுத்து ஹரீஸ் ராவத், பிரிதாம் சிங் ஆகியோரில் ஒருவர் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று காங்கிரஸ் கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

## நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு வீழ்ச்சியே

### *மு.க.ஸ்டாலின் ஆரூடம்*

சென்னை, பெப்.1
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுக்குப் பெரும் வீழ்ச்சி காத்திருக்கின்றது என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின்.
திருச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,
"நாடாளுமன்ற தேர்தலுக்கு தயாராகும் வகையில் நடைபெறும் திருச்சி மாநில மாநாட்டில் அனைத்துத் தொண்டர்களும் பங்கேற்க வேண்டும்.
தி.மு.க. ஆட்சியில் தான் தமிழக மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் கிடைத்துள்ளன. தி.மு.க. ஆட்சியின் போது கொண்டுவரப்பட்ட புதிய தலைமைச் செயலகம் மற்றும் அண்ணா அறிவாலயம் உள்ளிட்ட பல திட்டங்களை அ.தி.மு.க. அரசு முடக்கியுள்ளது. ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களைப் பற்றிச் சிந்திக்கும் ஒரே தலைவர் கருணாநிதிதான் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. மக்களின் ஆதரவைப் பெற்று பெரு வெற்றி பெறும் "- என்று தெரிவித்துள்ளார். (ற)


## ஊழல் அரசியல்வாதிகளின் பட்டியல் வெளியிடப்பட்டது

### *அர்விந்த் கெஜ்ரிவால் அதிரடி*


அர்விந்த் கெஜ்ரிவால்

புதுடில்லி, பெப்.1
இந்திய அரசியலில் உள்ள ஊழல் தலைவர்கள் குறித்த பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளார் ஆம் ஆத்மியின் கட்சித் தலைவரும், புதுடில்லியின் முதலமைச்சருமான அர்விந்த் கெஜ்ரிவால்.
நேற்று பொதுமக்கள் முன்னிலையில் 'நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டியவர்கள் என்ற தலையங்கத்துடன் அவர் வெளியிட்டுள்ள பட்டியலில், சுரேஷ் கல்மாடி, நிதின் கட்காரி, சுஷில்குமார் ஷிண்டே, பிரபுல் பட்டேல், எடியூரப்பா, ஆனந்த்குமார், வீரப்ப மொய்லி, சிதம்பரம், குமாரசாமி, அழகிரி, வாசன், சல்மான் குர்ஷித், மாயாவதி, முலாயம் சிங், பரூக் அப்துல்லா, கபில் சிபல், சரத்பவார், ராஜா மற்றும் ராகுல் ஆகியோரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. (ற)


## ராகுலின் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்



புதுடில்லியில் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியின் இல்லத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சீக்கியர்களைப் பொலிஸார் தடியடி நடத்திக் கலைத்தனர். புதுடில்லியில் 1984ஆம் ஆண்டு நடைபெற்ற சீக்கியர் படுகொலைகளில் காங்கிரஸ் தலைவர்கள் சிலருக்கு தொடர்பு இருந்தமை உண்மை தான் என்று ராகுல் சில நாள்களுக்கு முன்னர் தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் தெரிவித்திருந்தார். அதையடுத்து அவரது அந்தக் கருத்தையே ஒப்புதல் வாக்குமூலமாக எடுத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அகாலி தளம் கட்சித் தலைவரும் பஞ்சாப் முதல்வருமான பிரகாஷ் சிங் பாதல் நீதிமன்றத்துக்குக் கோரிக்கை விடுத்திருந்தார். இந்தநிலையில் அதேகோரிக்கையை வலியுறுத்தி ராகுல்காந்தி வீட்டுக்கு முன்னால் ஏராளமான சீக்கியர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். வீட்டுக்குள் இருந்த பாதுகாப்புத் தடைகளை உடைக்க முற்பட்டதை அடுத்துப் பொலிஸார் அவர்கள் மீது தடியடி நடத்திக் கலைத்தனர். (ற)

## காங்கிரஸ் கட்சியை ஓரம் கட்ட முடியாது

சென்னை, பெப்.1
காங்கிரஸ் கட்சியை யாராலும் ஒதுக்கி ஓரங்கட்டிவிட முடியாது என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"காங்கிரஸ் கட்சியை யாரா[illegible]விட முடியாது. நாடா[illegible] தேர்தல் கூட்டணி [illegible] குறித்து பல்வேறு [illegible]களைச் சேர்ந்த [illegible]ளுடனும் பேச்சு [illegible] வருகின்றது. [illegible] போன்று [illegible]ணி ஒன்றை [illegible]ாளுமன்றத் [illegible]பெரும் வெற்றி [illegible] என்ற நம்பிக்கை [illegible]" என்று தெரிவித்[illegible] (ற)



## அபூர்வ வகை மீன்

உலகில் மிக அபூர்வமாகத் தென்படும் அரியவகை 'கண்ணாடி மீன்' நியூஸிலாந்தைச் சேர்ந்த ஒரு மீனவரின் வலையில் சிக்கியுள்ளது. நியூஸிலாந்தின் வடபகுதியில் உள்ள கரிகரி வளைகுடா பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஃப்ரேஸர் என்பவரின் வலையிலேயே இந்த மீன் சிக்கியுள்ளது. அதனை ஆய்வு செய்த கடல் உயிரியல் ஆய்வக அதிகாரிகள் பிடிபட்ட இந்த அரியவகை மீன், 'ஸல்பா மகியோா' என்ற இறால் வகை மீன் இனத்தைச் சேர்ந்தது என்றும், மிக அபூர்வமாகவே இவை கடலின் மேற்பரப்பில் தென்படும் என்றும் கூறுகின்றனர். முழுக்க முழுக்க கண்ணாடி போன்ற வடிவில் உள்ள இந்த மீனின் உடல் வழியாக ஊடுருவி, எதிர்ப்புறத்தில் உள்ள பொருள்களைத் துல்லியமாகப் பார்க்க முடிகிறது. (ற)

# இராணுவ நடவடிக்கையில் தீவிரவாதிகள் 40 பேர் சாவு

### பிலிப்பைன்ஸில் அதிரடி நடவடிக்கை

மணிலா, பெப்.1

இராணுவத்தினரின் தாக்குதலில் 40 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்என்றுபிலிப்பைன்ஸ் இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. தாக்குதலைத் தொடர்ந்து தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிராமங்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன என்றும் மேலும் கூறப்படுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அந்நாட்டு இராணுவச் செய்தித் தொடர்பாளர் கேணல் டிக்சன் ஹெர்மோசோ,

"தெற்கு மகுய்ன்டானாவ் மாகாணத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதையடுத்து. அங்குள்ள கிராம மக்களை பாதுகாக்க இராணுவத்தினர் எதிர் தாக்குதல் நடத்தினார்கள். தீவிரவாதிகள், மசூதி ஒன்றைச் சுற்றி வைத்திருந்த குண்டுகள் வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். 12 பேர் காயமடைந்தனர். தீவிரவாதிகள் தரப்பில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். இரு நாள்கள் நீடித்த இந்தத் தாக்குதலுக்குப் பின்னர் தீவிரவாதிகளின் பயிற்சித் தளமாகவும், வெடிகுண்டுகள் தயாரிக்கும் இடமாகவும் விளங்கிய இரு கிராமங்கள் மீட்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இராணுவத்தின் இந்தத் தகவலை மறுத்துள்ள தீவிரவாதிகளின் செய்தித் தொடர்பாளர் அபுமிஸ்ரி,

"இந்தத் தாக்குதலில் எமது அமைப்பில் எவரும் உயிரிழக்கவில்லை. 7 பேர் காயம் மட்டும் அடைந்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# தேர்தலைத் தடுக்க மாட்டோம்

### தாய்லாந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அறிவிப்பு

பெப்ரவரி, பெப்.1

நாளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைத் தடுக்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளனர் தாய்லாந்து அரசுக்கெதிராகப் போராட்டம் நடத்திவரும் தரப்பினர்.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள போராட்டக் குழுவின் தலைவர் சுதெப் தௌக்சுபென்,

"மக்களை வாக்களிப்பில் பங்கேற்க வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளோம். ஆனால் தேர்தலை தடுக்கப் போவதில்லை. அரசுக்கெதிராக மக்களைத் திரட்டவும், தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்று மக்களை வலியுறுத்தவும் பாங்ஹொக்கில் பிரமாண்டமான பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.



சுதெப் தௌக்சுபென்

நாளை நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை முக்கிய எதிர்க்கட்சி புறக்கணிப்பதாக அறிவித்துள்ள நிலையில், மீண்டும் தற்போதைய பிரதமர் யிங்லக் ஷினவத்ராவின் கட்சியே வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில்தேர்தலை முன்னிட்டு அந்த நாடுமுழு வதும் பெருமளவு பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

# இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்திய குண்டு மீட்பு

பெர்லின், பெப்.1

இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட 250 கிலோ எடை கொண்ட சக்திவாய்ந்த வெடிகுண்டு ஒன்று தற்போது வெடிக்காத நிலையில் கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டுள்ளது.

1939ஆம் ஆண்டு ஆரம்பமான இரண்டாம் உலகப் போர் 6 ஆண்டு காலம் நீடித்து 1945ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. அந்தப் போரின் பயன்படுத்தப்பட்ட சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் தற்போதும் ஜேர்மனியின் பல்வேறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் தற்போது கட்டடக் கட்டுமானப் பணிகளின் போது250 கிலோகிராம் எடை கொண்ட சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று வெடிக்காத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. அதையடுத்து சற்றுவட்டாரத்தில் இருந்த பெருந்தொகையான மக்கள் வெளியேற்றப்பட்டு அந்தக் குண்டு வெடிகுண்டு நிபுணர்களால் ஜேர்மனியின் வடகிழக்குப் பகுதிக்குநகர்த்தப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டது. (ற)

# செயற்கை விழித்திரைகள் மூலம் கிட்டியது பார்வை

### அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை

வொஷிங்டன், பெப்.1

கண்பார்வையற்ற இருவருக்கு செயற்கை விழித்திரைகளைப் பொருத்தி அவர்களுக்கு பார்வை கிடைக்கச் செய்து சாதனை புரிந்துள்ளனர் அமெரிக்க மருத்துவர்கள்.

மிக்சிகன் பல்கலைக்கழகத்தின் கெல்லாக் கண் மருத்துவமையத்தைச் சேர்ந்த திரன் ஜெயசுந்தரா மற்றும் டேவிட் என் ஸாக்ஸ் என்ற மருத்துவர்கள் விழித்திரை நோயால் பாதிக்கப்பட்ட இரு நோயாளிகளுக்கு இந்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தியுள்ளார்கள்.

தங்களின் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்துள்ளது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ஜெயசுந்தரா, நோயாளிகளின் முன்னேற்றமும் தங்களுக்குத் திருப்தியளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சிகிச்சை மூலம் அவர்கள் தங்கள் வீட்டில் சுதந்திரமாக நட மாடவும், மற்றவர்களைப் போல் பிற விடயங்களைப் பார்த்து மகிழ்ச்சியடையவும் முடியும் என்றும் அவர் குறிப் பிட்டார்.

இந்த செயற்கை விழித்திரையானது கடந்த ஆண்டுதான் அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் அனுமதியைப் பெற்றது. நோயாளி அறுவைச் சிகிச்சையிலிருந்து பூரணமாகக் குணமடைந்த பின்னரே இந்த விழித்திரையின் செயற்பாடு தொடங்கும். அதன்பின்னரே சுமார் ஒன்றிலிருந்து மூன்று மாத காலத்திற்கு புதிய பார்வைத் திறனுக்கான பயிற்சி அந்த நோயாளிகளுக்கு வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. (ற)

# அமெ. ஜனாதிபதித் தேர்தல்; ஹிலாரிக்கு பெரும் ஆதரவு

வொஷிங்டன், பெப்.1

2016ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டிடுவோர் பட்டியலில் ஹிலாரி கிளின்டனும் இடம்பிடித்துள்ள நிலையில் அவருக்கான ஆதரவு பெருகி வருகின்றது என்று கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

அந்நாட்டின் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக போட்டியிட வாய்ப்புள்ள கிரிஸ் கிரிஸ்டியை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு ஹிலாரியே சிறந்த தேர்வாக இருப்பார் என்று 'வொஷிங் டன் போஸ்ட்' பத்திரிக்கை நடத் திய கருத்து கணிப்பில் தெரிய வந்துள்ளது.



ஹிலாரி

2008 ஆம் நடந்த ஜனாதிபதி வேட்பாளருக்கான கருத்துக் கணிப்பில் நாடு முழுவதிலுமிருந்து அவருக்கு 18 மில்லியன் மக்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் தற்போது அவருக்கு மேலும் ஆதரவு பெருகி உள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால் அதே ஜனநாயக கட்சியிலிருந்து ஜோ பிட்டனும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ளார் என்று கூறப்படுகின்றது. அவருக்கும் ஹிலாரிக்கும் இடையே கடும் போட்டி நிலவி வருவதாகவும் கூறப்படுகிறது.

இவற்றையெல்லாம் மீறி அமெரிக்க ஜனாதிபதியாக ஹிலாரி [illegible] பட்சத்தில், அவர் 2017ஆம் ஆண்டு ஜனவரி [illegible] 69வது வயதில் [illegible] யை ஏற்பார். (ற)

# Manoj Express Services

## Domestic Chartered Flight Operater

நாம் தொடர்ந்து உங்களுடன் பல சேவைகளில் இணைகின்றோம். ஏற்கனவே 16 வருட உள்நாட்டுப் பயணிகள் விமான சேவையூடாக உங்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளோம்.

தற்போது உங்களுக்கு உங்கள் பிள்ளைகளுக்கு இளம் சமுதாயத்தினருக்கு விமான ஓட்டுனராக. (Pilot) பயிற்சி பெறுவதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.



நாம் செய்த சேவையின் நம்பகத் தன்மை



### Following developments in North Demand for air travel to Jaffna on the increase



**RAMANI KANGARAARACHCHI**

The demand for the domestic airline to travel to Jaffna is on the increase with new developments in the north. Manoj Express Services Jointly with Deccan Airline is prepared to increase the number of Flights to and for Jaffna. Shortly at competitive rates to meet this demand.Managing Director, Manoj Express Services S.Manoharan told Daily News Business.

He said there are about 9,000 people of various categories such as businessmen, tourists, NGO's, expatriates, government officials and the public travelling to Jaffna every month. The number of inquiries from businessmen, expatriates and tourist has also increased cosiderably which means we can expect a great deal of business once the war is over, he said.

Manoharan with Deccan charter fifty flights every month. "It is mere a service than a business because sometimes very poor people pawn their jewellery to pay for the tickets to transport dead bodies of relatives and atend funerals in Colombo.

We should be able to give some concessions to such people and make it more affordable. We hope to charter bigger aircraft in the future so passengers will benefit," he said. Manoharan has been in the travel business for the last ten years and stepped into domestic airline services two years ago.

He has sofar provided this service for over four hunderd thousand passangers and transported a large number of parcels.

The cost of a return ticket to Jaffna is around Rs.22,000 at present but it was only Rs.6,500 a few years ago according to Manoharan.

There were three domestic airlines earlier but only two now. Decan and Expo are operational at present.



முகாமைத்துவப் பணிப்பாளர், மனோஜ் எக்ஸ்பிரஸ்,
இல. 80/1-30, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 751 7019 / 077 500 2739 E-mail: manojtours@yahoo.com



(சி11363)(12.3.6.)

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்" இதற்கமைய யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரான குமாரசிங்கம் அருந்தவநாதன் ஆகிய நான் 2009.04.08ஆம் திகதிய 1596/17 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் 2014.02.16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பின்வரும் அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கமைய இக் கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு ( ¼ ) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
- அதில் தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களினால், (தவிசாளர்களினால்) கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்களும் அன்றைய கூட்டத்திற்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

### கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம் - 16.02.2014

| தொ. இல | கிளைகளின் பெயர் | கிளை | தவிசாளர் பெயர் | கிளைபொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01. | கல்வியங்காடு | 01 | திரு. அ. தயாளன் | ஞான பாஸ்கரோதய சனசமூக நிலையம், கல்வியங்காடு |
| 02. | திருநெல்வேலி | 02 | திரு. சி. சிறிதரன் | திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம் |
| 03. | பொற்பதி | 03 | திரு. இ. தயாகரன் | கொக்குவில் நாமகள் வித்தியாலயம் |
| 04. | நாகபூசனி | 04 | திரு. க. பாலகிருஷ்ணன் | கிளைக்கட்டடம் |
| 05. | கோண்டாவில் ஸ்ரேசன் | 05 | திரு. பொ. கோகுலன் | கிளைக்கட்டடம் |
| 06. | அன்னங்கை | 06 | திரு. இ. புவன்ராஸ் | கலைவாணி சனசமூக நிலையம் |
| 07. | மஞ்சத்தடி | 07 | திருமதி.எஸ்.எமல்டா | கிளைக்கட்டடம் |
| 08. | கோண்டாவில் மேற்கு | 08 | திரு.பா.சிறீக்குமார் | கிளைக்கட்டடம் |
| 09. | கொக்குவில் மத்தி | 09 | திருமதி.ச.தயாதேவி | கிளைக்கட்டடம் |
| 10. | மணியர்காடு | 10 | திருமதி ஞா.ஜெயமேரி கொன்சி | கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாலயம் |
| 11. | வேதக்கோயிலடி (அடைக்கலநாயகி) | 11 | திருமதி த. சுதாகரன் | கிளைக்கட்டடம் |
| 12. | கொக்குவில் அரசடி | 12 | திரு. க. சசிகரன் | கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம் |
| 13. | கொக்குவில் மேற்கு | 13 | திருமதி த. சிவகுமாரி | கிளைக்கட்டடம் |
| 14. | வண். வடமேற்கு | 14 | திரு. க. பிரதீபன் | கிளைக்கட்டடம் |
| 15. | இராசபாதை | 15 | திரு. பா. பாலவரதன் | கிளைக்கட்டடம் |
| 16. | கொக்குவில் கிழக்கு | 16 | திரு. க. கமலநாதன் | கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம் |
| 17. | கோண்டாவில் கிழக்கு | 17 | திரு. வ. விபுலன் | அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் |
| 18. | காளிகோவிலடி | 18 | திரு. க. நிலமன் | காளிகோவில் சனசமூக நிலையம் |
| 19. | கோண்டாவில் நாராயணா | 19 | திரு. த. பிரபாகரன் | நாராயணா சனசமூக நிலையம் |
| 20. | கோண்டாவில் வடமத்தி | 20 | திரு. தா. தவமன்னன் | தில்லையம்பதி சனசமூக நிலையம் |
| 21. | பரமேஸ்வராச் சந்தி | 21 | திரு. வி. ஜெயந்தன் | சிவசக்தி சனசமூக நிலையம் |
| 22. | திருநெல்வேலிச் சந்தி | 22 | திருமதி க. சித்திரகுமாரி | திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம் |
| 23. | சம்பியன் லேன் | 23 | திரு. நா. குமணதாசன் | வளர்மதி சனசமூக நிலையம் |
| 24. | பிரம்படி | 24 | திரு. க. திசாகரன் | பிரம்படி சனசமூக நிலையம் |
| 25. | முடமாவடி | 25 | திரு. பா. குருபரன் | ஞானவைரவர் சனசமூக நிலையம் |
| 26. | குமரகோட்டம் | 26 | திரு. ச. பாலகுமார் | குமரகோட்டம் சனசமூக நிலையம் |

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
27.01.2014

வீ.கே. அருந்தவநாதன்
கூ. அ. உ. ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

(C/11366)(10.6.3)

# மாங்குளம் பொதுச் சந்தையை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

*புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாங்குளம் பொதுச் சந்தையின் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் செயலாளர் எஸ். மிதுலைநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குட்பட்ட மாங்குளம் பொதுச் சந்தைக்குரிய நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படாமையால் உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப் படுத்துவதற்கோ தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கோ மக்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மாங்குளம் பொதுச் சந்தை, கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாங்குளம் சந்தியில் அமைந்திருந்தது. பின்னர் 1991 ஆம் ஆண்டு போரினால் முழுமையாக அழிவடைந்தது. அதன் பின்னர் தற்காலிகக் கொட்டகையில் மீள ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1998 ஆம் ஆண்டு மீண்டும் அழிவடைந்து. பின்னர் 2000 ஆம் ஆண்டு மீள ஆரம்பிக்கப்பட்டு அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டு மூன்றாவது தடவையாக அழிக்கப்பட்டது. கடந்த 2010 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியமர்ந்த போதிலும் இன்று வரை குறித்த சந்தை இயங்காத நிலையே காணப்படுகின்றது.

இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் மிதுலைநாதனிடம் கேட்டபோது, மாங்குளம் பகுதியில் புதிய சந்தை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2012 ஆம் ஆண்டு 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலேயே சந்தையை அமைப்பதற்குரிய செயற்பாடுகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (க-55)



நேற்றுமுன்தினம் கற்சிலைமடு அ.த.க. பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வுக்கு முன்பதாகவே அங்கு திடீரென வருகைதந்த வடமாகாண முதலமைச்சரான க.வி.விக்னேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான திருமதி மேரி கமலா குணசீலன், வீ.கனகசுந்தரசுவாமி ஆகியோர் வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

# எல்லைக் கிராமங்களுக்கு சென்று பார்வையிடுங்கள்

*முதலமைச்சரிடம் கோருகிறார் பிரதி அவைத் தலைவர்*

முல்லைத்தீவு, பெப்.1

வடமாகாண முதலமைச்சர் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று அங்கு மக்கள் படுகின்ற அவலங்களை நேரடியாகப் பார்வையிடுவதுடன் அவர்களின் தேவைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு வடமாகாண முதலமைச்சரிடம் வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெயநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

முல்லைத்தீவு கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நேற்றுமுன்தினம் திடீரென வருகை தந்த முதலமைச்சரைச் சந்தித்த போதே முல்லைத்தீவு எல்லைக் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று மக்கள் படும் அவலங்களையும் தேவைகளையும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் பார்வையிட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். நேற்றைய தினம் நடைபெறவிருந்த பாடசாலையின் கட்டடத் திறப்பு விழாவுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாத காரணத்தால் நிகழ்வுக்கு முன்பதாகக் காலை வேளையில் பாடசாலைக்கு வருகை தந்து முதலமைச்சர் பாடசாலையின் தேவைகள், அங்கு நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிந்து கொண்டார்.

இதே நேரத்தில் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெயநாதன், முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர்களான வீ.கனகசுந்தரசுவாமி, மேரிகமலா குணசீலன் ஆகியோரும் முதலமைச்சருடன் சென்றிருந்தனர்.

இதேவேளை அங்கு நின்ற மக்கள், பிரதி அவைத் தலைவரிடம் தெரிவிக்கையில்; தாங்கள் ஓர் இடத்தில் எல்லோரும் ஒன்றுகூடும்போது புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்படுவதாகவும், இதனால் அவர்களிடம் தெரிவித்த பின்பே பயத்தின் மத்தியிலும் தமது செயற்பாடுகளை தொடர முடிவதாகவும், தமது பேச்சுச் சுதந்திரமும் நடமாடும் சுதந்திரமும் பறிக்கப்படுவதாகவும் முறையிட்டனர். (க)

## கிளிநொச்சி டிப்போவிலிருந்து இயக்கப்படாத பஸ் சேவை

*கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவுக்கானது*

அக்கராயன், பெப்.1

கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி டிப்போவிலிருந்து புதுக்குடியிருப்பு வரைக்கும் இரண்டு பஸ் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. இதனை முல்லைத்தீவு வரை நீடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லையெனக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் கிளிநொச்சி - பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வரைக்கும் தனியார் பஸ்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் டிப்போக்களைச் சேர்ந்த பஸ்கள் உட்பட 35 பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் கிளிநொச்சி டிப்போவிலிருந்து முல்லைத்தீவுக்கு ஒரு சேவை கூட அனுமதிக்கப்படவில்லை.

இது தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபரான திருமதி றூபவதி கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; இது தொடர்பாகத் தமக்கு முறைப்பாடு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும், இந்நிலையில் தம்மால் மேற்கொண்டு எதனையும் தெரிவிக்க முடியாது என்றும் தெரிவித்தார். (க-55)



*வங்கி கட்டடத்தை அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.*

## ஜெயபுரத்தில் வங்கிக்குரிய கட்டடத்தை அமைக்கும் பணி

*வாழ்வின் எழுச்சி வங்கிக்கு உரியது*

அக்கராயன், பெப்.1

கிளிநொச்சி ஜெயபுரம் கிராமத்தில் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) வங்கிக்குரிய கட்டடத்தை அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

25 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டட வேலைகள் இடம்பெற்று வருகின்றன. சமுர்த்தி அதிகார சபை வாழ்வின் எழுச்சி திணைக்களத்துக்குள் உள்வாங்கப்பட்ட பின்னர் சமுர்த்தி வங்கிகள் வாழ்வின் எழுச்சி வங்கிகள் என்ற பெயரில் இயங்கி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமமான ஜெயபுரம் கிராமத்தில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு புதிய அலுவலகங்கள், மருத்துவமனை என்பன உருவாக்கப்பட வேண்டிய அவசியம் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

## திருநகர் பொது மயானத்துக்கு சுற்று மதில்

கிளிநொச்சி, பெப். 1

கிளிநொச்சி திருநகர் பொது மயானத்தைச் சுற்றிவர மதில் அமைப்பதற்கென சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

புனரமைப்புக்கும் மேம்பாட்டுக்குமான மக்கள் சபை என்ற பெயரில் இந்தச் சபை உருவாக்கப்பட்டுள்ளது. இரண்டரைக் கிலோ மீற்றர் சுற்றளவைக் கொண்ட இந்த மதிலை அமைப்பதற்கு 50 லட்சம் ரூபா செலவு செய்யப்படவுள்ளது. இதற்கென கரைச்சிப் பிரதேச சபையினால் 10 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

மீதித் தொகை மக்களின் பங்களிப்பாக இருக்கும். புனரமைப்புக்கும் மேம்பாட்டுக்குமான சபையின் தலைவராக கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசாவும் செயலாளராக அ.வேளமாலிகிதன். பொருளாளராக கு.பகீரதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (க-18)

# வவுனியா உணவகங்களில் தொடர் பரிசோதனைகள்

*சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் லவன் தெரிவிப்பு*

வவுனியா, பெப்.1

வவுனியா மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் உள்ளமை கண்டு பிடிக் கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.லவன் தெரிவித் துள்ளார்.

வவுனியா மாவட்டதைப் பொறுத்தவரை மக்கள் போரினால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்துள்ளனர். இவர்கள் தமது இயல்பு வாழ்க்கையைத் தற்போது ஆரம்பித்துள்ளார்கள். இந்த நிலையில் அவர்களுக்குத் தரம் குறைந்த உணவுப் பொருள்களை விற்பனை செய்து அவர்களை மீண்டும் துன்பத்தில் ஆழ்த்துவது வேதனைக்குரியது.

இந்த நிலையில் நாம் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் போன்றவற்றைப் பரிசோதனை செய்து வருகின்றோம். பல வர்த்தக நிலையங்களில் பாவனைக்கு உதவாத பொருள்கள் விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடிந்தது.

மேலும் கடந்த 28 ஆம் திகதி வவுனியா, குருமன்காடு பகுதியில் குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் ஏனையவர்கள் பாவிக்கும் பால்மா வகைகளை விநியோகம் செய்யும் நிறுவனத்தின் வாகனம் ஒன்றை மறித்துப் பரிசோதனை செய்த போது வர்த்தக நிலையங்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு பல பால்மாப் பெட்டிகள் காலாவதியான நிலையில் எடுத்துச் செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கூடுதலாக குழந்தை களுக்கான பால்மா வகைகள் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

எனவே குழந்தைகளுக்கு இவ்வாறான பால்மா வகைகளை வழங்கினால் என்ன ஏற்படும் என்பதை ஒவ்வொரு நிறுவனமும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இதேவேளை பொருள்களை வாங்குபவர் கள் பொருள்களின் பாவனைக் காலத்தை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

இதேவேளை உணவகங்களுக்கும் சென்று அங்கு உணவு தயார் செய்யப்படுகின்ற இடங்களின் துப்புரவு, உணவு வைக்கப்படும் இடங்கள் என்பன தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு உணவகங்களின் உரிமையாளர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-421)

## வீடுகளில் வசிக்காதவர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

*கரைச்சிப் பிரதேச செயலர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.1

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்ட நிலையில் அந்த வீடுகளில் வசிக்காத குடும்பங்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாக கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்தார்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டன. ஆனால் இந்த நிரந்தர வீடுகளில் குடும்பங்களின் உறுப்பினர்கள் வாழ்வதில்லை என்ற தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த நிலையில் எமது பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டும் அந்த வீடுகளில் வசிக்காத குடும்பங்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. நிரந்தர வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு போட்டி போட்ட சில குடும்பங்கள் வீடுகளை அமைத்துவிட்டு தற்போது அந்த வீட்டுடன் காணியையும் விற்பதற்கு முயற்சிப்பதாக அறிகின்றோம். அவ்வாறு ஒருவரும் செய்ய முடியாது. எமது பிரதேச செயலர் பிரிவில் காணிகளை யாரும் விற்ப தற்கு முனைவதாக மக்களுக்குத் தெரிய வந்தால் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கும்படியும் அவர் தெரிவித்தார். (க-18)

# கிழக்கில் தொடர்ந்து கொட்டுகிறது மழை

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு; பொருள்கள் விலை உயர்வு



மகாத்மா காந்தி அடிகளாரின் 66 ஆவது பிறந்த தின நிகழ்வு வியாழக் கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்தார்.

அம்பாறை.பெப்.1

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஒருவார காலமாகப் பெய்துவரும் கடும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மழை தொடர்ந்தும் பெய்த வண்ணமிருப்பதால் அன்றாடத் தொழில்கள் முடக்கப்பட்டுள்ளதுடன், கூலித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பொருளாதார நெருக்கடிகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை கடல் மீன்பிடிக்குப் பெயர் பெற்ற கல்முனைப் பிராந்தியத்தில், மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மீனுக்குப் பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இதனால் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்படும் மீன்களுக்குப் பெரும் கிராக்கியும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது.

நன்னீர் மீனினங்களின் விலையும் உயர்ந்துள்ளதுடன் அத்தியாவசியப் பொருள்களுக்கும் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

மழை வெள்ளத்தால் பல பிரதேசங்களின் வடிகாலற்ற உள்ளூர் வீதிகளில் பயணம் செய் வதிலும் மக்கள் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

விவசாய மாவட்டமான அம்பாறை மாவட்டத்தின் சில முக்கிய விவசாயப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட பெரும்போக நெல் அறுவடை மழையால் தடைப்பட்டுள்ளது.

முற்றி விளைந்த நெற் பயிர்கள் மழை தொடருமானால் பாதிப்புற்று நட்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலையேற்படலாம் என்று விவசாயிகள் அச்சமும், கவலையும் தெரிவிக்கின்றனர். (ச-30)



அம்பாறை மாவட்டத்தில் தொடரும் அடை மழையால் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பராமரிப்பிலுள்ள நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை வீதியில் நீர் தேங்கி போக்குவரத்துச் செய்வது சிரமமாகக் காணப்படுகின்றது.

# பெரிய மூங்கில் படகு கிழக்கில்



காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரை பிரதேசத்தில் மியன்மார், தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகளுடைய படகமைப்பைக் கொண்ட பெரிய மூங்கில் படகொன்று கரையொதுங்கியது.

மட்டக்களப்பு.பெப்.1

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி, ஏத்துக்கால் கடற்கரைப்பிரதேசத்தில்நேற்று வெள்ளிக்கிழமை காலை சுமார் 30 அடிக்கு மேல் நீளமான பெரிய மூங்கில் படகொன்று கரையொ துங்கியுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மூங்கில் படகை கரைக்கு எடுப்பதற்கான நடவடிக்கையில் காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர் தலைமையில் காத்தான்குடி நகரசபை உறுப்பினர்கள், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பரட், சமூக மதிப்பீட்டுக்கான அமைப்பின் தலைவர் இல்மி அஹமட் லெவ்வை மற்றும் மீனவர்கள் ஈடுபட்டனர்.

இந்த மூங்கில் படகு விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர்டொமின்கோ ஜோர்ஜ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கை யில் :-

கரையொதுங்கிய இந்தப்படகில் மனிதர்கள் எவரும் இருக்கவில்லை.

இந்தப்படகு கடற்றொழில் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துக்குப் பாரப்படுத்தப்பட்டது.

பின்னர் காத்தான் குடி நகர சபை அதனை தங்களிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் நாங்கள் இந்தப் படகை மக்களின் பார்வைக்காக வைத்துள்ளோம்.

இந்தப் படகு மியன்மார், தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகளுடைய படகமைப்பைக் கொண்டது. நங்கூரம் இடப்பட்டிருந்த நிலையில் தற்போதைய காலநிலை மாற்றத்தால் அறுந்ததால் ஆழ்கடலுக்கு வந்த இப்படகு பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காரணமாக கிழக்குப் பகுதியில் கரையொதுங்கி உள்ளது - என்றார். (ச)

# தமிழரசு கட்சியின் அலுவலகம் திறப்பு

மட்டக்களப்பு மாவட்ட மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் இலங்கை தமிழரசுக் கட்சியின் அலுவலகத்திறப்பும், ஆரம்பப் பொதுக் கூட்டமும் புதன் கிழமை வவுணதீவு, பருத்திச்சேனை கிராமச் சங்க முன்றலில் நடைபெற்றது.

வவுணதீவு பிரதேசத்துக்கான இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவராக த.அழகரெத்தினம், செயலராக இ.நாகலிங்கம், பொருளாளராக சி.கிருஸ்ணகுமார், உப தலைவராக ச.மோகன், உப செயலராக வி.யோகேஸ்வரன் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள் 21பேரும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர். (ச-



# அடுத்த ஜெனிவாத் தீர்மானத்தை அரசு தனித்தே எதிர்கொள்ள நேரிடும்

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு,பெப்.1
ஜெனிவாவில் இலங்கை மீது கொண்டு வரப்படவுள்ள புதிய தீர்மானத்தை அரசு தனியாகவே எதிர் கொள்ள நேரிடும்.
இலங்கையில் நடந்துள்ளதாகக் கூறப்படும் போர்க்கால குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாணசபை அண்மையில் நிறைவேற்றிய தீர்மானம் அரசமைப்புக்கு முரணானது.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.
கொழும்பில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்
சர்வதேச தலையீட்டை கோருவதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வடக்கு மாகாண சபைக்கு அரசமைப்பின்படி அதிகாரம் இல்லை.
போரின் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதாக அரசு சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதபடியாலேயே, வடக்கு மக்கள் தங்களின் கருத்தை தீர்மானமாக நிறைவேற்றியிருக்கிறார்கள்.
போர் முடிந்த பின்னர் வடக்கு மக்களுக்காக அரசு என்ன செய்ய வேண்டும் என்று எமது நாட்டின் எல்.எல்.ஆர்.சி . அறிக்கை பரிந்துரை செய்திருக்கும் போது, அவை தொடர்பில் எமது நாட்டின் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சர்வதேச சமூகத்துக்கு பல்வேறு உறுதி மொழிகளை வழங்கிவிட்டு அவற்றை நிறைவேற்றாமல் இருக்கின்றனர்.



விஜேதாஸ ராஜபக்ச எம்.பி

வடக்கின் அபிவிருத்தியே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்று அரசு காட்ட முயல்வதாகவும், தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் சிலரைக் கொண்டு சென்று, வடக்கு மக்கள் அரசுடன் தான் இருக்கிறார்கள் என்று சர்வதேசத்துக்கு இந்த அரசு காட்டப் பார்க்கின்றது .
இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணையை நடத்த ஐ.நா. தலைமைச் செயலர் பான் கீ மூனுக்கு அதிகாரம் அளிப்பதாக அரசு ஏற்கெனவே உடன்பட்டிருந்தது.
அதனைப் பல்வேறு இராஜதந்திர தகவல் பரிமாற்றங்கள் மூலம் அரசு உறுதி செய்திருந்தது.
இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையே நடந்துள்ள நேரடியான தகவல் பரிமாற்றங்களையும் அரசு வழங்கிய உறுதிமொழிகளையும் அடியொற்றியே இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணை ஜெனிவாவில் விவாதத்துக்கு வருகிறது. அதில் நாட்டின் எதிர்க்கட்சிகளுக்கு பங்கு இல்லை .
எனவே, ஜெனிவாவில் இலங்கை மீது வரவுள்ள புதிய தீர்மானத்தை அரசு தனியாகவே எதிர்கொள்ள நேரிடும் - என்றார். (ச)



உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள உகண்டா நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஒடொங்கோ ஜேஜே பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இதன்போது உகண்டா பாதுகாப்பு அமைச்சருக்கு விசேட ஞாபகச் சின்னம் ஒன்றையும் வழங்கினார்.

# பழுதடைந்த அரிசி சிக்கியது

கொழும்பு, பெப்.1
காலாவதியாகி பழுதடைந்து புழுக்களுடன் கூடிய 85 ஆயிரம் கிலோகிராம் நாட்டரிசியை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் வெயாங்கொடை உணவு களஞ்சிய சாலையொன்றிலிருந்து நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.
இதன் மொத்த பெறுமதி 51 லட்சமாகும். (ச)

# அனைத்து இடங்களிலும் உணவகங்கள் சோதனை

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,பெப்.1
நாடளாவிய ரீதியில் உணவகங்களை சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இதன் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் உள்ள உணவகங்கள், உணவு உற்பத்தி நிலையங்கள், பேக்கரிகள் என்பன சோதனையிடப்பட்டு வருகின்றன என்று சுகாதார சேவைகளின் பணிப்பாளர் பாலித்த மஹீபால சுட்டிக்காட்டினார்.
நுகர்வோருக்கு சுகாதாரமான உணவைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறினார்.
சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சுக்கள் மற்றும் கொழும்பு மாநகர சபை ஆகியன ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் இந்தச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றன என்று அவர் கூறினார்.
சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் உட்பட 1700 இற்கும் அதிகமானவர்கள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# புற்றுநோயாளர் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு

## சுமார் 10,000 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.1
இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது. அதற்கமைய வருடாந்தம் புற்றுநோய் சிகிச்சைகளுக்காக 25 ஆயிரம் பேர் புதிதாகத் தம்மைப் பதிவு செய்து கொள்கின்றனர் என்று சுகாதாரக் கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது.
இவர்களுள் ஆண்டு தோறும் சுமார் 10 ஆயிரம் பேர் புற்றுநோயினால் உயிரிழந்துள்ளனர் என்று அலுவலகத்தின் வைத்திய அதிகாரிகள் கூறினர்.
இதேவேளை, புற்றுநோய்க்கு உள்ளானவர்கள் இறுதிக் கட்டத்தில் சிகிச்சைக்காக வைத்தியர்களை நாடி வருவதே ஆஸ்பத்திரிகளிலிருந்து தமக்கு கிடைக்கும் பொதுவான முறைப்பாடு என்று அவர்கள் கூறினர்.
புற்றுநோய் தவிர்க்கப்பட முடியாத போதிலும் சரியான நேரத்தில் உரிய சிகிச்சை முறையை ஆரம்பிப்பதன் மூலம் உயிரிழப்பைத் தள்ளிப் போட முடியும்.
எனவே புற்றுநோய்க்கு ஆளான ஒருவர் இனிமேல் தன்னால் எதுவுமே செய்ய இயலாது என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். (ச)

# குளிர் வலய நாடுகளிலிருந்து மிருகங்கள் இறக்குமதி

குளிர்வலய நாடுகளில் இருந்து அம்பாந்தோட்டையில் உள்ள சர்வதேச மிருகக் காட்சிச்சாலைக்கு சில மிருக இனங்கள் கொண்டு வரப்படவுள்ளன.
ஐஸ்லாந்து, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட மேலும் சில நாடுகளில் இருந்து மிருகங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.
ஏற்கனவே மான் இனங்கள், பறவையினங்கள் மற்றும் பனிக்கரடிகள் போன்ற மிருகங்கள் இலங்கைக்குத் தருவிக்கப்பட்டுள்ளன.
இந்த மிருகங்களுக்குத் தேவைப்படும் அனைத்து வசதிகளும் அம்பாந்தோட்டை சர்வதேச மிருகக் காட்சிச்சாலையில் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன. (ச-22)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பதற்றமுறுவதற்குக் காரணம் இல்லாமல் இருக்குமா......?

அடுத்த மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மாநாட்டில், இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்க அரசால் பிரேரணை கொண்டு வரப்படுவது அநேகமாக நிச்சயமாகிவிட்டது. அந்தப் பிரேரணையை பிரிட்டனும் ஆதரிக்கக் கூடிய புறச்சூழ்நிலை இப்போது உருவாகி வருகிறது.

பொது நலவாய பணியகத்தின் இணை அமைச்சர் ஹுகோ ஸுவைர் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை, இருபத்தெட்டாம் திகதி வெளியிட்ட தகவல் அதனைப் புலப்படுத்துவதாக உள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் இதுவரை அமைக்கப்பட்ட உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை எதுவும் நம்பகமானதாக, சுதந்திரமானதாக, வெளிப்படைத் தன்மை உடையதாக, அனைத்துலக சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக, தகுதி உள்ளதாகக் கருதப்படாத நிலையில் -

இலங்கை அரசு தானே உருவாக்கிய நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட எந்த ஒரு விசாரணை ஆணைக் குழுவும் அனைத்துலக தரத்துக்கு அமைவாகச் செயற்படவில்லை-

இது விடயத்தில் , விவகாரத்தில் இவ்வருடம் மார்ச் மாதத்துக்கு முன்னர் கொழும்பு அரசு நம்பகமான , உண்மையான, தேசிய வழிமுறையை முன்னெடுக்காது இருப்பின், மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்படும் அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற பிரேரணையை ஆதரிக்கப் போவதாக பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்திருந்த நிலைப்பாட்டையும் அமைச்சர் ஹுகோ ஸுவைர் நாடாளுமன்றில் காட்டமாகத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய நிலையில், அமெரிக்காவின் உத்தேச பிரேரணையை ஆதரிக்க வேண்டாம் என்று ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளிடம் கேட்டுக் கொள்ளும் திட்டத்தைக் கையில் எடுத்துள்ளது எமது அரசாங்கம்.

அதன் பொருட்டு , இந்தியத் தலைநகர் புதுடில்லியில் தூதரகங்களைக் கொண்டுள்ள 82 நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் , அமெரிக்கா கொண்டு வரவுள்ள (அனைத்துலக விசாரணை கோரும்) பிரேரணையை ஆதரிக்க வேண்டாம் என்று கேட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் அமைச்சர் சிறிபால டி சில்வா ஆகிய இருவரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் (இலங்கையில் தூதரகங்களைக் கொண்டிராத நாடுகளின்) தூதுவர்களைச் சந்தித்து, அமெரிக்கப் பிரேரணையை ஆதரிக்கக் கூடாது என்று மிக்க விநயத்துடன் வேண்டியுள்ளனர்.

இலங்கை அரசின் செயற்பாடுகளை, மனித உரிமைகள் சபையில் பலவீனப்படுத்தும் உள்நோக்கத்துடனேயே அமெரிக்கா இவ்வாறான (தகாத) முயற்சிகளை முன்னெடுத்து வருவதாகவும் 82 வெளிநாடுகளின் தூதுவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துள்ளார்கள் அமைச்சர்கள் இருவரும்.

இலங்கை அரசாங்கம் போர்க் குற்றங்களை இழைத்தது என்ற விவகாரம் இப்போது அனைத்துலக மட்டத்தில் முக்கிய பேசு பொருளாகவும் கண்டனத்துக்கு உட்பட்டதாகவும் ஆகிவிட்டது.

2012 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானம், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற வகையில் அமைந்திருந்தது.

- அதன் பிரதிபலனாகவே இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்திருந்தது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டும்-

இறுதிக்கட்டப் போரின் போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு அரசு பொறுப்புக் கூறுதல் வேண்டும்.-

காணாமற் போனோர், கடத்தப்பட்டோர் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு தீர்வு வழங்க வேண்டும்- ஆகிய தீர்மானங்கள் கடந்த வருடத்தைய கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டிருந்தன.

ஆனால் அவை குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் விளைவே இப்போதைய புதிய பிரேரணை.

அனைத்துலக மட்ட விசாரணை வேண்டும் என்ற இவ்வருடத்தைய உத்தேச பிரேரணையைக் கண்டு கொழும்பு அரசு பதற்றம் அடைந்து அஞ்சுவதற்கு, உள்ளூர்ந்த பிரதான காரணம் ஒன்று இல்லாமல் இருக்க முடியாதே....?

# இலங்கை ஜனநாய...

வெள்ளிக்கருத்துக் களம்
நிகழ்வின் தொகுப்பு

ஜனநாயக ஆட்சியைச் சீர்குலைக்கும் சர்வாதிகாரத்தை நோக்கி எமது நாடு முன்னோக்கிச் செல்கின்றதா என பொதுக் கலந்துரையாடல்கள் அண்மைய காலங்களில் இடம்பெற்று வருகின்றன. இந்தக் குற்றச்சாட்டை ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் அரச ஊடகப் பேச்சாளர்கள் தொடர்ந்து மறுத்து வருகின்றனர். அவர்கள், குறிப்பாக, அண்மையில் நடைபெற்ற மூன்று மாகாணங்களின் தேர்தல்களை மக்களின் தேவைக்கேற்ற செயற்பாடு மிக்க துடிப்புள்ள ஜனநாயக பதிலின் குறியீடெனக் கூறுகின்றார்கள். நடைபெற்றுள்ள உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் குறித்துக் காட்டப்படுகின்றது. இலங்கையால் தலைமை தாங்கப்பட்டு அண்மையில் நடந்துமுடிந்த பொதுநலவாய நாடுகளின் மாநாடு, பொதுநலவாய நாடுகளின் மதிப்பினைத் தொடர்ந்து சுட்டிக்காக்கும் நாடாக இலங்கை சர்வதேச அந்தஸ்தைப் பெற்றுள்ளது என்பதைக் குறித்துக் காட்டுவதாகக் கருதப்படுகின்றது. பொது நலவாய மாநாட்டின் இறுதி வெளியீட்டின் போது குறிக்கப்பட்ட இம்மதிப்புக்களாவன ஜனநாயகம், மனித உரிமைகள், சகிப்புத்தன்மை, கருத்தை வெளிப்படுத்துவதற் கான உரிமை, அதிகாரப் பிரிவினை, சட்ட ஆட்சி, நல் லாட்சி மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகும். இது, உண்மை நிலையுடன் பொருந்துகின்றதா என்ற கேள்வி புறநிலை மதிப் பீட்டைக் கோருகின்றது. சர்வாதிகாரத்தை உறுதி செய்வதிலோ அல்லது மறுப்பதில் ஈடுபடுவதை விட, குடிமக்களாகிய நாமும் அரசும் ஆட்சியில் தற்போதைய குறிப்பிடத்தக்க போக்குகள், இந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மை உள்ளனவா என மதிப்பீடு செய்து, அவ்வாறிருப்பின், அவற்றைத் தவிர்க்க என்ன செய்யலாமென தீவிரமாய் கருத வேண்டும். பொது நுண்ணாய்வு மற்றும் கலந்துரையாடலைப் பெற ஏதுவான சில விடயங்களை வெள்ளிக் கருத்துக்களம் இங்கு எழுப்ப விரும்புகின்றது.

### எமது அரசமைப்பு, சர்வதேச விதிமுறைகளும் தராதரங்களும், ஜனாதிபதி அதிகாரமும்

பெரும்பாலும் பொது அறிக்கைகளில், சர்வதேச அமைப்புக்கள் இலங்கையில் ஆட்சி நிலையை ஆராயும் போது தமக்கு வழங்கப்பட்ட பணிப்புக்கு மேலாக செயற்படுவதாகவும், இந்த விதிமுறைகளும் தராதரங்களும் மேலைத்தேய நாடுகளினால் நிர்ணயிக்கப்படுவதோடு, அவை எமது சிறிய நாட்டின் இறைமையை சீர்குலைக்கப் பயன்படுத்தப் படுகின்றது எனவும் பரவலாகக் கூறப்படுகின்றது. நாம் மனித உரிமைகளை நடைமுறைப்படுத்த மிகவும் அரசியல் ரீதியான தேர்ந்தெடுக்கப்பட்ட அணுகுமுறைகள் எந்த விதத்திலும் நியாயமில்லை என ஒத்துக்கொள்ளுகின்றோம். அத்தகைய அணுகுமுறையினை அரசு எதிர்க்க முயன்றாலும், எமது அரசமைப்பு மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் மனித உரிமைகளை மதித்து விருத்தி செய்ய உள்ள தமது சொந்தப் பொறுப்பை அரசு மீற இது எவ்விதத்திலும் நியாயப்படுத்தப்படமாட்டாது. எமது அரசமைப்பின் 111 ஆவது அதிகாரம் மனித உரிமைகளை நடைமுறைப் படுத்த உத்தரவாதம் வழங்குகின்றது. எமது தேசம் கைச்சாத்திட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களின் விதிமுறைகளுக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும் இலங்கை கட்டுப்பட்டுள்ளது. சரத்து 27(15). தேசங்கள் மத்தியில் கையாளப்படும் போது சர்வதேச சட்டம் மற்றும் ஒப்பந்த கடமைப்பாடுகளுக்கு மதிப்பு வழங்க வேண்டுமென இலங்கைத் தேசத்தை கோருகின்றது. நியாயமான அனைத்தும் உள்ளடக்கிய அபிவிருத்தியானது பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் விளைவாக அரசமைப்பு மற்றும் சர்வதேச சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடமைப்பாடுகளை மீறக் கூடாதெனக் கோருகின்றது. ஜனாதிபதி, தமது அலுவலகத்தில் சத்தியப்பிரமாணம் செய்யும் போது, அரசமைப்பு மற்றும் சட்டத்துக்கு அமைவாக தமது கடமைகளையும் செயற்பாடுகளையும் உண்மையாக செயற்படுத்துவார் என ஏற்றுக்கொள்கின்றார் (சரத்து 32(1) மற்றும் அரசியலமைப்பின் நான்காம் அட்டவணை). எமது அரசமைப்பு மேலும் அவரது அனைத்துச் செயற்பாடுகளும் அரசமைப்பு அல்லது எழுதப்பட்ட சட்டம், சர்வதேச சட்டம், வழமை அல்லது பயன்பாட்டில் கோரப்பட்ட விதத்துக்கு அமைவாக இருக்க வேண்டுமென்கின்றது. சரத்து 33(f). அரசமைப்பின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரம் வரையறைக்குள்ளாக்கப்படவில்லை என்ற கருத்துப் பிழையானது.

> **கல்வித் தகைமைகளுக்கு மாறாக அரசியல் தொடர்புகளின் அடிப் படையில் பல்கலைக்கழக துணை வேந்தரை நியமித்தல், பல்கலைக்கழக சட்டத்தை மீறி கல்வி முதல்வர் ஒருவரின் பதவிக் காலத்தை நீடித்தல், பல்கலைக்கழகங்களில் தேசிய பாதுகாப்புச் சேவைகளை ஏற்படுத்தல், பேச்சு மற்றும் வெளிப்படுத்தலுக்கான சுதந்திரத்தில் தலையிடுதல் போன்றன உள்ளடங்கும்.**

எமது அரசமைப்பு மற்றும் சர்வதேச சட்டத்துக்கு அமைவாக பொருளாதார வளர்ச்சி மற்றும் ஓர் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நல்லாட்சியின் பொறுப்பை மீற நியாயப்படுத்த முடியாது. நியாயமான மற்றும் அனைத்தும் உள்ளடக்கிய அபிவிருத்தி மக்களின் குடியுரிமை, அரசியல் மற்றும் சமூக, பொருளாதார மற்றும் கலாசார, உரிமைகளை நடைமுறைப்படுத்த அரசைக் கோருகின்றது. குற்றவியல் நீதித்துறையை வலுப் படுத்த வளமளிப்பது போன்றே சுகாதாரம் மற்றும் கல்விக்கு நிதி வளங்களை ஒதுக்கீடு செய்வது முக்கியமானது. பிரிக்கமுடியாத, ஒன்றுடன் ஒன்று இணைந்த இந்த உரிமைகள் அனைத்தும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளில் இனங்காணப்படல் வேண்டும்.

சமூக மற்றும் பொருளாதார மாற்றத்துக்கு முன்னுரிமைகளை வகுக்கும் போது, மக்களின் பங்களிப்பைப் பெறுவது முக்கியமானதாகும். பல்வேறு துறைகளுக்கான தேசிய வளங்களின் பயன்பாடு மற்றும் நிதி ஒதுக்கீடுகள் குறித்து உத்தியோகபூர்வ கொள்கைகளை வகுக்கும்போது அறிவுறுத்தப்பட்ட விவாதம் காணப்படல் வேண்டும்.

### சட்டம் மற்றும் ஒழுங்கின் முறிவு மற்றும் குற்றவியல் நீதி நிர்வாகத்தில் அரசியல் தலையீடு

சட்டம் மற்றும் ஒழுங்கின் முறிவு பல்வேறு மாதங்களாக பொதுக் கருத்து மற்றும் அக்கறைக்குக் காரணமாக அமைந்துள்ளது. சட்ட மாஅதிபரின் திணைக்களத்தை ஜனாதிபதி காரியாலயத்தின் கீழ் வைத்தது, குற்றவியல் விசாரணைகளில் பக்கச்சார்பற்ற தன்மை மற்றும் அரசியல் தலையீடுகள் அற்ற தண்டனைகள் குறித்து பொது நம்பிக்கையை நலிவுபடுத்தி உள்ளது. ஊடகத் துறை யாளர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு எதிரான வன்முறைக் கான தண்டனைகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் எழுப்பப்பட்டுள்ளன. காலப்பகுதியில் சட்ட ஆட்சி மற்றும் சனநாயக ஆளுகை குறித்த கூட்டமொன்றில் கலந்துகொள்ள வழக்கறிஞர் சங்கத்தினால் அழைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பங்களிப்பாளர்களின் நுழைவுச்சான்றுகளை இரத்துச் செய்தது பொது அக்கறை குறித்த விடயங்களில் விமர்சனக் கருத்துக்களை அரசாங்கம் சகித்துக் கொள்ளாது அல்லது பேச்சு மற்றும் தொடர்புகொள்வதற்கான சுதந்திரத்தைக் கோரத் தேடும் நபர்களை பேண முடியாது எனக் காட்டுகின்றது.

கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) இந்தத் துறையில் பாதுகாப்பு அமைச்சில் இருந்து பொலிஸ் துறையினை பிரித்தல் உள்ளடங்கலாக முக்கியமான மாற்றங்களை பரிந்துரை செய்தது. ஜனாதிபதியின் கீழ் வருகின்றதும், இவ்வமைச்சின் செயலாளராக முன்னாள் இராணுவ அதிகாரியைக் கொண்டதுமான, புதிய சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் உருவாக்கம் குறித்த அண்மையத் தீர்மானம் கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பின்பற்றுவதாகவோ அல்லது குற்றவியல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசியல்மயம் குறித்த விடயத்திற்கோ பதிலளிப்பதாக இல்லை. பொலிஸ் படை இராணுவத்தினால் மாற்றீடு செய்யப்பட்ட வெலிவேரிய சம்பவத்தின் போது, சமாதானமான எதிர்ப்பை வன்மையாக ஒடுக்கச் செய்த செயற்பாடு குடிமக்களை பேணும் அதேவேளை சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேண குடியாட்சித் தேசத்தின் கடமைகளை அரசு குறைத்து மதிக்கின்றதாகவே காட்டுகின்றது.

### நீதித்துறை

பிரதான நீதியரசரை கழற்றுவதற்கான அண்மைய நடைமுறையானது, நியாயத்தையும் நீதியையும் உறுதி செய்வதற்கு பொருத்தமான அரசமைப்பு ஏற்பாடுகளில் செய்ய வேண்டிய முக்கியமான திருத்தங்களின் அவசியத்தைத் தெளிவாகக் காட்டுகின்றது. மேல் நீதிமன்றங்களின் நீதியரசர்களுக்கு எதிரான குற்றவழக்கு நடைமுறை விசாரணைகளில் நீதியையும் நியாயத்தையும் உறுதி செய்ய பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்ளத் தவறுதல், நீதிச் சுதந்திரம் மற்றும் நேர்மையின் அடிப் படை மதிப்புக்களை உறுதி செய்யும் அரசின் அர்ப்பணிப்பில் பொது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை குறைக்கின்றது.

எமது உயரிய நீதிமன்றங்களில் பணியாற்றிய புகழ் பெற்ற நீதியரசர்களாலும், மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக வழக்காட ஊக்குவிக்கப்பட்ட வழக்கறிஞர்களின் பங்களிப்பினாலும் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் குறித்த திடமான நீதி பரிபாலனம் ஒன்று எமது நாட்டுக்கு உண்டு.

சிறைக் காவலில் உள்ளபோது சித்தரவதை மற்றும் சாவு பற்றி அடிப்படை உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கும் கூட நீதிமன்றங்களில் தீர்வுகளை நாடுவது கடினமாகி வருகின்றதென வழக்கறிஞர்களிடமிருந்தும் வழக்காளர்களிடமிருந்தும் நம்பத்தகுந்த அறிக்கைகள் உள்ளன.

### பொது நிர்வாகம்

பதினெட்டாம் திருத்தச் சட்டம், சட்ட செயற்பாட்டின் விதிவிலக்கைப் பேணி, அரசின் பதவிக் கால வரையறையை அகற்றியது. அது சுயாதீன பொதுச் சேவைகள்

# கத்தை நோக்கிச் செல்கிறதா?

ஆணைக்குழுவையும் அகற்றியது. இந்தத் திருத்தச் சட்டம், அனைத்து அதிகாரத்தையும் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக் கொள்கையை மீள வலியுறுத்தி, அனைத்து மட்டங்களிலும் பொது நிர்வாகத்தைத் தீவிரமாக குறைத்து மதிப்பிட்டுள்ளது. எந்த நிர்வாகத் தீர்மானம் என்றாலும், ஜனாதிபதியினதும் அமைச்சரவையினதும் அங்கீ காரத்தோடு மேற்கொள்ளப்படலாமென்றும், அத்தகைய தீர்மான மெடுத்தலுக்கு நாட்டின் சட்டங்கள் பொருந்தாது என்றும் பரவலான கண்ணோட்டமொன்று அதிகாரவர்க்கத்தினர் மத்தியிலும் கூட உள்ளது. அரசியலமைப்பு விதிமுறைகள் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்குகள் புறக்கணிக்கப்படலாம் என்ற எண்ணம் முக்கியமான விடயங்களில் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது கலந்துரையாடாத தன்மையில் வெளிப்படுகின்றது. உதாரணமாக, வடக்கில் அரசு உத்தியோகத்தர் பதவிகள் உள்ளடங்கலாக, சிரேஷ்ட பொதுச் சேவைகள் பதவிகளுக்கு நியமனங்களை மேற் கொள்ளும் போது, இலங்கை நிர்வாக சேவைகளில் இருந்து நபர்களை நியமிக்காது இராணுவ பின்னணியில் இருந்து வருகின்ற நபர்களை நியமிப்பதில் இருந்து இதனைக் காணக் கூடியதாக உள்ளது.

அனைத்து மட்டங்களிலும் பல்வேறு முக்கிய இராஜதந்திர பதவிகளுக்கான நியமனங்கள் சேவைக்கு வெளியே அரசியல் தொடர்புகள் உள்ள நபர்களுக்கு வழங்கப்படுவதன் மூலம் தகுதியான மக்கள் மத்தியிலிருந்து போட்டி நடைமுறையின் ஊடாக தேர்ந்தெடுக்கப்படும் தொழில்சார் பொது மற்றும் வெளிநாட்டு சேவைகள் கொள்கையை குறைத்து மதிக்கின்றது.

சுற்றாடல் மற்றும் பெண்கள் உரிமைகள் விடயத்தில், பொறுப்பேதுமில்லாமல் ஏதேச்சையான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தம்மைச் சார்ந்த பிள்ளைகளுக்கு பொருத்தமான வழிமுறைகளை மேற்கொண்டதை ஆதாரப்படுத்தாது வெளிநாடு பயணித்து தொழிலில் ஈடுபட பிள்ளைகளுடன் கூடிய பெண் களுக்கு மறுக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அண்மைய விதிமுறைகளுக்கு ஓர் உதாரணமாகும். குறைந்த வருவாயிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பொருத்தமான வாழ்வாதார சந்தர்ப்பங்களை நீண்ட காலமாக வழங்க முடியாத எமது பொருளாதாரத்தின் குறைபாட்டால் ஏற்பட்டுள்ள சோக விளைவே, இந்தச் சிறு பிள்ளைகளின் நிலையாகும். எமது 1999ஆம் பராமரிப்புச் சட்டம் சிறுவர்களின் பராமரிப்புக்கு பெற்றோர் இருவர் மீதும் கடமைகளை ஒன்றித்தும் பகிர்ந்தும் வழங்கியுள்ளது. இந்தக் கொள்கைத் தீர்மானம் அமைச்சரவையின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது போன்று தோன்றுவதோடு, குடும்பத்தில் பெற்றோர் பணி மற்றும் சிறுவர் பராமரிப்புக்கு பொறுப்புடைய நபர்கள் பெண்கள் மட்டுமே என எண்ண வைக்கின்றது. இந்தக் கொள்கை எமது அரசமைப்பில் உள்ள சமத்துவக் கோட்பாடு (சரத்து 12) மற்றும் குடும்பத் துணைக்கான சட்டங்களை குறைத்து மதிப்பிடுகின்றது. இது மேலும் பெண்கள் மாநாடு (cedaw) மற்றும் ஆயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளில் (mdgs) பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்ற 3ஆம் இலக்கின் கீழ் இலங்கையின் அர்ப்பணிப்பை குறைத்து மதிப்பிட்டுள்ளது.

இரண்டு முக்கிய கொள்கை வரையும் அமைப்புக்களான, பெண்களின் தேசிய சங்கம் மற்றும் தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகார சபை, ஒன்றாக இணைந்து பெண்களுக்கான வாழ்வாதார சந்தர்ப்பங்களைக் குறைத்து மதிப்பிடாது பயன் மிக்க சிறுவர் பராமரிப்பை எவ்வாறு வழங்க முடியுமென இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.

இந்த இரண்டு அமைப்புக்களுக்கும் இந்த விடயங்களுடன் தொடர்புடைய முக்கிய அமைச்சுக்களில் உத்தியோக பிரதி நிதித்துவம் உள்ளதாக தெரிகின்ற போதும், கொள்கை அமைப்புக்களின் தலைவர்கள் கலந்துரையாடல்களுடன் கூடிய தீர்மானமெடுத்தல் கொள்கையை புறக்கணித்தே கொள்கைகள் குறித்து அறிக்கைகளை வழங்குகின்றனர்.

சேவை வழங்குதல் உள்ளடங்கலாக பொது அக்கறைகளைப் பாதிக்கும் முக்கியமான விடயங்களில் ஜனாதிபதியின் அங்கீகாரம் அல்லது அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ள காரணத்தினால் ஒழுங்குமுறையை அவமதிப்புச் செய்து தீர்மானங்கள் மேற்கொள்வது முறையானது என்ற சூழ்நிலை பொது நிர்வாகத்தில் காணப்படுகின்றது.

இதன் காரணமாக, சட்டபூர்வ அமைப்புக்கள் சட்டத்தினால் கோரப்பட்ட வண்ணம் பொது மக்களுக்கு தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில்லை. பொது நிர்வாகத்தில் வீழ்ச்சி, தேசிய நிறுவகங்களில் தலைமைத்துவப் பணியில் உள்ள அமைச்சரவை மந்திரிகளின் போக்கில் வெளிப்படுகின்றது. அவர்கள் பெரிதும் பொது நிர்வாகத்துக்கு பொருந்தாத விதத்தில் செயற்படுவதோடு, இலங்கைக்கு வருகை தரும் உயர் பதவியாளர்கள் உள்ளடங்கலாக, பெண்கள் மற்றும் உத்தியோகத்தர்களை கேலி செய்யும் விதத்தில் ஆபாசமாகவும் சில வேளை இழிவாகவும் பொது அறிக்கைகளை மேற்கொள்கின்றார்கள். அவர்கள் நாட்டையும் நிர்வாகத்தையும் அவமதிப்புக்கு இட்டுச் செல்வதோடு, ஒரு போதும் தமது செய்கைகளுக்காக பெறுப்பேற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதோடு, அது அரசின், ஏன் பொது மக்களின் அற்ப விளையாட்டாக பெரிதும் மாற்றப்படுகின்றது. கடமைத் தவறுதலின் தண்டனைக் கலாசாரத்தினை இது மீள் வலியுறுத்துகின்றது.

### பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக ஆளுகை

பொது நிர்வாகத்தில் வீழ்ச்சி பொது பல்கலைக்கழக திட்டத்தில் இரட்டிப்படைந்துள்ளது. பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டங்களால் ஆளப்படுகின்றன. கல்விசார் உரிமைகளையும் கடமைகளையும் பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கு வழங்கியுள்ள சட்டங்கள் மற்றும் நாட்டின் அரசமைப்பின் தராதரங்கள் மற்றும் நடைமுறைகளைப்பின்பற்றஇலங்கைப் பல்கலைக்கழகங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. சட்டம் மற்றும் அரசமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் மதிப்புக்களாவன பொது நிறுவனங்களுக்கான தேசிய நிதி ஊடாக பல்கலைக்கழக தன்னாட்சி ஆகும்.

பல்கலைக்கழகக் கல்வித் தன்னாட்சியில், முக்கியமான அரசமைப்பு, நீதி மற்றும் பொது நலவாய மதிப்புத் திட்டத்தில் அரசாங்கத்தாலும் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவினாலும் அவமதிப்பைப் பெற்றுள்ள போக்கை அண்மைய நிகழ்வுகள் காட்டுகின்றன.

இந்தப் புறக்கணிப்புக்களில் கல்வித் தகைமைகளுக்கு மாறாக அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் பல்கலைக்கழக துணை வேந்தரை நியமித்தல், பல்கலைக்கழக சட்டத்தை மீறி கல்வி முதல்வர் ஒருவரின் பதவிக் காலத்தை நீடித்தல், பல்கலைக் கழகங்களில் தேசிய பாதுகாப்பு சேவைகளை ஈடுபடுத்தல், பேச்சு மற்றும் கருத்து வெளிப்படுத்தலுக்கான சுதந்திரத்தில் தலையிடுதல் போன்றன உள்ளடங் கும். தொழில்சார் பதவிகள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கான பதவி நியமனங்கள் உள்ளடங்கலாக, கல்வி நியமனங்கள் அரசியல்மயமாக்கப்பட்டுள்ளமை கவலைக்கிடமான விடயமாகும். பொதுநலவாய மாநாட்டின் பின்னரான பிரதிபலிப்பு கல்விமான் கூட்ட மொன்றில் பல்கலைக்கழக மானிய ஆணையாளர், ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் பங்களிப்புடன், குடியாட்சி, நல்லாட்சி மற்றும் சட்ட ஆட்சி என்ற தொனிப்பொருளில் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு தற்போது (பல்வேறு விடயங்கள் மத்தியில்) பொதுநலவாய பல்கலைக்கழகங்களின் தராதரத்தை மேம்படுத்தல் என்பதில் குறியாக உள்ளது எனக் கூறியுள்ளார். குடிமக்களாகிய நாம் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் உண்மை நிலையோடு இந்தப் பொதுச் சொல்லாட்சி பொருந்துகின்றதா எனக் கேட்டல் வேண்டும்.

பல்கலைக்கழகங்களுடன் அதிகரித்து வரும் தலையீடு முக்கிய பொது நிறுவகங்களின் ஆளுகையில் அரசி யல் அதிகாரத்துவத்தை வெளிப்படுத்துகின்றது. அரசமைப்பு மற்றும் சட்ட நடைமுறைகளுக்கு அப்பால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மற்றும் சட்ட வரையறையை மீறி தீர்மானம் மேற்கொள்ள அமைச்சரவைக்கு அதிகாரமுண்டு என்ற முற்றிலும் தவறான எண்ணம், முன்னர் எப்போதும் இத்தலையீடுகளை சகித்துக் கொள்ளாத பல்கலைக்கழக அமைப்புக்கள் மத்தியில் இத் தன்மைக்கு பங்களிப்பு செய்துள்ளது. பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் மட்டத்தில் தலைமைத் துவத்தில் வீழ்ச்சி மற்றும் பல்கலைக் கழக மன்றங்கள், ஆலோசனைச் சபைகள் மற்றும் பீடங்களின் நிறுவகப் பொறுப்புக்களைக் குறைத்து மதிப் பிடல் தேசத்தின் பல்கலைக்கழக திட்டத்தில் தீவிரமான தாக்கத்தைக் கொண்டுள்ளதோடு தொடர்ந்தும் கொண்டிருக்கும். அண்மைய ஆண்டுகளில் மிகவும் வெளிப்படையாகத் தெரிகின்ற, பல்கலைக்கழக மன்றங்களுக்கான நியமனங்களின் அரசியல் தன்மை, பல்கலைக்கழக ஆட்சிக்கு தேவையான ஆலோசனையையும் வழிநடத்துதலையும் வழங்க இந்த நிர்வாக அமைப்புக்களை தகுதியற் றதாக்கி விடுகின்றது.

> **இந்நாட்டின் குடிமக்கள், அவர்களுக்கு பல்வேறு அரசியல் தொடர்புகள் காணப்படும் அதேவேளை, இந்த குடியுரிமையின் அரிப்பை நீதியாக்கக் கூடாது. ஜனாதிபதியும் அரசும் வெற்றிகளைத் தேர்தல்களில் பதிவு செய்துள்ளனர் என்பது உண்மை. அரசின் பிரசித்தமான ஆதரவு உள் ளதா, மற்றும் அது எவ்வளவு ஆழமாக உள்ளது என்பது பொதுமக்கள் அதனது பதிவுகளை நுண்ணாய்வு செய்யும் கடமையோடு தொடர்பில்லை.**

### மத சகிப்புத்தன்மையின்மை

அதிகரித்து வரும் மத சகிப்புத்தன்மையற்ற சூழல், மற்றும் மதம் மற்றும் கலாசார வேறுபாடுகளை ஆபத்தாக புறக்கணித்தல் மற்றும் வேறுபாடுகளுக்கு மதிப்பளிப்பதில் உள்ள குறைபாடு போன்றன அரசிடமிருந்து முறையான பதிலைப் பெறவில்லை. ஹிக்கடுவையில் நடைபெற்ற மிக அண்மையான வன்முறைத் தாக்குதலின் பின்னர் அரசின் சார்பாக அதிர்ச்சியளிக்கும் மௌனம் இருந்து வந்துள்ளது. அல் ஜசீரா தொலைக்காட்சி நேர்முகக் காணலின் போது ஜனாதிபதி இத்தகைய மத சகிப்புத்தன்மையற்ற வன்முறை நிகழ்வொன்று ஏற்படக் காரணம் ஓர் பெண் சிறுமியின் கற்பழிப்பு என்றும், அதன் விளைவாகவே இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கூறியமை, அதிர்ச்சியாக உள்ளது. இது தவறாக உள்ள அதேவேளை, சட்டத்துக்கு மாறாக சட்டத்தினை தமது கைகளில் எடுக்கும் நபர்களை ஜனாதிபதி நியாயப்படுத்தி, சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுதல் மற்றும் தமது குடிமக்களை பாதுகாக்கும் பணியை அரசு கைவிட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதாக காணப்படுகின்றது. அரசின் முன்னணி அங்கத்தவர்கள் சில தீவிரவாத குழுக்களுக்கு ஆதரவு வழங்குவது அனைத்து சமூகத்தினருக்கும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வழங்குவதற்கான அரசின் அர்ப்பணிப்பைக் குறைத்து மதிப்பிடுகின்றது.

### கலாசாரம் மற்றும் பாரம்பரியம்

பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்ற சில குழுக்களின் மனித உரிமைகளை குறைத்து மதிப்பிட பாரம்பரிய மற்றும் கலாசார நியாயப்படுத்தல்கள் பயன்படுத்தப்படுகின்றன. பொது இடங்களில் பெண்கள் மற்றும் சிறுவருக்கெதிரான பாலியல் வன்முறைகளுக்கான பயனற்ற பதில்களில் இதனைக் காணலாம். வீட்டு வன்முறைகளில் பூச்சிய சகிப்புத்தன்மை குறித்த பிரச்சாரம், அத்தகைய வன்முறைகளை தவிர்ப்பதில் அரசின் பணியைக் கேள்வி கேட்ட முக்கிய அரசியல்வாதிகளின் கருத்து குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என நம்பகமிக்க அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளது. பெண்கள் உரிமைகளில் மிக அண்மைய கட்டுப்பாடு வெளிநாட்டு வேலைவாய்ப் புக்களை நாடுவது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. தீவிரவாத மற்றும் பேரினவாத காலசார வாதங்கள் இந்நாட்டின் பெண்கள் மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டங்களில் இனப் பெருக்கத்தின் சுகாதாரத் திட்டத்தை குறைத்து மதிப்பிட பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்விடயம் குறித்து சேவை வழங்கத் தயாராகவிருந்த அரச சார்பற்ற நிறுவனத்துக்கு, இத்தகைய ஆதரவில்லாமல் ஒரு நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையில், அண்மைய அரசு விதிமுறைத் தடைவிதித் துள்ளது. நாம் எமது குடும்பக் கட் டுப்பாடு சாதனையில் இருந்து விடுபட்டு வருவதோடு இது கடுமையான சுகாதார மற்றும் சனத்தொகை தாக்கங்களைக் கொண்டிருக்கும்.

### இராணுவமயமாக்கல்

வெள்ளிக் கருத்துக்களத்தின் பல்வேறு அறிக்கைகளில் பொது நிர்வாகம் இராணுவமயமாதல் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளது. சமாதான காலத்தில் குடிமக்கள் கடமைகளை நிறைவேற்றக் கூடாதெனினும், இலங்கையில் அத்தகைய தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது என போதியளவு ஆதாரங்கள் உள்ளன. சிரேஷ்ட குடிமக்கள் பொதுச் சேவைகள் பதவிகள் இப்போது இராணுவ நபர்களால் நிரப்பப்பட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சு நிறுவனங்களை உருவாக்கி, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி நடைமுறைகளுடன் கூடிய திறைசேரி, அமைச்சரவை மற்றும் ஜனாதிபதி அங்கீகாரம் போன்றவற்றைத் தாண்டி, பல்வேறு பிராந்தியங்களில், விருந்தோம்பல் துறை மற்றும் கட்டுமானப்பணி உள்ளடங்கலாக, சேவைகளை வழங்க ஒப்பந்தங்கள் பெறுகின்றது. ஆயுதப் பிரச்சினை முடிவுக்கு வந்து அவசர காலச் சட்டங்கள் தளர்த்தப்பட்ட போதிலும் ஜனாதிபதி , ஒவ் வொரு மாதமும், தொடர்ந்தும் பொதுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு, நாட்டின் 25 நிர்வாக மாவட்டங்களில் உள்ள அனைத்து இராணுவக் குழுக்களையும் பொது ஒழுங்கைப் பேண அழைப்பு விடுக்கின்றார்.

இராணுவமயமாக்கல் ஜனநாயக ஆட்சி விதிமுறைகளுக்கு மாறாகக் காணப்படுவதோடு, பொது மக்கள் நிறுவனங்களின் நலிவுக்கும் பங்களிப்பு செய்கின்றது.

### அரசு மற்றும் மக்களின் பொறுப்பு

குடியாட்சியின் விதிமுறைகள் மற்றும் நிறுவகங்களை மீள நிறுவ வேண்டிய அவசரத் தேவை உள்ளதா என அபிப்பிராயத்தை உருவாக்க பொது மக்கள் தீவிரமாய் இவ்விடயங்கள் குறித்து ஆராய வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் அரசமைப்பு மற்றும் நாட்டின் சட்டங்கள் ஆட்சியில் பொருத்தமற்றவை எனச் செயற்படும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை பல வீனமாக்குவதைக் குறிக்கின்றது. அரசு இவ்விடயங்களுக்குப் பதிலளிக்க வேண்டுமேயொழிய எமது குடியாட்சி குறித்து துடிப்பான இயல்புடைய பொது அறிக்கைகளில் மேற்கொள்ளக் கூடாது. இந்நாட்டின் குடிமக்கள், அவர்களுக்கு பல்வேறு அரசியல் தொடர்புகள் காணப்படும் அதேவேளை, இந்தக் குடியுரிமையின் அரிப்பை நீதியாக்கக் கூடாது. ஜனாதிபதியும் அரசும் வெற்றிகளைத் தேர்தல்களில் பதிவு செய்துள்ளனர் என்பது உண்மை. அரசின் பிரசித்தமான ஆதரவு உள்ளதா, மற்றும் அது எவ்வளவு ஆழமாக உள்ளது என்பது பொதுமக்கள் அதனது பதிவுகளை நுண்ணாய்வு செய்யும் கடமையோடு தொடர்புபடவில்லை. அரசமைப்பு, மற்றைய சட்டங்கள் மற்றும் 'கட்டுப்பாட்டைக் கொண்ட சர்வதேச ஒப்பந்தக் கடமைகள் போன்றவற்றை மௌனத்திலாயினும் உறுதி செய்வது. குடியுரிமை மதிப்புக்களையும் நிறுவகங்களையும் முழுமையாக உடைத்து விட இட்டுச் செல்லும். குடிமக்களாகிய நாம் மேற்குறிப்பிட்ட விடயங்களை தீர்க்க எவ்வித முயற்சிகளையும் எடுக்காத விடத்து அரசின் குடியுரிமை ஆளுகைக்கான அர்ப்பணிப்பு அறிக்கைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அரசமைப்பும் நாட்டின் சட்டங்களும் அத்தகைய அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்காதவிடத்து ஜனாதிபதியின் செயற்பாடுகளை சட்டரீதியானது என இவ்வகையான ஆளுகைக்கு ஒப்புதல் வழங்குவது எமது நாட்டின் குடியுரிமையை உடைக்கவே இட்டுச் செல்லும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரத்தில் முக்கியஸ்தர்கள், வாடிக்கையாளர்களாவார்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும்.



**இடபம்:** சிலர் உங்களை நம்பிப் பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.



**மிதுனம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**கடகம்:** பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.



**சிங்கம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.



**கன்னி:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.



**துலாம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். நட்பு வட்டம் விரிவடையும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும்.



**விருச்சிகம்:** பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உறவுகள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.



**தனுசு:** கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். சுறுசுறுப்புடன் செயற்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.



**மகரம்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள் ளுங்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.



**கும்பம்:** யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வெளிவட்டாரத்தில் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. திடீர்ப் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உத்தி யோகத்தில் அதிருப்தி உண்டாகும்.



**மீனம்:** எங்கு சென்றாலும் நல்ல வரவேற்புக் கிடைக்கும். உங்களைத் தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்களின் மனசு மாறும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

## நாளை

**தை-20 ஞாயிற்றுக்கிழமை | 02.01.2014**

திதி: திருதியை மு.இ.10.10 வரை
நட்சத்திரம்: சதயம்
பி.ப.12.25 வரை

சுபநேரம்: 09.36-11.06 வரை
இராகுகாலம்:.05.06-06.36 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### பக்தியோகத்தின் எளிமையும், மறைபொருளும்

"கிருஷ்ணா ! உன்னையே ஆழ்ந்து சிந்தித்தபடி இடைவிடாது வணங்கி வழிபட்டு வரும் பக்தர்கள் சிறந்தவர்களா அல்லது நிர்க்குணப் பிரம் மனை வழிபட்டு வரும் ஞானி கள் சிறந்தவர்களா? இருவரில் சிறந்த யோகியர் யார்?" என்று அர்ஜுனன் வினவினான். அதற்கு ஸ்ரீகிருஷ்ணர், "எவர்கள் தங்கள் மனத்தை என் மீது நிலைநிறுத்தி, என்னிடம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளார்களோ அவர்களே சிறந்த பக்தர்கள். உயர்ந்த யோகிகள். சொற்களால் விளக்க வொண்ணாததாய், வேறு பாடற்றதாய், அனைத்தையும் அறிவதாய், அசைவற்ற தாய், என்றுமுளதாய் விளங்கும் பரப் பிரமத்தை, முழுமுதற் பொருளை, புலன்களை வெற்றி கொண்டு, சமநோக்குடையவர்களாய், உயிரினங்களுக்கு நன்மை செய்பவர்களாய் அவற்றுடன் என்னையே வழிபடு பவர்களாய் இருப் பவர்களே என்னை வந்தடைகின்றனர். மனம், வாக்குகளுக்கு எட்டாத முழுமுதற் பொருளாகிய பிரமத்தினிடம் யாருடைய மனது நாட்டம் கொள்கிறதோ அவருக்கு அவர் மேற்கொண்டொழுகும் பாதையில் போராட்டங்கள் அதிகம். உடல் உணர்வு மிக்க மனிதனுக்குப் பிரமத்தைத்தேடி அடையும் பாதை மிகக் கடினமானது. தான் செய்து வரும் செயல்கள் அனைத்தையும் எனக்கு அளித்து என்னையே தஞ்சமாகக் கொண்டு, வேறு எதனிடமும் பற்றின்றி, என்னையே தியானித்து வரு பவன் எவனோ அவனுக்கு நான் மாறி மாறி வரும் பிறப்பு—இறப்பு எனும் பாவக் கடலிலிருந்து விரைவில் விடுதலை அளிக்கிறேன்" என்று விடை பகர்ந்தார்.

## 80 ஆண்டுகளுக்கும் மேலாக கெடாமல் இருக்கும் பாம்பின் விஷம்

80 ஆண்டுகளுக்குப் பின்னரும் பாம்பின் விஷம் கெடாமல் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நீரிழிவு நோயாளிகளுக்கு வழங்கப்படும் பையட்டா' மற்றும் இரத்த அழுத்தத்துக்கு கொடுக்கப்படும் கேப்டோபிரில்' ஆகிய மருந்துகளில் பாம்பின் விஷம் பயன்படுத்தப்படுகிறது.



பாம்பின் விஷம்

இதுதொடர்பான ஆய்வில் ஈடுபட்டிருந்த குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், 52 விஷ மாதிரிகளை ஆய்வு செய்தனர்.

அப்போது 80 ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்துச் சேமிக்கப்பட்ட விஷத்திலும், உயிரியியல் ரீதியான செயற்பாடு இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இது குறித்து ஆய்வுக் குழுவைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் பிரியன் பிரை கூறுகையில், முறையாகச் சேமித்து வைக்கப்பட்டுள்ள விஷத்தை அறிவியல் ரீதியாக பல ஆண்டுகளுக்குப் பயன்படுத்த முடியும், விஷம் மற்றும் நஞ்சு ஆகியவை மருந்து கண்டு பிடிப்பில் முக்கிய மூலப் பொருள்களாக விளங்குகின்றன என்று தெரிவித்துள்ளார்.

மேலும் ஒவ்வொரு பாம்பு இனத்தின் விஷமும் வெவ்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டவை. எனவே ஒவ்வொரு விஷ மாதிரியும் மருந்துக் கண்டுபிடிப்பில் முக்கிய மூலப்பொருளாக விளங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 6 | 8 | | | | |
| 8 | 9 | | 5 | | 2 | | | 4 |
| 5 | | 6 | | 9 | 3 | 2 | | |
| | | | | | | 4 | 6 | 3 |
| | 3 | | | | | | 9 | |
| 2 | 7 | 9 | | | | | | |
| | | 1 | 2 | 3 | | 5 | | 8 |
| 3 | | | 8 | | 6 | | 7 | 9 |
| | | | | 1 | 5 | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 8 | 3 | 7 | 2 | 6 | 9 | 5 |
| 2 | 3 | 6 | 5 | 9 | 8 | 1 | 4 | 7 |
| 9 | 7 | 5 | 1 | 4 | 6 | 2 | 3 | 8 |
| 6 | 4 | 3 | 2 | 8 | 5 | 9 | 7 | 1 |
| 7 | 9 | 1 | 6 | 3 | 4 | 5 | 8 | 2 |
| 5 | 8 | 2 | 7 | 1 | 9 | 3 | 6 | 4 |
| 3 | 2 | 4 | 9 | 5 | 7 | 8 | 1 | 6 |
| 8 | 5 | 9 | 4 | 6 | 1 | 7 | 2 | 3 |
| 1 | 6 | 7 | 8 | 2 | 3 | 4 | 5 | 9 |




# 10 கி.மீ. தூரம்

## நடந்து சென்று நோயாளியின் உயிரைக் காப்பாற்றிய அமெரிக்க மருத்துவர்!

உயிர்காக்கும் உன்னத சேவை செய்யும் மருத்துவர்கள், தங்கள் பணிக்கு காலம் நேரம் பார்ப்பதில்லை. ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளுக்கு எந்த நேரத்திலும் சிகிச்சை அளிக்க அவர்கள் தயங்குவதில்லை. இத்தகைய மதிப்புமிக்க பணிக்கு பெருமை சேர்க்கும் விதமாக, அமெரிக்காவைச் சேர்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணர் ஒருவர் 10 கிலோ மீட்டர் நடந்தே சென்று, நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை செய்து உயிரைக் காப்பாற்றியுள்ளார்.

பர்மிங்காமில் உள்ள டிரினிட்டி மருத்துவ மையத்தில் பணியாற்றி வரும் ஒரே ஒரு மூளை அறுவை சிகிச்சை நிபுணரான மருத்துவர் ஜென்கோ ரின்கிவ், சம்பவத்தன்று மருத்துவமனையில் இருந்தபோது, திடீரென மற்றொரு மருத்துவமனையில் இருந்து ஓர் அழைப்பு வந்தது.

மூளையில் காயம் ஏற்பட்டு மருத்துவனையில் சேர்க்கப்பட்ட ஒரு நோயாளிக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர். உடனே மருத்துவர் ஜென்கோ தனது காரில் ஏறிப் புறப்பட்டார். ஆனால் சிறிது தூரம் மட்டுமே அவரால் காரை ஓட்ட முடிந்தது. திடீரென பனிப்புயல் ஏற்பட்டதால் ஆங்காங்கே வாகனங்கள் நிறுத்தப்பட்டு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. போக்குவரத்து சீரடைந்து புறப்பட நேரம் ஆகும் என்பதால், காரை விட்டு இறங்கிய மருத்துவர் ஜென்கோ, கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் விறுவிறுவென நடக்க ஆரம்பித்தார். சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் நடந்தே மருத்துவமனைக்குச் சென்ற அவர், அந்த நோயாளிக்கு குறித்த நேரத்தில் அறுவைச் சிகிச்சை செய்து உயிரைக் காப்பாற்றினார். அவரது பணியை நோயாளியின் குடும்பத்தினர் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் வெகுவாகப் பாராட்டினர். அவர் மட்டும் சரியான நேரத்திற்குள் வராவிட்டால் அந்த நோயாளி சாவடைந்திருப்பார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# வண்ணத்துப் பூச்சிகள் பளபளப்பது ஏன்?


பூச்சி இனத்திலேயே மிகவும் அழகான, அனைவராலும் அறியப்பட்ட பூச்சி வண்ணத்துப்பூச்சி தான்.

உலகில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான வண்ணத்துப் பூச்சிகள் உள்ளன. வெப்ப மண்டலக் காடுகளிலேயே அதிகளவில் காணப்படுகின்றன.

இவற்றின் இறக்கைகளின் மீது வண்ண நிறச் செதில்கள் காணப்படுகின்றன, இவைதான் பூச்சிகளின் பளபளப்பிற்கும் காரணம்.

இவற்றின் செதில்களை அகற்றி விட்டால் தெளிந்த பகுதிபோல் தோன்றும். மேலும் அவைகளால் பறக்கவும் முடியாது.


# உலகின் முதல் மொழி தமிழ்!



அமெரிக்க ஆய்வாளரின் பரபரப்புத் தகவல் -

தமிழின் சிறப்பைத் தமிழர்கள் மறந்து வரும் நிலையில் உலகின் மூத்த வலிமையான மொழி தமிழ் என்ற உண்மையை அமெரிக்க ஆய்வாளர் அலெக்ஸ் கல்லியர் கண்டறிந்து எடுத்துக் கூறி வருகின்றார். தமிழின் சிறப்பை இனிக் கடல்கள் கடந்தும் உலகம் எங்கும் போற்றுவார்கள்! தமிழர் நாமும் எமது அன்னை மொழியைப் போற்றிப் பாதுகாத்துப் பேசி மகிழ்வோம்.


தமிழ் மொழிக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை இருந்திருந்தால் ,ஏன் வேறு மொழியைக் கற்கப் பள்ளிக்கு அனுப்பப்போகிறார்கள் பெற்றோர்கள். ஆனால் ஆங்கிலம் படித்த அத்தனை பேரும் வேலைபெற்று விடவில்லை. தாய்மொழியில் படித்த அத்தனை பேரும் வேலையில்லாமலும் இல்லை. படிப்பு அறிவு வளர்ச்சிக்கும் திறமையை வளர்த்துக் கொள்வதற்கும் தான். வேலை வேலை என்று நாம் எதைக் குறிப்பிடுகிறோம். அலுவலகத்தில் பணிபுரிவதையா? திறமையுள்ளவன் வேலை தேட மாட்டான் தொழில்தேட முனைவான். படித்தவன் அவனிடம் வேலை செய்வான். ஆங்கிலம் அறிவன்று! அது ஒரு மொழி மட்டுமே! மொழி அறிவு, வளர்ச்சிக்கான ஓர் கருவி மட்டுமே! பிறரோடு தகவல் பரிமாறும் ஓர் ஊடகம்! சீனாக்காரனும் ஜப்பான் காரனும் தாய்மொழியில் படித்து முன்னேறும்போது தமிழனால் ஏன்முடியாது? மாயையை விட்டு வெளியில் வாருங்கள் ..



# விண்வெளியில் ஹைட்ரஜன் ஆறு:

அமெரிக்க விஞ்ஞானி கண்டுபிடிப்பு.





**பிகானோ தலைமையிலான குழுவினர் விண்வெளியில் ஹைட்ரஜன் ஆறு போன்று ஓடுவதைக் கண்டுபிடித்தனர்.**

அமெரிக்காவின் மேற்கு விர்ஜினீயா பல்கலைக்கழகத்தின் விண்வெளி விஞ்ஞானி டி.ஜெ.பி. பிகானோ தலைமையிலான குழுவினர் விண்வெளியில் ஹைட்ரஜன் ஆறு போன்று ஓடுவதைக் கண்டு பிடித்தனர்.

அது மிகவும் மங்கலாக, மெலிதாக பரவி ஓடுகிறது. இது விண்வெளியின் பால் மண்டலத்தில் என்.ஜி.சி. 6946 என்ற விண்மீன் கூட்டத்துக்குள் ஊடுருவிப் பாய்கிறது.

இந்த ஹைட்ரஜன் ஆறு பூமியில் இருந்து 2 கோடியே 20 இலட்சம் ஒளி ஆண்டு தூரத்தில் உள்ளது என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இதுவே விண்மீன் கூட்டங்களை ஒன்றிணைத்து புதிய நட்சத்திரத்தை உருவாக்குகிறது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# விண்வெளி வீரர்களுக்கு தயாராகும் சூடான பீட்சா

விண்வெளி வீரர்களுக்கு சுடச்சுட பீட்சா தயாரிக்கும் 3டி பிரிண்டர் உருவாக்கப்பட்டுள்ளது.

விண்வெளிப் பயணம் மற்றும் விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடும் விஞ்ஞானிகளுக்கு பலவிதமான பாக்கெட் உணவுகள், டின் உணவுகள் மற்றும் குளிர்பானங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் எடுத்துச் செல்லப்படுகின்றன. இருப்பினும் அவைகள் சரிவிகித ஊட்டச்சத்து உணவாக அமைவதில்லை.


இதனையடுத்து விண்வெளியிலேயே தோட்டம் அமைக்க நாசா திட்டமிட்டு வருகிறது.

மேலும் அங்கேயே உணவு தயாரிக்கும் நவீன இயந்திரத்தை உருவாக்க அமெரிக்காவின் நாசா மையம் விரும்பியது.

இதற்காக நாசா விடுத்த கேள்விக் கோரலை, கடந்தாண்டு அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் உள்ள அஞ்சன் என்பவர் நடந்தும் எஸ்.எம்.ஆர்.சி என்ற நிறுவனம் ரூ.78 லட்சத்துக்குப் பெற்றது.

விண்வெளியில் சுடச்சுட பீட்சா தயாரிக்கும் 3டி பிரின்டரை, அஞ்சன் உருவாக்கியுள்ளார்.

இங்க் ஜெட் கலர் பிரின்டரில் இருக்கும் காட்ரிட்ஜ்கள் போல இந்த 3டி பிரின்டரில் இருக்கும் காட்ரிட்ஜ்களில் மைதா மாவு, தக்காளிப் பவுடர், சமையல் எண்ணெய், தண்ணீர், புரோட்டீன், மைக்ரோ நியூட்ரியன்ட்ஸ், ஸ்டார்ச், மசாலா மற்றும் நறுமணப் பவுடர்கள் இருக்கும்.



பட்டனை கிளிக் செய்தால் போதும், 3டி பிரின்டர் முதலில் மாவைத் தண்ணீரில் கலக்கி, கீழே பொருத்தப்பட்டுள்ள சூடான தகட்டில் ஸ்பிரே செய்யும்.

அது வெந்து கொண்டிருக்கும்போதே, தக்காளிப் பவுடர், எண்ணெய், ஸ்டார்ச், புரோட்டீன், மசாலா என ஒவ்வொரு பொருள்களையும் 3டி பிரின்டர் அடுக்கடுக்காக ஸ்பிரே செய்யும். 70 வினாடிகளில் சூடான பீட்சா தயாராகிவிடும். இந்த 3டி பிரின்டர் 30 ஆண்டு காலம் உழைக்கும் திறன் படைத்தது.

விண்வெளியில் நீண்ட கால ஆராய்ச்சி மற்றும் செவ்வாய் கிரக ஆராய்ச்சிகளுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பும் போதும், இந்த இயந்திரம் உணவுத் தேவையை ஈடுகட்ட மிகவும் உதவியாக இருக்கும் என கூறப்படுகிறது.

## குடமுழுக்கு

மாதகல், பெப்.1

மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் சிவபெருமானின் 21 அடி உயர தியான திருச்சொரூபத்துக்கான திருக்குடமுழுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்தக் குட்முழுக்கு செந்தமிழால் நடைபெற வுள்ளது. அன்றைய தினம் செந்தமிழ் சிவதீட் சையும் நடைபெறும். (ந)

**CLARETIAN BOOK SHOP**
**கிளரேசியன் புத்தகசாலை**

கிளாரட் அகம், இல.15, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியிலிருந்து இல 98, சின்னக்கடை, பிரதான வீதி, யாழ்ப் பாணம் எனும் இடத்திற்கு மாற்றப்பட்டுள் ளது என்பதை அறியத்தருகின்றோம்.
மேலதிக விவரங்களுக்கு:
(44185)(3.6.2)
இயக்குநர்,
அருட்தந்தை வின்சன் டி போல்
077 220 7344

**மணமக்கள் தேவை**

* 84 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 78½ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 66 பாவ முடைய விவாகரத்துப் பெற்ற பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ மணமகன் தேவை.
* 77 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 14¾ பாவ முடைய B.Sc கொம்யூட்டர் முடித்து தனியார் நிறு வனம் வைத்திருக்கும் மணமகனுக்குப் படித்த மண மகள் தேவை.
* 84 இல் பிறந்த 2 இல் செவ்வாய் 65 பாவமுடைய B.Sc ஓமானில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த 1 இல் செவ்வாய் 85½ பாவமுடைய பட்டதாரி மணமகனுக்கு அரச பணிபுரியும் மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 1 இல் சூரியனும் செவ்வாயும் 45¼ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மண மகனுக்கு மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 37 பாவ முடைய விவாகரத்துப் பெற்ற லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு படித்த மணமகன் லண்டனில் தேவை.
* 85 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 63 பாவமுடைய நோர்வேயில் டாக்டராகப் பணிபுரியும் மணமகளுக்கு நோர்வேயில் டாக்டர் இஞ்சினியர் மணமகன் தேவை.

தொடர்பு:
(43726) (4.6.3) கமலக்கண்ணன் திருமண சேவை
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.077 607 0862

## கும்பாபிஷேகம்

**நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபி ஷேக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.36 மணி முதல் 7.45 மணி வரை இடம்பெறும். முன்னதாக இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறும். (ந-7)**

◆◆◆

சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் பரத்தைப் புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி, 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் 8 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. வியாழக்கிழமை இடம்பெறும் கும்பாபிஷேக நிகழ்வைத் தொடர்ந்து நண்பகல் அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகமும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வாடகைக்கு**

நல்லநிலையில் உள்ள 240 ரக்ரர் சாரதி யுடன் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:077 471 0318
(29751)(3.6.4)

**பெயர்மாற்றம்**

மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தைச் சேர்ந்த சிவகுமாரன் இராஜேஸ்வரி என்னும் எனது பெயரை இன்றிலிருந்து (01.02.2014) சிவகுமாரன் பரமேஸ்வரி என பெயர்மாற்றம் செய்து கையொப்பம் இடுவேன் என அனை வருக்கும் அறியத்தருகின்றேன்.
(29752)(3.6.4) சி.பரமேஸ்வரி

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1985, ரேவதி, 2 இல் சூரியன், செவ்வாய், கிரகபாவம் 25, பிரபல தனியார் நிறுவனங்களின் உரிமை யாளரும், உயர் பதவி வகிப்பவருமான மணமகனுக்கு பெற்றோர் படித்த, பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கின்றனர். சாதக குறிப்பு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்.
விளம்பர இல. 4484,
மே/பா, உதயன், (44133) (45.6.3)
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**தேவை**

சகலவிதமான நெல் மற்றும் தானிய வகைகள் கொள்முதல் செய்யப்படும்.
தொடர்பு: சிவா பிறதர்ஸ்
இல.205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:077 772 2215 (44177) (4.6.3)

## கோட்டக் கல்விப் பணிப்பாளர் நியமனம்

வலி. வடக்கு, பெப். 1

நீண்டகாலமாக நிரப் பப்படாது இருந்த உடு வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வெற்றி டம்கடந்ததிங்கட்கிழமை முதல் நிரப்பப்பட்டுள் ளது. வட மாகாண கல் வித்திணைக்களத்தில் கடமையாற்றிய தில்லை நாதன் தர்மலிங்கம் தற்போது இந்தப் பத வியில் நியமனம் செய் யப்பட்டுள்ளார் என வலிகாமம் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திர ராசா தெரிவித்துள்ளார். கடந்த ஒன்றரை வரு டங்களாக குறிப்பிட்ட கோட்டக் கல்விப் பணி மனை கல்விப் பணிப் பாளர் இன்றி பதில் கல் விப் பணிப்பாளருடன் இயங்கிவந்தமைகுறிப் பிடத்தக்கதாகும். (ந-86)

## உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் வெற்றிடம் நிரப்பப்படும்

வலி. வடக்கு, பெப் . 1

வலிகாமம் கல்வி வல யத்தில் பாட ரீதியாக நிலவும் உதவிக் கல் விப்பணிப்பாளர்களின் வெற்றிடங்கள் இரண்டு வார காலத்தில் நிரப் பப்படவுள்ளதாக வலி காமம் வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந் திரராசா தெரிவித்துள் ளார்.

வலிகாமம் கல்வி வல யத்தில் தற்போது உடற் கல்வி, சமூகக்கல்வி, வர்த்தகம், தொழில் நுட்பம் ஆகிய பாடங் களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர், முறைசாராக் கல்வி உதவிக்கல்விப் பணிப் பாளர் பதவிகளுக் கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்த வெற்றிடங்களுக் கான பதவிகளை நிரப்பு வதற்கு நேர்முகப் பரீட் சைகள் ஏற்கெனவே முடிவடைந்துள்ளதாக வும் அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் விரைவில் உரியவர் களுக்கு வழங்கப்பட வுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-86)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.1

சுகாதாரத் திணைக்களத்தில் கட மையாற்றும் குடும்பநல சேவை யாளர் தரம் II 'அ' பிரிவுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட் சைக்கும், திணைக்களப் பரீட்சைக் கும் தோற்றவுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

தரம்IIஅல்லது வகுப்புII 'அ' பிரிவில் நியமனம் பெற்றவர்களும், தரம்III, வகுப்பு II 'ஆ' பிரிவு பரீட்சையில் சித்தி பெற்று உரிய சேவைக்காலத்தை பூர்த்தி செய்து தரம்II அல்லது வகுப்புII 'அ' பிரிவுக்கு நியமிக்கப்படாதவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சுகாதார அமைச் சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ந-9)

◆◆◆

யாழ்ப்பாணம், பெப்.1

நீதிமன்ற வளாகத்தில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

சாவகச்சேரி, மல்லாகம், யாழ்ப் பாணம், ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களின் வளாகங்களில் ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப் புப் பணிகளை மேற்கொள்வதற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

தகுதியுடைய நிறுவனங்கள் எதிர் வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப் பிக்க முடியும். மேலதிக விவரங் களை யாழ்ப்பாணம் மேல்நீதிமன் றக் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ளலாம். (ந-14)




வரலாற்றுச் சிறப்புமிக்க கிளிகரைச்சி, புளியம்பொக்கணை
**திருவருள்மிகு நாகதம்பிரான் ஆலயம்**
**மஹா கும்பாபிஷேகம் - 2014**
கர்மாரம்பம் நாளை (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 6.46 மணிமுதல்
எண்ணெய்க்காப்பு (07.02.2014) வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணிமுதல் ஆரம்பம்
எண்ணெய்க்காப்பு நிறைவு:- (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை
நண்பகல் 12.30 மணி (மூன்று நாள்கள் நடைபெறும்)
மஹா கும்பாபிஷேகம் (10.02.2014) திங்கட்கிழமை
காலை 7.00 மணிமுதல் 7.46 வரை
நாகதம்பிரான் அடியவர்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகைதந்து நம்பிரானைத் தரிசித்து தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகத்திலும் (இரண்டு பட்சம் 30 நாள்கள்) சங்காபிஷே கத்திலும் கலந்து நாகதம்பிரானின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.
கரைச்சி, புளியம்பொக்கணை, பரந்தன், கிளிநொச்சி. (C/11364)(2.6.3)
ஆலயகுரு, தர்மகர்த்தா, பரிபாலன சபை.

**அற்றோனித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

திரிவேணி கஜரோகனன் ஆகிய நான் என்னால் இல.16, மணல்தறை லேன், கந்தர்மடம், திருநெல்வேலியில் அமைந்துள்ள சொத்து பராமரிப்பு தொடர்பாக கருணாகரவல்லி சோமநாதன் என்பவருக்கு கொடுக்கப்பட்ட அற்றோனித் தத்துவத்தை இல.440 எனும் இலக்க முடைய மேனகா மோகன் ஆகிய சட்டத்தரணியினால் 30.01.2014 அன்று எழுதப்பட்ட அதிகாரத்தின்படி இரத்துச் செய்யப் பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(44201) (45.6.3) திரிவேணி கஜரோகனன்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்.உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் முன்னிலையில் 27.01.2014 திங்கட்கிழமை அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட
**ஆறுமுகம் ஜெயபாலசிங்கம்**
(வள்ளுவர் அக்கடமி இயக்குநர்)
அவர்கள் இன்னும் பல பட்டங்கள் பெற்று நீடூழி காலம் சிறப்புற்று விளங்க அக மகிழ்ந்து வாழ்த்துவதோடு, கல்வளையான் பேரருள் வேண்டி இறைஞ்சுகின்றோம்.
வாழ்த்துவோர்:
கல்வளை, சண்டிலிப்பாய்.
திரு-திருமதி செல்லையா தம்பதிகள்.
(44187)(2.6.3) (ஓய்வுபெற்ற பிரதி அதிபர். அதிபர்)

**சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம்**

**தவத்திரு யோகசுவாமிகளது ஐம்பதாவது குருபூசை தினம் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி** கொண்டாடப்படவுள்ளது.
இதனையொட்டி யோகசுவாமிகளது அருளமுதமான நற் சிந்தனைப் பாடல்களை இசையுடன் பாடுவதற்கான போட்டி யொன்றினை மாணவர்களுக்கிடையே நடத்து வதற்கு குருவருள் கூடியுள்ளது.
இப்போட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையேயும் திறந்த போட்டியாகவும் நடைபெறும்.
போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களைச் சிவதொண் டன் நிலையத்தில் (434, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்) நேர டியாகவோ அல்லது தபால்மூலமோ பெற்று 15.02.2014 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.
பாடல் விவரங்கள், போட்டி விதிகள் விண்ணப்பப்படி வத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
போட்டி நடைபெறும் இடம், திகதி பத்திரிகை மூலமும் விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட கடிதம் மூலமும் அறி விக்கப்படும்.
(44149) (4.6.3)
சிவதொண்டன் சபையினர்,
434, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**SUPPLIERS WANTED**

இயக்கச்சியில் உள்ள எங்கள் பண்ணைக்குக் கீழ்வரும் பொருள் களையும் சேவைகளையும் வழங்கத் தகைமையுள்ள ஒப்பந்தகாரர்கள் தேவை.

* 170 தொன் நன்கு காய்ந்த மாட்டெரு
* பண்ணையின் உள்ளே தேவையான கட்டடங்களைக் கட்டக்கூடிய பதிவு செய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரர்கள்

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்:
Heritage Agri-Plantation Division
101, Anandanagar,
Kilinochchi.
☎ 077 345 0866
HERITAGE
HERITAGE AGRI
(43505)(10.6.3)

## வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி

### அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் 01.01.2013ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது 08.02.2013ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும் உள்ளூராட்சி ஆணையாளர் வடக்குமாகாணம் அவர்களின் NP/14/01/ET/ET5/ser.min/Gu/2013 இலக்க 20.01.2014ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாகவும் கீழ் காணப்படும் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்.**

1. இப்பதவி நிரந்தரமானதும். ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள். அநாதைகள் ஓய்வூதியத்திற்கு சம்பளத்திற்கேற்ப பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

**அடிப்படைத் தகைமைகள்:-**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்தினத்தன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும். ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும். சிறந்த ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும்.(கிராம உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
5. தொழில்நுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும். மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் முறை:-

❖ கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை

1. வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ரூபா 100.00 செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு **"செயலாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர். பதவி இலக்கம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.
5. ஆள்சேர்ப்பு திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னராகவோ, நியமனத்திற்கு பின்னராகவோ, நியமனத்தின்போதோ அல்லது விண்ணப்பத்தில் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் வழங்கப்பட்டிருக்குமாயின் நியமனமும் உடனடியாக முடிவுறுத்தப்படும்.
6. விண்ணப்பங்கள் யாவும் 17.02.2014ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பதவிகள் பற்றிய விவரங்கள்.

| பதவி இல | பதவிப்பெயர் | தரம் |
|---|---|---|
| 01. | காரியாலய காரிய சகாயர் (KKS) | III |
| 02. | நூல் நிலைய பரிசாரகர் | III |
| 03. | வேலை / வெளிக்கள தொழிலாளர் | III |
| 04. | சுகாதாரத் தொழிலாளி | III |

சம்பள அளவுத்திட்டம்: PL-1-2006-A (11,730-10X120-10X130-10X145-12X160-17,600)

**மேற்குறித்த பதவிகளுக்கான கல்வித்தகைமைகள்.**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

| பதவி இல | பதவிப்பெயர் | தரம் |
|---|---|---|
| 05. | ஆயுர்வேத மருந்துக் கலவையாளர் | III |
| 06. | மின்னிணைப்பாளர் | III |

சம்பள அளவுத்திட்டம்: PL-2-2006-A (12,210-10X130-10X145-10X160-12X170-18,600)

**மேற்குறித்த பதவிகளுக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
1. **தொழில்சார் தகைமைகள்.**
இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித்திகதியன்று ஆறு மாதங்களுக்குக் குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் கல்வி நிறுவனத்திலிருந்து துறைசார்ந்த பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (National Vocational Qualification Certificate Level - III)

| பதவி இல | பதவிப்பெயர் | தரம் |
|---|---|---|
| 07. | சாரதி | III |

சம்பள அளவுத்திட்டம்: PL-3-2006-A (12,470-10X130-10X145-10X160-12X170-18,860)

**மேற்குறித்த பதவிகளுக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**

2. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
1. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை (Class of Vehicle C, C1) விண்ணப்ப இறுதித்திகதிக்கு மூன்று (03) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் வாகன சாரதியாக மூன்று (03) வருட அனுபவத்திற்கான சான்றிதழ்.
3. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5அடி 2½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி இரவு. பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. விண்ணப்பதாரி கழிவகற்றும் வாகனமும் செலுத்துதல் வேண்டும்.

❖ **மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளில் 3,4,7 ஆகிய இலக்க பதவிகளுக்கான உரிய கல்வித்தகைமைகளுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் தரம் 8 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.**

**சீ.மனோகரன்**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி.**

(C 11370)(10.6.3)

## நரம்பியல் விடுதி திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நரம்பியல் நோய்களுக்குச் சிகிச்சை வழங்கும் 31 ஆம் இலக்க விடுதி நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குத் திறந்து வைக் கப்படவுள்ளது.

இந்த விடுதியை கொழும்பு தேசிய மருத்துவமனையைச் சேர்ந்த சிரேஷ்ட நரம்பியல் ஆலோசகரும், பேராசிரியருமான ரஞ்சினி கமகே திறந்து வைக்கவுள்ளார். (க)

## பருத்தித்துறை நகர மலசலகூடங்களை பயன்படுத்தலாம்

வடமராட்சி, பெப்.1

பருத்தித்துறை நகருக்கு வந்து செல்லும் பொதுமக்கள் நவீன சந்தையிலும், மீன் சந்தையிலும் உள்ள மலசலகூடங்களைப் பயன்படுத்தலாம் என நகரசபைத் தலைவர் சபா ரவீந்திரன் தெரிவித்தார்.

இரு சந்தைகளிலும் ஆண்கள், பெண்களுக்கென தனித்தனி யான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை அடிக்கடி சுத்தப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர் நகரில் பொருத்தமான இடம் கிடைக்கும் பட்சத்தில் பொது மலசல கூடம் அமைக்கவும் உத்தேசித்துள்ளோம் எனவும் குறிப்பிட்டார். (ஓ-173)

## மெய்வன்மைப் போட்டி

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ். சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி அதிபர் எஸ். அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினராக விக்ரோறியாக் கல்லூரி அதிபர் வி. ஸ்ரீகாந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

## ஏகாதசினி மஹா யாகம்

யாழ்ப்பாணம், பெப்.1

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் உலக அமைதி, உலக சுபீட்சம் என்பவற்றை வேண்டி ருத்ர ஏகாதசினி மஹா யாகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 2 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த யாகம் கோப்பாய் பிரதேச சபை அருகில் சாயி சுதா சத்திய சாயி பயிற்சி நிலையத்தில் சிவ ஸ்ரீ வை.மு.ப. முத்துக்குமார சாமி சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறும். (ந)

## அபராதம்

நாவற்குழிப் பகுதியில் சட்டவிரோத போதைப் பொருளான கஞ்சா வைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=,
நால்வர் 2000/= (Attached Bathroom)
**Hotel Villa City,**
**422, Galle Road, Wellawatte.**
T.P : 072 255 2222
(சி/11670)(7.6.3)

**வாடகைக்கு**

அரச வீதி, உரும்பிராயில் கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில், பலாலி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் 10 பரப்பில் அமைந்துள்ள 5 அறை, சமையலறை கொண்ட 2500 சதுர அடி வீடு சகல வசதிகளுடன், நிறுவனங்களுக்கு, உத்தியோகத்தர்களுக்கு வாடகைக்குண்டு.
(ப11672)(18.3.6) தொடர்பு: 077 839 4434

**உலகப் புகழ்பெற்ற ஆதிசக்தி அருள்வாக்குப் படைத்த ஜோதிடர்**

K. செந்தில்நாதன்
யாழ் நகர் வருகை

கைரேகை, ஜாதகம், பெயர் ராசி,
எண் கணிதம், வாஸ்த்து

தொடர்பு : நாதன் இன் (கமல்)
593 1/1, மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் அருகில்) யாழ்ப்பாணம்.
யாழ் - 077 329 7046, 075 673 7757
இந்தியா - 0091 786 796 5090 (44195)(7.6.3)

**தேவை**

✱ விற்பனைப் பிரதிநிதிகள் ✱ பணம் வசூலிப்பாளர்

எமது நிறுவனத்திற்கு மேற்கண்ட பதவிகளுக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. விற்பனைப் பிரதிநிதிகளுக்கு மாதாந்தம் அடிப்படை வேதனமாக 15,000/= ரூபாவும் பணம் வசூலிப்பாளர்களுக்கு விற்பனைத்தொகையில் கமிஷனாக ரூபா 35000/= தொடக்கம் ரூபா 45000/= வரை சம்பாதிக்கலாம் உணவு, இருப்பிடம் இலவசம்.

**சுஜித் என்ரபிறைசஸ்**
டச்சு வீதி, சாவகச்சேரி (சி.7640) (45.6.3)
தொ.பே. 021 227 0586/ 075 242 9533

**மாந்தை மேற்கு பிரதேச சபையில் நிலவும் அட்டவணைப்படுத்தப்படாத வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் - 2014**

**30.01.2014ஆந் திகதிய விளம்பரத்தில் மின்னியலாளருக்கான தகைமையில் இத்தொழில் சார் தகைமையும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.**

**தொழில்சார் தகைமை-மின்னியலாளர்**
1. **அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் தொழில் சார் தகைமை ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

**ச.ஜெனிங்ஸ்**
செயலாளர்,
**மாந்தை மேற்கு பிரதேச சபை,**
**அடம்பன்.**
(சி/11371)(7.6.3)

**வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் (வ.து)**
**வருடாந்த பொதுக் கூட்டம் - 2014**

**மேற்படி கூட்டம் 2014.02.23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் தனி நபர் பிரேரணைகளை 2014.02.10 ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளருக்கு முருகநாமம், மல்லாகம் என்னும் முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

**அங்கத்தவர் முகவரி மாற்றம் இருப்பின் அறிவிக்கவும்.**

சி.அருளானந்தசிவம் — தலைவர்.
மு.அருளையா — செயலாளர்
(சி.11368) (45.6.3)



மாணவர் களுக்கான கௌரவிப்பு விழாவின் போது.

# உயர்தரப் பரீட்சையில் மாகாணத்தில் முதலிடம் பெற்றோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

2013 ஆம் ஆண்டின் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் மாகாண ரீதியில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

வட மாகாணக் கல்வி அமைச் சின் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு சாதனைக்குரிய மாணவர் களைக் கௌரவித்தார்.

இதன்போது அவர் உரை யாற்றுகையில்,

கஷ்டப் பிரதேசங்களில் பரீட் சைப் பெறுபேறுகள் பின்ன டைவை எதிர்கொள்ளக் காரணம் அங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையே என்று தெரிவித்தார்.

இங்கு கௌரவிக்கப்படும் ஒவ்வொரு மாணவர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள். வடபுலத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் பற்றாக்குறை என்பது பெரியதொரு பிரச்சினையாகவுள்ளது. இன்றும் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவு கின்றது.

வடபுலத்தில் சிரமமான நிலையில் கற்றற் செயற்பாடுகளை முன்னெடுக்கும் சூழ்நிலைக்கு ஆளாகியுள் ளோம். எமது மாகாணத்தின் கற்றல் நிலைப்பாடு மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் நாட்டின் கல்வி அமைச்சருடன் கலந் துரையாடினேன். உயர்தரத்தைப் பொறுத்தவரை பரீட்சைக்கான ஆண் டின் ஜனவரி மாதம் முதல் உயர்தர மாணவர்கள் பாட சாலைக்கு வருவதை நிறுத்தி விடுகின்றனர்.

இது தொடர்பில் பாடசாலை நிர்வாகத்திடம் கேட்டால் "மாணவர்கள் நன்றாகப் படிக்கிறார்கள். ஆனால் பாட சாலையில் இல்லை. அருகிலுள்ள தனியார் கல்வி நிறுவ னத்தில்' என்கின்றனர். இத்தகைய நிலையில் நாம் உள்ளோம்"-என்றார்.

வடக்கு மீன்பிடி அமைச்சின் செயலாளர் இதேவேளை நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் உரை நிகழ்த்துகையில்,

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி விட்டால் அதன் பின்னர் வரும் பரீட்சைகள் எல்லாமே சுலபமானவை. மாணவர்கள் எமது நாட்டில் கல்வியைக் கற்றுவிட்டு வெளிநாட்டுக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது. எனினும் எமது சமுதாயத்தில் படித்து எமது சமுதாயத்திலேயே பணி புரியும்போதுதான் மதிப்பு அதிகமாகின்றது.

இங்குள்ள மாணவர்கள் ஒவ்வொருவரும் இன்று முதல் எமது சமுதாயத்துக்கு பணியாற்ற முன்வர வேண்டும். உங்களை எமது சமு தாயத் துக்கு அர்ப் பணிக்கத் தயாராக வேண் டும்- என்றார்.

நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், வடமாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ-10)

# ஊடகவியலாளர் வீட்டில் திருட்டு

கல்முனை, குவாரி வீதியில் வசிக்கும் பிராந்திய ஊடகவியலாளர் ஆர்.தில்லைநாயகத்தினுடைய கடை உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த பணம் மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அவரது வீட்டுக்குள் இருந்த பணமும் படப்பிடிப்புக் கருவிகளும் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது என்று கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

கல்முனை, குவாரி வீதியில் வசித்து வந்த பிராந்திய ஊடகவி யலாளர் தில்லைநாயகத்தின் வீட்டின் வளவுக்குள் இருந்த சில்லறைக் கடையை உடைத்து அதற்குள் இருந்த பணத்தையும் பொருள்களையும் திருடிய பின்பு வீட்டின் பின் கதவை உடைத்து வீட்டுக்குள் இருந்த பணம் மற் றும் படப்பிடிப்புக் கருவியையும் திருடர்கள் எடுத்துக்கொண்டி ருந்தபோது, வீட்டில் உறங்கியவர்கள் ஆள் நடமாட்டத்தை அறிந்து யார் என கேட்டபோது திருடர்கள் தப்பி ஓடி உள்ளனர்.

அதனையடுத்து திருட்டுச்சம்ப வம் இடம்பெற்றமை தெரியவந்த தைத் தொடர்ந்து பல இடங்களிலும் திருடர்களைத் தேடிய போதும் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்று வீட்டு உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து கல்மு னைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பிரிட்டனுக்கு ஆள்கள் கடத்தும் கும்பலுக்குச் சிறைத் தண்டனை

பிரான்ஸ் நாட்டிலிருந்து பிரிட்டனுக்கு இலங்கையர்களைக் கடத்தும் ஐந்து பேர் கொண்ட குற்றவாளிக் கும்பலுக்கு மொத்தமாக 23 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கென்ற் பொலிஸார், தேசிய குற்றப்புலனாய்வுத் துறையினர் மற்றும் பிரான்ஸ், ஜேர்மன், சுவிஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்ட அமுலாக்கல் பிரிவினர் ஆகியோரின் உதவியுடன் உள்துறை அமைச்சகத்தின் தலைமையில் இடம்பெற்ற விசாரணைகள் மூலமாக நான்கு இலங்கையர்களும் ஒரு பிரிட்டிஸ் பிரசையும் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் குழுவினர் இலங்கையின் சட்டவிரோதக் குடியேறிகளை வாகனங்களில் ஏற்றிச் சென்று ஆங்கிலக் கால்வாயிலுள்ள துறைமுகம் ஊடாக பிரிட்டனுக்குச் செல்வதற்கு உதவி புரிந்துள்ளனர். இதற்காக சட்டவிரோதக் குடியேறிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் தலா 4,500 ஸ்ரேலிங் பவுன்களை அறவிட்டுள்ளனர்.

மேலும் பிரிட்டனைச் சென்றடையும் சட்டவிரோதக் குடியேறிகள் சிலர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வட அமெரிக்காவுக்குச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 29 ஆம் திகதி மெயிட்ஸ்ரோன் நீதிமன்றம் ஆள்களைக் கடத்தும் குழுவின் தலைவனான 37 வயதான சுதர்சன் ஜெயக்கொடிக்கு 5 வருடம் 4 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கியது. இதே போன்று 39 வயதான கமலநேசன் கந் தையா, 42 வயதான சுப்பிரமணியம் விக்னராசா, 46 வயதான பிரிட்டிஷ் பிரசையான அமர்ஜித் முத்தார், 41 வயதான ஜோன் அனெஸ் சௌந்தரநாயகம் ஆகியோருக்கு முறையே5 வருடங்கள், 3 வருடம் 4 மாதங்கள், 4 வருடம் 8 மாதங்கள், 5 வருடம் என்ற அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டது. (க)

# திருட்டு முயற்சி முறியடிப்பு; ஒருவர் மடக்கிப் பிடிப்பு

தென்மராட்சி, பெப்.1

தச்சுத் தொழில் நிலையத்தில் பொருத்தப்பட்டி ருந்த இரண்டு மின் மோட்டார்களைத் திருட முயன்ற வேளை யில் அயலவர்கள் விழித்துக் கொண்டதால் திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டதுடன் திருட முயன்ற ஒருவரைப் பிடித்துள்ளனர். மற்றொருவர் தப்பியோடி விட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்றது.

இரவுவேளையில் தச்சுத் தொழில் நிலையத்தில் சத்தம் கேட்டதை அவதானித்த அயலவர்கள் ஏனையோருக்கு தொலைபேசியில் தகவல் கொடுத்ததும் அனைவரும் தச்சுத் தொழில் நிலையத்தைச் சுற்றி வளைத்தனர். அந்த வேளையில் திருட வந்த இருவரும் தப்பி யோட முயற்சித்த வேளையில் ஒருவரைப் பிடித்த போதிலும் மற்றவர் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிடிபட்ட நபர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ந-9)

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEPLEX - CARGILLS SQUARE

(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

# மரண அறிவித்தல்



## இரத்தினம் கிருஷ்ணகாந்தா

நுணாவில் கிழக்கு, கல்வயல் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் கிருஷ்ண காந்தா 29.01.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினம் - சிவபூசணம் தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புத்திரனும், ஜனார்த்தனனின் (கனடா), அன்புச் சகோதரனும், மயூரியின் (அமெரிக்கா) அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசம்மா, பூபாலராசசிங்கம் -மனோன்மணி தம்பதியரின் பேரனும், சிவராசா - சுதர்சினி தம்பதியரின் (கனடா), மருமகனும், கிருஷ்ணகுமார் - சிவசோதி, சிவகுமாரி (கனடா), காலஞ் சென்ற இராசசுந்தரம் மற்றும் லோகேந்திரன், கனகசுந்தரம் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. இரத்தினம் (தந்தை),
இ. ஜனார்த்தனன் (தம்பி)
077 322 3366/077 778 4092

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

(29753)(45.6.3)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளையதினம் பி.ப. 3 மணிக்கு வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு விடயங்கள் இந்தக் கூட்டத்தில் ஆராயப் படவுள்ளன. மேலும் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப் படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (க-402)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பிரதி அதிபர் க.மகேஸ்வரன்
அவர்களின் அன்பு மாமனார்

## சுப்பிரமணியம் இராசரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபத்தினைத்
தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

அதிபர், ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/கோப்பாய் மகாவித்தியாலயம்.

(44188) (10.6.3)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரிய நூலகர்
திருமதி லலிதாம்பிகை மகேஸ்வரன் அவர்களின் அன்புத்தந்தை

## சுப்பிரமணியம் ராஜரட்ணம்

அவர்கள் 31.01.2014 இறைபதமடைந்துவிட்டார்.
அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி கழகம்,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்.

(சி11369) (12.3.6)

# முருகானந்தா விழிப்புணர்வுக் கருத்தரங்கில் இணையம் தொடர்பான சிறப்பு விரிவுரை

கிளிநொச்சி, பெப்.1

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற தகவல் தொழில்நுட்ப விழிப்புணர்வுக் கருத்தரங்கின் போது இணையப் பாவனை தொடர்பான விரிவுரை சிறப்பு அம்சமாக இடம் பெற்றுள்ளது.

உலகத்தையே ஒரு சிறு கிராமமாக மாற்றி எண்ணிலடங்காத சாத்தியங்களை உருவாக்கிய பெருமை தகவல் தொழில் நுட்பத்தையே சாரும். இதன் உச்சக்கட்டக் கண்டு பிடிப்பான இணையம் தனி நபருக்கும்சமூகத்துக்கும் வழங்கும் நன்மைகள் அளப்பரியன. இந்த இணையம் தொடர்பான கருத்தரங்கில் இலங்கையின் புகழ்பெற்ற பேச்சாளரான கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இஸ்ரத் இஸ்மாயில் என்பவர் முக்கிய பங்கை வகித்தார். அவர் இணையத்தைப் பயன்படுத்துதல், கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், இணையத்தைப் பயன்படுத்தி வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வீட்டிலிருந்தபடியே இணையத்தைப் பயன்படுத்திச் சுயதொழிலை மேற்கொள்ளல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய வகையில் தமது விரிவுரையை நிகழ்த்தினார்.

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் நேற்று முன்தினம் தகவல் தொழில்நுட்ப விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

**காணி விற்பனைக்கு**

A9 வீதி, பளைச் சந்தைக்கு மிக அருகில் 3 1/2 பரப்புக் கடைத் தொகுதி அமைப்பதற்கு மிகப்பொருத்தமான காணி விற்பனைக்குண்டு.

T.P:- 0777 250584

**வெளிநாட்டு வேலை வாய்ப்பு**

மலேசியாவில் Car Company மற்றும் (Hotel, Room Boy, cook) வேலை வாய்ப்புகள் உள்ளன.
சம்பளம் :- 65000 + OT (Car Company)
55000 + OT (Hotel)
Quatar Milk Factory Vacancy 45000 + OT
Dubai Driver, Salary 2000 Riyal
House Maid Vacancies Also Available
TP:- 077 6632608, 077 5829547

# மின்சாரம் வழங்கப்படாத கரும்புள்ளியான் கிராமம்

முல்லைத்தீவு, பெப்.1

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்குட்பட்ட கரும்புள்ளியான் கிராமத்துக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையால் இப்பகுதியில் உள்ள 120 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

கரும்புள்ளியான் கிராம அலுவலர் பிரிவின் கீழ் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் இந்தப் பகுதிக்கு இதுவரை மின்னிணைப்புக்கள் வழங்கப்படவில்லை. 2010 ஆம் ஆண்டு முதன்முதலில் மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கிராமத்தைக் கடந்து ஏனைய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கிராமத்துக்கு இன்று வரை மின்னிணைப்புக்கள் வழங்கப்படவில்லை. இதனால் இங்கு வாழ்கின்ற பாடசாலை மாணவர்கள், இரவு வேளைகளில் மண்ணெண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்துவதுடன் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்ற நிலை காணப்படுகின்றது. ஆகவே இந்தப் பகுதிக்கு மின்சார இணைப்புக்களை பெற்றுத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

**கற்பதற்கு எதுவும் தடையில்லை**
**உங்களிடம் அதற்கான ஆர்வமிருக்குமிடத்து**

உங்களது மேலதிக திறமைகளை வளர்த்துக் கொள்வதில் ஆர்வமுள்ளவரா நீங்கள்?

அப்படியாயின் சரியான இடத்தையோ அல்லது துறையையோ தெரிவுசெய்வதில் குழப்பமா?

கவலையைவிடுங்கள்! கீழே உள்ள வினாக்களில் உங்களுக்கு தெரிந்தவற்றுக்கு சரியான பதிலை SMS அனுப்பி அத்துறை தொடர்பான மேலதிக விடயங்களை அறிந்து - கொள்ளும் எதிர்வரும் February 9ம் திகதி நடைபெறவுள்ள செயலமர்வில் பங்குபற்றும் வாய்ப்பை பெறுங்கள்.

1. இந்த இலட்சினை எந்த கணனிமொழியைக் குறிக்கிறது?
   A) Maya B) Java C) Word
2. கணனியால் புரிந்து கொள்ளக்கூடிய உள்ளீடுகள் என்ன?
   A) 0,1 B) 1,2 C) 2,3
3. When drawing in 2D, what axis do you not work with?
   A) x B) y C) z
4. How many AutoCAD objects are in a rectangle?
   A) 1 B) 4 C) 8

(கேள்வி) (பதில்) Sent to 077 555 81 55

உதாரணம் கேள்வி 1 க்கான பதில் C எனில் 1 C என type செய்து அனுப்பவும்

IDM சாவகச்சேரி, தொலைபேசி - 021 7 200 600
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகில்,
ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்க்கு மேல் (2ம்) மாடியில்

# அணைக்கட்டின் நீளத்தை அதிகரிக்க வேண்டுகோள்

## விடுத்தனர் ஆனைவிழுந்தான்குளம் மக்கள்

கிளிநொச்சி, பெப்.1

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளத்தின் அணைக்கட்டினை நீளமாக்கித் தருமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 1983 ஆம் ஆண்டு தென்னிலங்கையிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஆனை விழுந் தான் குடியேற்றத்திட்டத்தில் 1985 ஆம் ஆண்டு குளத்தின் அணைக்கட்டு வேலைகள் நடைபெற்றன.

இங்குள்ள மக்களுக்கு வயல் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட போதிலும் போர்ச்சூழல் காரணமாக வயல்நிலங்களில் சிறுபற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. வயல் நிலத்தில் வளர்ந் துள்ள சிறுபற்றைகளை துப்புரவு செய்து பயிர்ச் செய்கைக் குட்படுத்துவது தொடர்பான கூட்டத்தில் குளத்தின் அணைக்கட்டினை நீளமாக்கித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். அணைக்கட்டினை நீளமாக்குவதன் மூலம் குளத்தில் கூடுதலான நீர் சேகரிக்கப்படுவதுடன் கிராமத்தைக் குறுக்கறுத்து பாயும் மழை வெள்ளத்தையும் கட்டுப்படுத்தமுடியுமென மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் கிராமம் உருவாக்கப்படும் போது அவசரம் அவசரமாக வீடுகள் அமைக்கப்பட்டதன் காரணமாக திட்டமிடல் இல்லாத ஒரு கிராமமாக ஆனை விழுந்தான்குளம் விளங்குவதுடன் இந்தக் கிராமத்தின் மேற்குப் பகுதி உவரடைந்து வருவதன் காரணமாக பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து வன்னேரிக்குளம் அக்கராயன் பகுதியில் குடியேறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-18)

உங்களது வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தம் செய்து தருகிறோம்
அழையுங்கள் 077 9086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road, Jaffna.

**ENGLISH PERSONAL CLASSES**
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்
அனுபவமிக்க ஆசிரியர் யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 6589443

LANKA ASHOK LEYLAND
TUSKER SUPER 1618(2012)
HALF BODY
தொடர்பு: 077 480 1734

**பெயர் மாற்றம்**

மண்டைதீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த சாமுவேல் தருமசகாயம் என இதுவரை பாவித்துவந்த எனது பெயரை இன்று முதல் சாமுவேல் தருமசகாயம்பிள்ளை என மாற்றம் செய்துள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத் தருகிறேன்.

சா.தருமசகாயம்பிள்ளை

(சி/11372)(7.8.3)

**மரண அறிவித்தல்**



**பாலசிங்கம் மகேஸ்வரி**

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் மகேஸ்வரி நேற்று (31.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சிறீகாந்தன் மற்றும் ஜீவா, பாஸ்கரன், ஜீவமலர் (வசந்தி -லண்டன்), உதயகுமாரி (ஜீவனா - லண்டன்), பாலேஸ்வரி (வவா) ஆகியோரின் பாசமிகு தாயும் காந்தி, வசந்திமாலா, இராசேந்திரம், உதயகுமார், விமலானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் விஜயரூபன், வினி, தீபன், கரன், மீனா, துஷாளினி, துஸ்யந்தன், துஷாந்தி, தேனுதன், தனுஷன், பிரியங்கா, பிரியன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அருளம்மா, பாக்கியம், நடராசா மற்றும் கண்மணி, இராசமணி ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்கட்டை, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச செயலகம் அருகில்)

தகவல்:
குடும்பத்தினர்.
T P : 021 3210365

**கண்ணீர் அஞ்சலி**



எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி யுகிதா சசிதரன் அவர்களின் அன்புத் தந்தை

**இரத்தினம் திருச்செல்வம்**

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.
(44210) (10.14)

நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**மரண அறிவித்தல்**



**நாகப்பு நல்லையா**

(ஓய்வு பெற்ற எழுது வினைஞர் விவாகப் பதிவாளர்)

மாலாவத்தை வசிப்பிடமாகக் கொண்ட நாகப்பு நல்லையா (28.01.2014) அன்று காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (02.02.2014) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாலாவத்தை புலோலி வடமேற்கு, புலோலி.
T.P : 021 2263984

தகவல்:
குடும்பத்தினர்

**மரண அறிவித்தல்**



**மயில்வாகனம் சிவபூலோகசுந்தரம்**

மயிலியதனை, ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும் Mississauga, Canada வை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிவபூலோகசுந்தரம் 30.01.2014 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளியம்மா (திரவியம்) தம்பதியரின் அருமைப் புத்திரனும், சிவபாதசுந்தரம் - கமலாம்பிகை தம்பதியரின் மருமகனும், சசிகலாவின் கணவரும், விஷ்ணுகாவின் அன்புத் தந்தையும், விமலாவதி, சுசீலாவதி, புஸ்பலீலாவதி, காலஞ்சென்றவர்களான சந்திராவதி, இந்திராவதி, ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புவனகுமார், சத்தியநாதன், தனபாலசிங்கம், நிமலகாந்தன், தயா காந்தன், அசோக்குமார், காலஞ்சென்றவர்களான பரமசாமி, லோககுகதாசன், கலாதீபன் ஆகி யோரின் மைத்துனரும், கிறிஸ்கீசன், வாசீகன், லோகினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை Canada வில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(44203)(2.6)

16, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

**சிவலிங்கப்பிள்ளை தனபாலசிவரஞ்சிதன்**



7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராஜ வீதி, தோப்பு அச்சு வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கப்பிள்ளை தனபால சிவரஞ்சிதன் (30.01.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவலிங்கப்பிள்ளை-நேசமணி தம்பதியரின் ஏகபுத்திரனும், சின்னத்தம்பி-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மநாயகியின் அன்புக் கணவரும், தாரணி, தனுஷா, கஜந்தி ஆகியோரின் தந்தையாரும், நிறஞ்சனன், ரமேஸ்வரன், சந்திரபிரதாப் ஆகியோரின் மாமனாரும், நிகாருஜன், நிதாருகா, கஸ்மிதன், சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், வேலுப்பிள்ளை குலசிங்கத்தாரின் பெறாமகனும், லோகநாயகி, சிவஞான மூர்த்தி, சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற நடேசமூர்த்தி மற்றும் திவாகரமூர்த்தி, வசந்தநாயகி, பாஸ்கரமூர்த்தி(பிரான்ஸ்), சாந்தநாயகி, ஜெயாநாயகி, கிருஸ்ணநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் நாளை(02.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தோப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(44120)(3.8.4)

தகவல்: குடும்பத்தினர்.

# இனந்தெரியாதோரால் சித்தி விநாயகர் ஆலயம் உடைப்பு

மட்டக்களப்பு,பெப்.1
மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு சந்தியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தினுள் அமைந்துள்ள பரிவாரத் தெய்வமான நாகதம்பிரான் விக்கிரகம் புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு அதற்கடியிலிருந்த செப்புத்தகடு திருடப்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வழக்கம்போல் புதன்கிழமை பூசைகள் நிறைவுற்று ஆலயத்தைப் பூட்டிவிட்டுச் சென்றதாகவும் வியாழக்கிழமை மதிய பூசைகளுக்காக வேண்டி மூலமூர்த்தியாகிய ஸ்ரீ சித்தி விநாயகரையும் ஏனைய பரிவாரத் தெய்வங்களையும் கழுவி துப்புரவு செய்து வரும் வேளையில் நாகதம்பிரான் விக்கிரகம் உடைக்கப்பட்டுள்ளதனை அவதானித்தேன் என்று ஆலய குருக்கள் தெரிவித்தார்.

**விநாயகர் ஆலயத்தில் நாகதம்பிரான் விக்கிரகம் உடைக்கப்பட்டது.**

இந்தச்சம்பவம் குறித்து களுவாஞ்சிக்குடிபொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ச)



## சிரமதானத்தில் மாணவர்கள்

மட்டக்களப்பு. தாளங்குடா கல்வியியற் கல்லூரியில் டெங்கு ஒழிப்பு மற்றும் சுற்றாடலைத் துப்புரவு செய்யும் சிரமதான நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபட்டனர். (ச)

## பாதசாரிகள் உயிரிழப்பு 25 சதவீதத்தால் வீழ்ச்சி

மஞ்சள் கடவையில் வீதியைக் கடக்கும் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதால் கொழும்பில் பாதசாரிகளின் உயிரிழப்பு கடந்த காலங்களைவிட 25 வீதத்தால் குறைவடைந்துள்ளது என்று பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரட்ன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தவறான விதத்தில் வீதியைக் கடக்கும் பாதசாரிகளுக்கென விசேடமாக பொலிஸ் போக்குவரத்து தலைமையகத்தில் நடத்தப்படும் வகுப்புகளுக்கு வாரந்தோறும் சுமார் 600 பாதசாரிகள் வரை சமுகமளிப்பதனால் மக்கள் தற்போது வீதி விபத்துகள் குறித்து அதிக விழிப்புணர்வுடன் செயற்படுகின்றனர்.

பாதசாரிகளுக்கு மேலதிகமாக வாகனப் போக்குவரத்துகள் 40 வீதத்தாலும் வழக்கு தாக்கல்கள் 75 வீதத்தாலும் குறைவடைந்துள்ளன.

பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்குமஞ்சள்கடவையைப்பயன்படுத்த வேண்டியது கட்டாயமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து போக்குவரத்துப் பொலிஸார் இது குறித்து அவதானத்துடன் செயற்பட்டனர். முறையற்ற விதத்தில் வீதியைக் கடக்கும் பாதசாரிகளுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருவதுடன் அபராதமாக ஆயிரம் ரூபாவும் அறவிடப்படுகின்றது- என்றார். (ச)

# முஸ்லிம்களின் இழப்புகள் குறித்த கணக்கெடுப்புக்களை நடத்துங்கள்

## ஹஸன் அலி வேண்டுகோள்

கொழும்பு,பெப்.1
இலங்கையில் போர்க் காலத்தில் முஸ்லிம்கள் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புகள்மற்றும்சொத்துச் சேதங்கள் குறித்த கணக்கெடுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

அவ்வாறான கணக்கெடுப்பை அரசே விரைவாக முன்னெடுக்க வேண்டும்.

அதன் மூலமே முஸ்லிம் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளின் பாதிப்புகள் முழுமையாகத் தெரியவரும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ஹஸன் அலி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமது தரப்பில் பல அமைப்புகள் இந்தக் கணக்கெடுப்பு மற்றும் குறிப்புகளை சேகரித்திருந்தாலும், அவற்றுக்கு சட்டரீதியான ஓர் அந்தஸ்து இல்லை. அதனால் அரசே இவ்வாறான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

தமது கோரிக்கை தமிழ் மக்களின் குரலுக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே இருக்கும். தமிழர்களின் நிலைப்பாட்டுக்கு முரணானது இல்லை.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலான காலகட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், வாழ்வாதாரப் பாதிப்புகள் போன்ற விடயங்கள் எங்குமே பதியப்பட்டதாகத் தெரியவில்லை.

முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த கணிப்பீடுகளைச் செய்ய இப்போது தான் காலம் கனிந் துள்ளது.



மு.கா. பொதுச் செயலர் ஹஸன் அலி

இப்போதுதான் போர்க் கால இழப்புகள் குறித்து சர்வதேச மட்டத்தில் பேசப்பட்டு வருகிறது. அதனாலேயே இந்தக் கோரிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன் வைத்துள்ளது.

இலங்கையில் சிங்களவர் மற்றும் தமிழர் தரப்புக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்தே உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் பேசப்பட்டு வருகிறது. அது பாதிக்கப்பட்ட இன்னொரு தரப்பான முஸ்லிம்களுக்கு மிகவும் வேதனையை அளித்துள்ளது- என்றார். (ச)

## பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள்

முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் நீடித்து நிலைக்கக் கூடிய பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏறாவூர் நகர பிரதேச செயலர் பிரிவிலுள்ள மீராகேணி கிராமத்தில் வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இந்தக் கிராமத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் 30 குடும்பத்தவர்களுக்கு பெறுமதியான வாழ்வாதார உதவிக்கான பொருள்கள் வழங்கப்பட்டன.

பாரம்பரிய கைத்தொழிலான பன் புல் உற்பத்தி, பனையோலை உற்பத்திபோன்ற கைத்தொழில்களைச் செய்ய முன்வந்த குடும்பத் தலைவிகளுக்கே இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. (ச)

# மேர்வின் சில்வாவை நியமிக்க வேண்டாம்

## மூத்த அமைச்சர்கள் கோரிக்கை

கொழும்பு,பெப்.1
களனித் தொகுதிக்கான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக அமைச்சர் மேர்வின் சில்வாவை நியமிக்க வேண்டாம் என்று அரசின் மூத்த அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேர்வின் சில்வாவை களனி அமைப்பாளராக நியமிப்பதால் கட்சி ஒரு லட்சம் வாக்குகள் வரையில் இழப்பதற்கு இடமிருப்பதால் இந்த நியமனத்தை வழங்க வேண்டாம் என்று அமைச்சர்கள் பலரும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

களனித் தொகுதியின் அமைப்பாளராக மேர்வின் சில்வா நியமிக்கப்பட்டிருப்பதாக இது வரையிலும் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கவில்லை.



மேர்வின் சில்வா

எனினும் தானே களனித் தொகுதியின் அமைப்பாளர் என்று அமைச்சர் மேர்வின் சில்வா ஊடகச் சந்திப்பொன்றில் வைத்து தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் நடைமுறை போக்குகள் சம்பந்தமாக அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-22)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.1
வட்டுக்கோட்டை வடக்கு, சித்தன்கேணி கற்பகச்சோலை நன்மை விருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 3 மணிக்கு சங்க முன்றிலில் நடைபெறும் என மேற்படி சங்கத்தின் இடைக்கால நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஜே/158 கிராம சேவையாளர் மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரது சமுகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)


**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**இலங்கையின் முதலாவது பரதநாட்டிய கலாநிதி**

Congratulations

பரத நாட்டியத்தில் இலங்கையிலேயே முதலாவதாக கலாநிதிப்பட்டம் பெற்ற

**கலாநிதி ஆனந்தஜோதி தர்ஷனன்**



அவர்களை பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.
பரதநாட்டியத்தில் இளமாணி முதுமாணி முதுதத்துவமாணி ஆகிய பட்டங்களில் முதல் பிரிவு தேர்ச்சியைப் பெற்று கலாநிதிப்பட்டம் பெற்ற ஒரே ஒரு இலங்கையர் என்ற பெருமையும் இவரையே சாரும்

எமது வீரமாகாளி அம்பாளின் மீளா அடியவராக விளங்கும் அம்மையார் இது போன்ற இன்னும் பல உயரிய கௌரவ விருதுகளை பெற்று இவரும் இவரின் குடும்பத்தாரும் மேன் மேலும் சிறக்க எல்லாம் வல்ல அன்னை வீரமாகாளி அருள் பாலிக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

நேசமானிய சாமஸ்ரீ சிவாச்சார்யார் இளவரசு,
சக்திகிரிஜா வியாசர் சக்திதாசன்,
சிவஸ்ரீ. சிவ. கமல்ராஜ்குருக்கள்,
ஆதீன கர்த்தாவும் பிரதமகுருவும்,
(வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)

Best Wishes

இங்ஙனம்
சிவஸ்ரீ.சிவ. கமல்ராஜ்குருக்கள்

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சர்வதேச விசாரணையில்

ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 'உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

**இனப்பரம்பல் மாற்றியமைப்பு**

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்ற சகல பிரச்சினைகளையும் விளக்கமாக அமெரிக்கச் செயலரிடம் தெரிவித்தோம். இராணுவப் பிரசன்னம், சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு, மக்களின் காணிகள் இராணுவ முகாம்களுக்காக சுவீகரிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை, சிங்கள மயமாக்கல் உள்ளிட்ட இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகள் தொடர்பில் அவரிடம் குறிப்பிட்டோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, மக்களின் மீள்குடியமர்வு, காணாமற்போனோர் தொடர்பிலும் இன்னமும் தீர்க்கப்படாமல் தொடரும் பிரச்சினைகளையும் அவருக்குத் தெளிவாக எடுத்துரைத்தோம்.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 5 ஆண்டுகளாகியும் இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படாமை தொடர்பிலும் சுட்டிக்காட்டினோம்.

**சர்வதேச விசாரணையே வழி**

போர்க் குற்றம் மற்றும் காணாமற்போனோர் தொடர்பில் இலங்கை அரசினால் கடந்த இரண்டு வருடங்களில் எந்தவொரு ஆக்கபூர்வமான விசாரணையும் முன்னெடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் சர்வதேச விசாரணையே ஒரே வழி.

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி, ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படும் அமெரிக்கப் பிரேரணை அமைய வேண்டும் என்று எம்மால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த நிஷா, கடந்த இரண்டு வருடங்களைப் போன்றல்லாமல், இம்முறை மிகக் கடுமையான பிரேரணையைக் கொண்டு வருவதற்கு அமெரிக்கா இயலுமானவரை முயற்சிக்கும் என்று பதிலளித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டார்.

அத்துடன் வடக்கு மாகாண சபைத் தேர்தலை மாத்திரம் நடத்தினால் போதாது. அதனைக் கொண்டு நடத்துவதற்கு அரசு அனுமதிக்க வேண்டும். வடக்கு மாகாண சபையை முடக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதைச் சுட்டிக்காட்டினோம். எமது கருத்தை அவர் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்- என்றார் சுமந்திரன். (த-5)

## மன்னார்

யும், எச்சங்களையும் வெளியில் அகற்றி பெட்டிகளில் அடைக்கும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன் பிரகாரம் 19 ஆவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்ட பணிகளின்போது, 5 மனித எலும்புக்கூடுகள் வெளியில் அகற்றப்பட்டு பாதுகாப்பாகப் பெட்டிகளில் அடைக்கப்பட்டன.

பெட்டிகளில் அடைக்கும் பணிகள் நேற்று நிறைவடைந்த பின்னர் புதைகுழியின் தோண்டும் பணிகள் நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாகவும், எதிர்வரும் 10 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-56)

## நிஷா தேசாய்

பிரதிநிதியாக நிஷா இலங்கைக்கு நேற்று வருகை தந்தார்.

இன்று காலை 8.30 மணிக்கு பலாலி விமான நிலையத்துக்கு விசேட விமானத்தில் வந்திறங்கும் நிஷா பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார். உதவிச் செயலருடன், அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே.சிசனும் வருகை தரவுள்ளார். (த-5)

## வன்முறைகளில்

சாட்சிகளையும் பாதுகாப்பதற்கு உத்தேச புதிய சட்டம்; ஒரு திருப்புமுனையாக அமையுமெனவும் அமைச்சர் ஹக்கீம் நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்று முற்பகல் இலங்கை வந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால்,பிரதி உதவிச் செயலாளர் அடுல் கெஷாப், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே.சிஸன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சில் நேற்றுப் பிற்பகல் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது நாட்டின் குற்றவியல் சட்டம் தொடர்பாகவும், நாடாளுமன்றில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் மத ஸ்தலங்களின் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், எரியூட்டல் சம்பவங்கள் அதிகரித்திருப்பது பற்றி விசனம் தெரிவித்த நிஷா தேசாய் பிஸ்வால், அவற்றைத் தடுப்பதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருப்பதையிட்டு அமைச்சர் ஹக்கீமிடம் கவலை வெளியிட்டார்.

அதன் பின்னணியை எடுத்துரைத்த அமைச்சர் ஹக்கீம், அவ்வாறான சந்தர்ப்பங் களில் சட்டத்தையும் ஒழுங் கையும் நிலை நாட்டுவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் வணக்கஸ்தலங்கள் மீதான தாக்குதல்களுக்குத் தூண்டுகோலாக அமைந்த இனவாதத்தைத் தூண்டும் சிலரின் வெறுப்பூட்டும் பேச்சுக்களின் விபரீதம் குறித்தும் விளக்கினார். (த-4)

## சர்வதேச விசாரணையால்

மொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை விடுக்கப்பட்டால் அது முழுக் காலத்தையும் உள்ளடக்கியதாக அமையும். பயங்கரவாத நடவடிக்கைகள் தலைதூக்க ஆரம்பித்த 1980 ஆம் ஆண்டிலிருந்து, இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்த காலத்தையும் உள்ளடக்கியதாகவே சர்வதேச விசாரணை அமையும். அது இந்தியாவைப் பாதிக்கும்' என்று லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையில் சர்வதேச விசாரணை என்ற சரத்து உள்ளடக்கப்படவேண்டும் என்றும், அந்தப் பிரேரணையை இந்தியாவே முன்மொழிய வேண்டும் என்றும் தமிழ்நாட்டிலிருந்து பலமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே லலித் வீரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். (த-5)

## திக்கம்

களுக்குச் சமுகமளிக்க வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1970 ஆண்டு காலப்பகுதியில் தமிழர் விடு தலைக் கூட்டணியில் அங்கம் வகித்த தமிழரசுக் கட்சியின் பருத்தித்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கையை அடுத்து பனை சார்ந்த தொழிலைக் கொண்ட மக்களுக்காக அரசிடமிருந்து பனை அபிவிருத்தி சபை இந்த வடி சாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டது. தொடர்ந்து மறைந்த நாடாளுமன்ற உறுப் பினர் துரைரத்தினம், உடுப்பிட்டித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் இராசரத் தினம் ஆகியோரின் முயற்சியால் 1982 - இல் திக்கத்தில் பனஞ்சாராய சாலை ஆரம்பிக்கப்பட்டது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்க வடமராட்சிக் கொத்தணியால் இது நடத்தப்பட்டு வந்தது.

பின்னர் வடிசாலையின் அபிவிருத்திக்கான நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பனை அபிவிருத்தி சபையிடம் இந்த வடிசாலை கையளிக்கப்பட்டது. பனை அபிவிருத்திச் சபை ஒப்பந்த அடிப்படையில் அதனைக் கொத்தணிக்கு வழங்கியிருந்த நிலையில் அது இன்று வரை இயங்கி வருகின்றது.

கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் பனை அபிவிருத்தி சபை, கொத்தணியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் முடிவுற்ற நிலையிலேயே வடிசாலையை தென்பகுதி நிறுவனம் ஒன்றிடம் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த வடிசாலையில் சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான ஒன்றரை லட்சம் லீற்றருக்கு அதிகமான மதுசாரம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அது தென்பகுதி நிறுவனம் ஒன்றுக்கு கையளிக்கப் படவுள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினத்தைத் தொடர்பு கொண்டு கேட்ட போது;

திக்கம் வடிசாலையை இயங்க வைக்க வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் கொத்தணிக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியிருந்தோம். வடிசாலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. இதனால் பணியாளர்களுக்கான சம்பளம் வழங்க முடியாத நிலை காணப்பட்டது. குறிப்பிட்ட சில காலம் பணியாளர்களுக்கான சம்பளப் பணத்தைப் பனை அபிவிருத்தி சபையே வழங்கி வந்தது.

வடிசாலையை மேம்படுத்தி உற்பத்திக்கு வெளிநாடுகளின் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு கம்பனி முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்து மீள இயக்கவுள்ளோம். அவ்வாறு இயங்க இன்னும் சில மாதங்கள் தேவைப்படுகின்றது. எந்தக் கம்பனிக்கு வழங்குவதென இன்னமும் தீர்மானிக்கவில்லை. வடிசாலை புனரமைக்கப்பட்டுப் பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டே கம்பனி நிர்வாகத்தில் செயற்பட ஆரம்பிக்கும். அதில் கிடைக்கும் இலாபத்தில் 20 வீதம் மக்கள் நலன் சேவைகளுக்கும் மிகுதி இலாபம் தொழிலாளர்களுக்கும், கம்பனிக்கும் பகிரப்படவுள்ளன.

தற்போது பணிபுரியும் 24 பணியாளர்களில் ஒருவர் அரச நியமனம் பெற்றுச் செல்கின்றார். 12 பேருக்கு வேறு இடங்களில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணியாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. அவர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டால் நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார் அவர். (த-400-173)

## முன்னறிவிப்பின்றி

மீது தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.இதனையடுத்து இ.போ.ச. பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றும் நேற்றுமுன்தினமும் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் தனியார் பஸ் நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் என 6 பேரைக் கைது செய்துள்ளதாக யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார். இந்தப் பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் 5 ஆம் திகதி அரச அதிபருடன் கலந்துரையாடப் படவுள்ளது என்று அரச மற் றும் தனியார் பஸ் சங்கங்க ளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து சென்ற பருத்தித்துறை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஸின் சாரதியே யாழ். ஆரிய குளம் பகுதியில் வைத்து தனி யார் பஸ்காரரால் தாக்கப்பட் டார் என்று இ.போ.ச பணியாளர்கள் தெரிவித்தனர். அதனையடுத்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ்.பஸ்நிலையத்துக்கு அருகில் நிறுத்தப்படும் தனியார் பஸ்களை அந்த இடத்திலிருந்து அகற்றிப் பண்ணைக்குக் கொண்டு செல்லுமாறும் கோரி நேற்றுக் காலை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதாக இ.போ.ச பஸ் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அந்த இடத்திலிருந்து தனியார் பஸ்கள் அனைத்தும் பொலிஸாரால் அகற்றப்பட்டதை அடுத்து இ.போ.ச பணியாளர்கள் பணிக்குத் திரும்பினர். பணிப்புறக்கணிப்புத் தொடர்பில் அரச மற்றும் தனியார் பஸ் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் யாழ்.மாவட் டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸின் அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. அங்கு கலந்துரையாடப்பட்டதன் அடிப்படையில் யாழ்.பஸ் நிலையத்துக்கு அருகே தனியார் பஸ்களை நிறுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து தனியார் பஸ்கள் அங்கு கொண்டு சென்று நிறுத்தப்பட்டன.

அதனால் இ.போ.ச பணியாளர்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பஸ்கள் அனைத்தும் யாழ்.டிப்போவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. நேற்று இரண்டு தடவை அரச பஸ்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இ.போ.ச பருவகாலச் சீட்டுப் பெற்றிருந்த மாணவர்கள் தனியார் பஸ்களில் செல்லப் பணம் இல்லாமையால் அந்தரித்தனர்.

நேற்றைய தாக்குதல் தொடர்பில் தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் பொ.கெங்காதரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

யாழ். பஸ் நிலையத்திலிருந்து அரச பஸ் புறப்பட்ட போதும் அது மெதுவாகவே சென்றுள்ளது. அதனால் அதன்பின்னர் புறப்பட்ட தனியார் பஸ்காரர் அரச பஸ் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தனியார் பஸ்களுக்குக் குறித்த நேர வரையறையுள்ளது. அரச பஸ்காரருக்கு அது இல்லாதமையால் இந்தப் பிரச்சினை தொடர்கிறது. நேற்றைய சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்ட அரச பஸ் சாரதி ஏற்கனவே அச்சுவேலி தனியார் பஸ் சாரதியாகப் பணியாற்றியவர்.பின்னரே அரச பஸ் சாரதியானார். அவ்வாறான சிலராலேயே இந்தப் பிரச்சினை தொடர்கிறது - என்றார்.

இதேவேளை, நேற்று மாலை வடமராட்சிப் பகுதியில் வைத்து 5 இ.போ.ச பஸ்கள் மீது கல் வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதன் போது இருவர் காயமடைந்துள்ளனர்.

(த-4-14-17-173-400)

## ஐ.நாவின்

நெடுக்கப்பட்ட கணக்கெடுப்பு அறிக்கை வெளிவரும் போது தெரியவரும் என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற போர் நடவடிக்கை காரணமாக உயிரிழந்தோர், காயமடைந்தோர், சொத்துப் பாதிப்பு ஆகியன தொடர்பில் இலங்கை புள்ளிவிவரவியல் திணைக்களத்தினால் கடந்த டிசெம்பர் மாதம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கணக்கெடுப்பு அறிக்கை ஜெனிவா மனித உரிமை அமர்வுக்கு முன்னதாக வெளியிடப்படும் என்று புள்ளி விவரவியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

'போர்க் காலத்தில் ஏற்பட்ட மரணங்கள், காணாமற்போனவர் கள், காயமடைந்தவர்கள், அங்கவீனமுற்றவர்கள், சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு தொடக்கம், 2009 மே வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கியதாக இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தரவுகளை ஆராய்ந்து இறுதி அறிக்கை இந்த மாதம் வெளியிடப்படும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கணக்கெடுப்பு அறிக்கையினூடாக, இறுதிக் கட்டப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு பொய்யானதாகும் என்று மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கணக்கெடுப்பு முறையாக நடத்தப்படவில்லை எனத் தெரிவித்து, இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## சர்வதேச விசாரணை

காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் பதிலளித்த எட் மில்லிபான்ட், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையில், ஐ.நாவின் மேற்பார்வையிலான சர்வதேச விசாரணை என்ற சரத்தும் உள்ளடக்கப்பட வேண்டும். அதற்கு தாம் முழுமையான ஆதரவை வழங்குவோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## உள்நாட்டு

மூன்று நாள்கள் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி வெளியுறவுச் செயலர் நிஷா பிஸ்வாலிடம் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி. எல் பீரிஸ் இந்த நிலைப்பாட்டைக் கூறியுள்ளார்.

"போரின் பின்னரான சூழலில் கிடைத்துள்ள பொன்னான சந்தர்ப்பத்தை இலங்கை இழந்துவிடும் என்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் அச்சம் அதிகரித்துவருவதாக" அமெரிக்காவின் உதவி வெளியுறவுச் செயலர் நிஷா பிஸ்வால், தம்மிடம் கூறியதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போரின் வடுக்களை ஆற்றுவதில் இலங்கை வேகமாக இயங்கவில்லை என்றும், இந்த ஆறாத வடுக்கள் மீண்டும் மோதல்களை தோற்று விக்கக் கூடும் என்றும் அமெரிக்க உதவி வெளியுறவுச் செயலர் சுட்டிக்காட்டியதாக வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இலங்கையில் மீண்டும் மோதல் ஏற்படுவதை மக்கள் விரும்பவில்லை என்றும் 'அமெரிக்காவின் செயற்பாடு அடுத்தவர் விடயத்தில் மூக்கை நுழைக்கும் வேலை என்றும், ஊருக்கு உபதேசம் செய்வது என்றும்' கூறியுள்ளார்.

இலங்கைக்காக சுட்டிக்காட்டப்படும் ஏற்பாடுகள் மற்ற நாடுகளின் விவகாரத்தில் கைக்கொள்ளப் படுவதில்லை என்றும், இலங்கை சமமாக நடத்தப்படவில்லை என்றும் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால், 'இலங்கைக்கு எதிரான நிகழ்ச்சி நிரல் எதனையும் அமெரிக்கா கைக்கொள்ளவில்லை' என்றும், அமெரிக்க அரசு அடித்தளமாகக் கொண்டுள்ள சில விடயங் களில் அமெரிக்கா உறுதியா கத்தான் நின்றாக வேண்டும்' என்றும் பிஸ்வால் இலங்கை அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கையின் சொந்த பொறிமுறையைக் கையாளுமாறு அமெரிக்கா கோரிவந்தது. ஆனால், இலங்கை அதற்காக வழங்கப்பட்ட வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று கவலைகள் உள்ளன' என்றும் அமெரிக்க பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார். (த-சி)

# 123 பந்துகளில் 112 ஓட்டங்கள் விளாசி கொக்குவில் இந்துவின் சத்தியன் அதிரடி

வலி வடக்கு, பெப். 1

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளின் 19 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்தப்படும் கிரிக்கெட் போட்டியின் ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி வீரன் சத்தியன் அதிரடியாக 123 பந்துகளில் 112 ஓட்டங்களைப் பெற்று அணியின் இனிங்ஸ் வெற்றிக்கு வழி சமைத்தார்.



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 35.1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது.

நிகேஷ் 20 ஓட்டங்களையும், நிமலேந்திரன் 19 ஓட்டங்களையும், நிதுசன் 15 ஓட்டங்களையும், மதிரூபன் 14 ஓட்டங்களையும், கீர்த்தனன் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 4 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியை சேர்ந்த பவித்திரன் 14.1 பந்துப்பரிமாற்றங்கள் பந்த வீசி 39 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் தனலக்சன் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் பார்த்தீபன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சத்தியன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 85.1 பந்துப்பரிமாற்றங்களில் 331 ஓட்டங்களை பெற்று 08 இலக்குகளை இழந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

சத்தியன் 14 நான்குகள் ஒரு ஆறு அடங்கலாக 112 ஓட்டங்களையும் லிங்கநாதன் 4 நான்குகளுடன் 51 ஓட்டங்களையும், நிஷாந்தன் 40 ஓட்டங்களையும், கபிலன் 39 ஓட்டங்களையும், பார்த்தீபன் 36 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணக் கல்லூரியை சேர்ந்த கீர்த்தனன் 26 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 72 ஓட்டங்களுக்கு 04 இலக்குகளையும் ஸ்ரீலக்ஷன், நிமலேந்திரன், நிலக்ஷன் முறையே 23,42,73 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 34.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

ரவிவர்மன் 20 ஓட்டங்களையும், மதிரூபன் 16 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 11 ஓட்டங்களும் பெறப்பட்டன. (த-86)

## தாச்சிப்போட்டி இன்று

யாழ்ப்பாணம். பெப்.1

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்கத்தின் அனுமதியுடன் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள தாச்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே மின்னொளியில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியிலே இன்று சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு தையிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

மேற்படி இரு கழகங்களுக்கும் கடந்த 25 ஆம் திகதி இரவு போட்டி நடைபெற்று தலா ஆறு புள்ளிகளை சமமாக போட்டி நேரத்தில் பெற்றதனால் மீள இந்தப் போட்டி வெற்றியை நிர்ணயிப்பதற்காக இன்று நடைபெறுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (த-288)

## யாழ். பிரதேச செயலக துடுப்பாட்டப் போட்டி



யாழ்ப்பாணம், பெப்.1

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டிகள் இன்றும், நாளையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் கொழும்புத்துறை ஜெட் மைதானத்தில் இடம்பெறவுள்ளன என விளையாட்டு உத்தியோகத்தர் நித்திலநாயகம் அறிவித்துள்ளார். (த-23)

## கரைச்சிப் பிரதேச செயலகம் நடத்தும் போட்டிகள் இன்று

கிளிநொச்சி, பெப்.1

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கபடி, எல்லே, உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை உருத்திரபுரம் உழவர் ஒன்றிய மைதானத்தில் காலை 8.30 மணி முதல் மாலை வரை இடம்பெறவுள்ளன. (த-23)

## நக்கீரன், றேஞ்சர்ஸ் அணிகள் உதைபந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.1

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.



இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

அதில் நக்கீரன் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம் பெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## மன்னார் அஸ்ஹர் பாடசாலையின் மரத வீதியோட்ட போட்டியின் முடிவுகள்



வீதியோட்டத்தில் ஈடுபட்டுள்ள வீரர்கள்

மன்னார்,பெப். 1

மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் 2014 ஆம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டுப்போட்டிகளின் முதல் நிகழ்வான வீதியோட்டப்போட்டிகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் பாடசாலையின் அதிபர் ஜனாப் எம்.வை.மாஹீர் தலைமையில் மன்னார் பிரதான பாலத்தில் ஆரம்பமானது. போட்டியைப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவரும், மன்னார் நகர சபையின் உறுப்பினருமான என்.நகுசீன் ஆரம்பித்து வைத்தார்.

குறித்த வீதியோட்டப் போட்டி பாலத்தில் ஆரம்பமாகி மன்னார் செபஸ்தியார் ஆலய வீதி, வைத்தியசாலை வீதி, பொது விளையாட்டு மைதான வீதி,மூர் வீதி, உப்புக்குளம்,பள்ளிமுனை வீதியூடாக மன்னார் பஸார் பகுதியைச் சென்றடைந்து பின் பாடசாலையில் நிறைவடைந்தது.

இதன் போது 15 வயதுக்கு உட்பட்ட போட்டியாளர்களில் முதலாம் இடத்தை தாஜ் இல்லத்தைச் சேர்ந்த எம்.முஜாகித்,2 ஆம் இடத்தை சிறாஜ் இல்லத்தைச் சேர்ந்த ஆர். எம்.சறிம்,3 ஆம் இடத்தை தாஜ் இல்லத்தைச் சேர்ந்த என்.வஸீம் ஆகியோர் தட்டிச் சென்றுள்ளனர்.

15 வயதுக்கு மேற்பட்ட போட்டியாளர்களில் முதலாம் இடத்தை தாஜ் இல்லத்தைச் சேர்ந்த கே.கிறிஸ்ரி,2 ஆம் இடத்தை தாஜ் இல்லத்தைச் சேர்ந்த எஸ்.டினோன், 3 ஆம் இடத்தை சம்ஸ் இல்லத்தைச் சேர்ந்த ஏ.ஜோய் வில்மட் ஆகியோர் தட்டிச் சென்றுள்ளனர். (த-56)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.1

அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழகம் சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செனிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், பெப்.1

கரவெட்டி பிரதேச பிரிவு இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்களுக்கான எல்லே போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், பெப்.1

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

வவுனியா, பெப்.1

வவுனியா வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் நியூபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், பெப்.1

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டப்போட்டி இன்றும் நாளையும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

முதலாவது ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக்கழக அணி மோதும்.

இரண்டாவது ஆட்டத்தில் வரணி இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிறி மகா விஷ்ணு விளை யாட்டுக்கழக அணி மோதும்.

மூன்றாவது ஆட்டத்தில் நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கச்சாய் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதும்.

நான்காவதாக இடம்பெறும் ஆட்டத்தில் மீசாலை இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதும்

ஐந்தாவதாக இடம்பெறும் ஆட்டத்தில் கச்சாய் விக்டோரியார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காந்தி விளையாட்டுக்கழக அணி மோதும். (த-23)

# 2015 இல் அதிகூடிய ஏலம்

## குமார் சங்கக்கார நம்பிக்கை

இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் அடுத்தாண்டு இடம்பெறவுள்ள ஏலத்தின்போது அதிக பெறுமதியுள்ள ஒப்பந்தத்தைப் பெறக் கூடியதாக அமையும் என இலங்கை அணியின் குமார் சங்கக்கார குறிப்பிட்டுள்ளார்.
ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள இந்தியன் பிறீமியர் லீக் தொடருக்கான ஏலத்தில் பங்குபற்றவுள்ளவர்களுக்கான பட்டியலிலே குமார் சங்கக்கார இடம்பெற்றிருக்கவில்லை.
இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள குமார் சங்கக்கார, இந்த ஆண்டுக்கான இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் இரண்டரை வாரங்கள் மாத்திரமே பங்குபற்றக்கூடியதாக உள்ள நிலையில், இந்தியன் பிரீமியர் லீக் அணியின் உரிமையாளர்கள் அதிக விருப்பத்தை வெளிப்படுத்தமாட்டார்கள் என்ற நிலை காணப்படுவதாகக் குறிப்பிட்டார். அடுத்த ஆண்டுக்கான இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் முழுமையாகப் பங்குபற்ற முடியுமென்ற நிலையில், அடுத்த ஆண்டுக்கான ஏலம் இடம்பெறும்போது அதிக பெறுமதியிலான ஒப்பந்தமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமென நம்புவதாகவும், எனவே இந்த ஆண்டுக்கான தொடரில் பங்குபற்றாமல் விட்டமை நடைமுறை நிலைமையைக் கருத்திற் கொண்டே எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.
இந்தியன் பிறீமியர் லீக் தொடர் ஆரம்பித்து 20 நாள்களில் இலங்கை அணி அயர்லாந்து, இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் இலங்கை வீரர்கள் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் முழுமையாகப் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில் இலங்கையின் முன்னணி வீரர்களில் மஹேல ஜெயவர்த்தன, அஞ்சலோ மத்தியூஸ், திலகரட்ண டில்ஷான் ஆகியோர் இடம் பெற்றிருந்தபோதிலும், டினேஷ் சந்திமால் இடம்பெற்றிருக்கவில்லை. (த)



குமார் சங்கக்கார


# இந்தியா தொடர் தோல்வி

நியூஸிலாந்துக்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி தோல்வி அடைந்தது.
நியூஸிலாந்து சென்றுள்ள இந்திய அணி 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.
முதல் நான்கு போட்டியின் முடிவில் இந்திய அணி 03 எனத் தொடரை ஏற்கெனவே இழந்தது.
இரு அணிகள் மோதிய கடைசி ஒருநாள் போட்டி, ஹமில்டனில் நேற்று நடந்தது.
இதில் ஐந்தாவது முறையாக நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் அணித்தலைவர் டோனி களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.
இதனையடுத்து களமிறங்கிய நியூஸிலாந்து அணி, 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குக்கு 303 ஓட்டங்கள் எடுத்தது.
நீஷம் 34 ஓட்டங்களுடனும், ரான்கி 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.
இந்திய அணிக்கு ஆரோன் அதிகபட்சமாக 2 இலக்குகளைச் சாய்த்தனர், புவேனேஷ்வர், ஷமி கோஹ்லி ஆகியோர் தலா ஒரு இலக்கு கைப்பற்றினர்.
கடின இலக்கை துரத்திய இந்திய அணிக்கு, தொடக்க வீரர்கள் சொதப்பவே, கோஹ்லி மட்டும் தாக்குபிடித்து 82 ஓட்டங்கள் எடுத்தார். தொடர்ந்து வந்த அஷ்வின்(7), ரவிந்திர ஜடேஜா(5) ஏமாற்றினர்.
தனியாகப் போராடிய அணித்தலைவர் டோனி(47) அரைசதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.
பின்வரிசை வீரர்கள் ஏமாற்ற இந்திய அணி 49.4 பந்துப்பரிமாற்றங்களில் 215 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. 4-0 என்ற கணக்கில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி கிண்ணத்தை கைப்பற்றியது. (த)



இலக்கை வீழ்த்திய பிஞ்ச்

# இங்கிலாந்தை தொடர்ந்து போட்டுத் தாக்கும் அஸி.




ஜொஸ் ஹேஷல் வூட்

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட 20/20 சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது.
மெல்பேர்ண் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது.
வேகமான ஆரம்பத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும், இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து தடுமாறியிருந்தது. இறுதி நேரத்தில் ஓட்டங்கள் பெறப்பட்ட போதிலும், சிறந்த ஓட்டங்களைப் பெற அவ்வணி தடுமாறியிருந்தது.
துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொஸ் பட்லர் 27 பந்துகளில் 22 ஓட்டங்களையும், மைக்கல் லம்ப், ஜோ றூட், ரிம் பிறெஸ்னன், ஸ்ருவேர்ட் புறோட் (ஆட்டமிழக்காமல்) ஆகியோர் தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர்.
பந்துவீச்சில்ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜொஸ் ஹேஷல் வூட் 4 இலக்குக்களையும், நேதன் கோர்ட்டர் நைல், ஜேம்ஸ் முவ்றிஹெட் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றி னர் 131 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 14.5 பந்துப்பரிமாற்றங்களில்2 இலக்குகளைஇழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
முதலாவது இலக்காக 48 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி சார்பாக, 3 ஆவது இலக்குக்காக பிரிக்கப்படாத 78 ஓட்டங்கள் குவிக்கப்பட்டிருந்தன.
துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜோர்ஜ் பெய்லி 28 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களை யும், கமரன் வைட் 45 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ரிம் பிறெஸ்னன், ஜேம்ஸ் ட்றெட்வெல் இருவரும் தலா ஒரு இலக்கை க் கைப்பற்றினர்.
3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2 போட்டிகளின் நிறைவில் ஆஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-400)

# பிக்பாஷில் விளையாட மலிங்கவுக்கு அனுமதி

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பிக்பாஷ் 20/20 கிரிக்கெட் தொடரில் பங்கேற்க இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில், லசித் மலிங்க குறித்த போட்டித்தொடரில் இருந்து இடைநடுவில் நாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.
இலங்கையின் விசேட பயிற்சி நடவடிக்கைக்காக அவர் இவ்வாறு அழைக்கப்பட்டிருந்தார். எனினும் லசித் மலிங்க விளையாடும், மெல்பேர்ன் ஸ்ரார்ஸ் கழகம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் அவர் இந்த தொடரில் பங்கேற்க அனுமதித்துள்ளது. (த)


மெல்பேர்ன் ஸ்ரார் அணியில் மலிங்க

# இந்திய அணித் தெரிவை விமர்சிக்கும் நியூஸி.வீரர்

இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவு முறையைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார் நியூஸிலாந்தின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சைமன் டவ்ல்.
நியூஸிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இந்திய அணி தொடரை இழந்துவிட்டது.
இந்நிலையில் இந்திய அணியின் தெரிவு முறையை நியூஸிலாந்தின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சைமன் டவ்ல் விமர்சித்திருக்கிறார்.
இது குறித்து அவர் கூறுகையில், எங்கள் நாட்டின் துடுப்பாட்ட வீரர்கள் இந்திய சுழற்பந்து வீச்சாளர்களின் பலவீனங்களை அறிந்து எப்படி ஆட வேண்டும் என்பதைக் கண்டறிந்து விட்டார்கள் என்பது முதல் இரு ஒருநாள் போட்டிக்குப் பிறகு தெளிவாகத் தெரிந்தது.
ஆனாலும் இந்திய அணியோ ஜடேஜா மற்றும் அஸ்வினுக்கு வாய்ப்பு வழங்கியது.
அவர்கள் நன்றாக ஆடக்கூடியவர்கள் என்றாலும், அமித் மிஸ்ராவுக்கு வாய்ப்பு வழங்கியிருக்கலாமே. மற்றவர்களை விட அவர் நன்றாக ஆடுகளங்களை பயன்படுத்தி இருக்கலாமே என்று கூறியுள்ளார். (த)


சைமன் டவ்ல்

**G.C.E. A/L ICT**

**A/L 2014** Paper Class
Sat / Sun - 1 - 2 pm

**A/L 2016**
- Boolean Algebra
- Python
Sat / Sun - 3 - 4 pm

**A/L 2015**
- Operating System
- S/W Engineering
Sat / Sun - 4 - 5 pm

**A/L 2014 Repeat**
ஆரம்பத்திலிருந்து அனைத்துப் பாடங்களும்
Tue / Thu 5 - 6 pm

English / Tamil Medium 0776577359

**Mr.R.Kumaran-B.Sc.** #74, Sabapathy Lane, Jaffna

---

**NEW SCIENCE CENTRE**
வெலிங்டன் சந்தி, யாழ்நகர்.

**A/L 2016**
தொழில்நுட்ப பிரிவு
ஆரம்பம்: 02.02.2014
Sun:8.00A.M.

* Science Technology — Mr. K.Kajendran
* Engineering Technology — Mr. T.Ram
* Bio Technology — Mr. M.A.Niroshan

---

**விற்பனைக்கு**
QX- XXXX ஆட்டோ, 125-Benly Motor Cycle விற்பனைக்குண்டு.
077 5346278

---

**SPOKEN ENGLISH With GRAMMAR**
BY: Mr: M. A. HARI
புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.02.2014
திங்கள் மாலை 5.00 மணி
திங்கள் / புதன் } 5.00 - 6.00 pm
கலைவாணி மில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
0718474118

---

**யாழில் 01.02.2014 ஆரம்பம்.. புதிய உதயம்..**

**Sports CLUB**



விளையாட்டுத் திறமைமிக்க யாழ் குடா நாட்டின் வீர வீராங்கனைகளுக்குத் தேவையான சர்வதேச அளவிலான விளையாட்டு உபகரணங்களையும் விளையாட்டு உடைகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.
11.00 மணிமுதல் 12.00 மணிவரையுள்ள சுப நேரத்தித்தில் திறந்து வைக்ககப்பட்வுள்ளது.

No. 12, 1st Floor,Cargills Squere.
Tel : 021 222 3020

---

**BIT பட்டக்கற்கை**
# 26, Brown road, Jaffna
புதிய கல்வியாண்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
BIT Coordinator
**MIS BIT CAMPUS**
தொழினுட்பக் கல்லூரி எதிரில்....
கடந்த 13 வருடங்களாக யாழ் நகரில் TpNo: 0776577359

---

**C / Java programming**
6 months in Depth
பொறியியல் துறை மாணவர்களுக்கு..
ஏனையவர்களும் கற்கலாம்
0776577359
தொழினுட்பக் கல்லூரி எதிரில்
Mr.R.Kumaran-B.Sc. MIS BIT CAMPUS

---

**யாழில் புது பொலிவுடன்**

**New Lovers Corner**



காதலர் தின மாதத்தில் உங்கள் அன்புக்குரியவர்களை மகிழ்விக்க அன்புப் பரிசு
*China, Thailand, Malaysia, Singapore, India*
போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வெளிநாட்டு தரத்திலான எமது காட்சியறை 11.00 மணிமுதல் 12.00 மணிவரையுள்ள சுப நேரத்தித்தில் திறந்து வைக்கப்படவுள்ளது

No. 13, 1st Floor, Cargills Squere.
Tel : 021 222 7070

---

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

Batch1: 01.02.2014
Batch2: 03.02.2014
Batch3: 08.02.2014
Batch4: 10.02.2014

---

**சிறி நதியா**
டிஜிற்றல் கலர் லாப் அன்ட் ஸ்ருடியோ
தொ.பேசி 021 222 8412

தெற்காசியாவில் முதன்முறையாக ஜப்பான் தொழில்நுட்பத்திலான
NORITSU QSS Green II Dry Lab Printer
தற்போது யாழ் மண்ணில்



1440 Dpi HD Photo Printing
6x4 to 13x25" HD Photo Printing
Double Side HD Photo Printing
Ultra HD Synthetic Album Printing
HD Sticker Printing
Greeting Cards And Photo Calender

எமது பெறுமதிமிக்க புகைப்பட வல்லுனர்களான வாடிக்கையாளர்களுக்கு அதியுயர் தொழில்நுட்பத்திலான சேவைகள் அடுத்த சில தினங்களில்...

**Ultra HD Synthetic Album**

இல.108 A.லக்ஸன் பிளஸாகட்டிடம்.நாவலர் வீதி யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.